இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33°c
குறைந்த வெப்பநிலை 27°c
வெப்பமான காலநிலை


சிறந்த தொழில்வாய்ப்புக்கு ஆங்கில அறிவு அவசியம் பக். 03


ஆம்ஆத்மி – பா.ஜ.க. டில்லியில் மோதல் பக். 06


இன்று ரவூப் ஹக்கீம்: நாளை யார் யாரோ? பக். 12


டோனியை மிஞ்சிய கோஹ்லி பக். 23


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ் : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 | கதிர்: 101 | வள்ளுவர் ஆண்டு: 2045 | மாசி 23, வெள்ளி 07.03.2014


## 4 பொலிஸார் பணி நீக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 07
கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.
திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து நீதிவானிடம் கொண்டு

21 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சு ஐ.நாவின் தீர்மானத்தில் வரவேண்டும்

### தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து. அமெ, இந்தியா, பிரிட்டனுடன் இது பற்றி உடன் பேச முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்.07
இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு நடக்கவேண்டும் மற்றும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணை வேண்டும் ஆகிய விடயங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இம்முறை நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இதனை வலியுறுத்துவதற்காக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர் பேச்சுக்களை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் பிற்பகல் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இந்த முடிவை எடுத்துள்ளது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தின் முதல்

21 ஆம் பக்கம் பார்க்க


# ஐ.நா. விசாரணைக்கு நவிபிள்ளை பரிந்துரை

பிந்திய செய்தி

### ஐந்து வருடங்களாக அரசு ஏமாற்றியதால் நடவடிக்கை: தனது கடைசி வருடாந்த உரையில் நேற்று இதனை வலியுறுத்தினார்

ஜெனிவா, மார்ச் 7
இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்என்று பரிந்துரைத்திருக்கிறார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை.
ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வில் தனது வருடாந்த உரையை ஆற்றிய நவிபிள்ளை, சர்வதேச விசாரணைக்கான இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.
இலங்கை மீது இந்த அமர்வில் அமரிக்காவால் முன்மொழியப்படும் தீர்மான வரைவில் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படாத போதும் நவிப்பிள்ளை தனது பூர்வாங்க உரையிலேயே சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.
"இலங்கையில் மோதல்கள் முடிவுற்று கிட்டத்தட்ட 5 வருடங்கள் கடந்துவிட்டபோதும்

21 ஆம் பக்கம் பார்க்க



## யாழில் சில இடங்களில்நிறை குறைந்த பாண்

யாழ்ப்பாணம்.மார்ச்.7
யாழ். மாவட்டத்தில் உள்ள சில குறிப்பிட்ட பேக்கரிகளில் தயாரிக்கப்படும் பாணின் நிறை நிர்ணயிக்கப்பட்ட நிறையை விடக் குறைவாக இருப்பதை யாழ். மாவட்டப் பாவனையாளர் அதிகாரசபை இனங்கண்டுள்ளது.
ஒரு இறாத்தல் பாணின் நிர்ணயிக்கப்பட்ட நிறை 450 கிராமாக உள்ள. நிலையில் சில குறிப்பிட்ட பேக்கரிகளில் நிறை குறைந்த பாண் தயாரிக்கப்பட்டுப் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
ஏற்கனவே மாறுபட்ட விலைகளில் பாண் விற்பனை செய்யப்படுவது தொடர்பாகப் பாவனையாளர்களால் விசனம் தெரிவிக்கப்பட்ட நிலையில்,

21 ஆம் பக்கம் பார்க்க



பாதசாரிகள் கடவையில் நடந்து சென்ற சக மாணவன் பஸ்ஸினால் மோதப்பட்டுப் படுகாயமடைந்ததை கண்டித்துப் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் ஏ - 9 வீதியை மூடி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தமிழினத்தின் காவலர்கள்' என்ற சுவரொட்டியுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச்.07
'சர்வதேசம் எமக்கான நீதியைப் பெற்றுத் தரவில்லையாயின், குற்றம் இழைத்தவர்களை நாம் தான் தண்டித்து எமக்கான நீதியை நிலை

21 ஆம் பக்கம் பார்க்க

## கர்ப்பிணியான தனது மனைவியை கொன்றவருக்கு சாவுத் தண்டனை

யாழ்ப்பாணம், மார்ச் 07
கர்ப்பிணிப் பெண்ணான தனது மனைவியைக் கழுத்து நெரித்துக் கொலை செய்த குற்றத்துக்காக அவரது கணவருக்கு யாழ்.மேல் நீதிமன்று சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலை

21 ஆம் பக்கம் பார்க்க

# மஞ்சள் கடவையில் மாணவனை மோதி வியாபார நிலையங்களுள் புகுந்தது பஸ்

### பளையில் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் 20 பேர் வரை காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 07
கிளிநொச்சி, பளைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் மஞ்சள் கடவையில் மாணவனை மோதியதுடன் வியாபார நிலையங்களுக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியது. இதனால் மாணவன் படுகாயமடைந்ததுடன் சுமார் 20 பேர் காயமடைந்தனர்.
வியாபார நிலையங்களுக்கும் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.
ஏ-9 வீதியில் பளை மத்திய கல்லூரிக்கு முன்பாகப் பாதசாரிக் கடவை அருகில் நேற்றுக்காலை 7.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.
வன்னியில் அரச திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களை யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் ஏற்றிச் செல்லும் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.
விபத்தினால் பஸ்ஸில் பயணித்தவர்கள் மாத்திரமன்றி வியாபார நிலையங்களில் நின்றிருந்தவர்களும் படுகாயமடைந்தனர். பஸ் மோதியத

21 ஆம் பக்கம் பார்க்க

# விபத்தை அடுத்து மாணவர் மறியல்

யாழ்ப்பாணம், மார்ச், 07
பளையில் நேற்று இடம்பெற்ற விபத்தையடுத்து பளை மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று ஏ-9 வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் வீதியூடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது. ஆர்ப்பாட்டம் காரணமாகப் பாடசாலை மாணவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.
பின்னர் பொலிஸார் தலை

21 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் ஓய்வு மண்டபம் இன்று திறப்பு

வலி.வடக்கு, மார்ச் 7

கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சின் நிதி உதவியுடன் இலங்கைத் தேசிய நீர் உயிரின அதிகார சபையின் அனுசரணையுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரணை மடு நன்னீர் மீனவர் ஓய்வு மண்டபத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த இளைப்பாற்று மண்டபத்தை கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்தினவும் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்னவும் இணைந்து திறந்து வைப்பர். (து-86)

# தமிழ் மக்களின் மீள்குடியமர்வு குறித்து சர்வதேசத்துக்கு முரண்பட்ட தகவல்கள்

### ஜனாதிபதி,செயலாளர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் வழங்குகின்றனர்

யாழ்ப்பாணம்,மார்ச் 7

ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரால் தமிழ் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் சர்வதேச சமூகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வடக்கு கிழக்கில் இன்னமும் 7 ஆயிரத்து 500 பேர் வரையிலேயே மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் கடந்த ஜனவரி மாத இறுதியில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அங்கு வைத்து ஏ.எவ்.பி செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில், போரினால் இடம்பெயர்ந்த 3 லட்சம் மக்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இன்னமும் 50 ஆயிரம் பேர் வரையிலேயே மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர் எனத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வவுனியாவில் வைத்து உரையாற்றுகையில், இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் என்று யாருமே இல்லையென தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே மீள்குடியமர்வு தொடர்பில் ஜனாதிபதி, ஜனாதிபதியின் செய்லாளர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்களைத் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலேயே வலி. வடக்கைச் சேர்ந்த 9 ஆயிரத்து 905 பேர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்று தெல்லிப்பழை பிரதேச செயலக அரச ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், வெளிவிவகார அமைச்சர் சர்வதேச மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு பிழையான தகவல்களை வழங்கியுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (த-5)

## இரும்பு கடத்திய லொறி கைதான மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம் , மார்ச் 7

ஆட்லறி ஷெல் குழாய்கள் மற்றும் துண்டுகளாக்கப்பட்ட தண்டவாளங்கள் உள்ளிட்ட இரும்புகளை கொழும்புக்குக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட புத்தளத்தைச் சேர்ந்த பிரதான சந்தேக நபரையும் லொறியின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரையும் 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க யாழ்.நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த லொறி யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோயிலை அண்மித்துப் பயணித்துக் கொண்டிருந்த போது யாழ். விஷேட பொலிஸ் பிரிவினர் சுற்றிவளைத்து மடக்கினர். அந்த லொறி யாழ்.பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு இரும்புகள் இறக்கப்பட்டு ஷெல் குழாய்கள், தண்டவாளங்கள் மீட்கப்பட்டன.

அதில் 73 தண்டவாளத் துண்டுகள், ஆட்லறிஷெல் குழாய்கள் 113 என்பவற்றுடன் பழைய இரும்புகளை பொலிஸார் மீட்டனர். ஆட்லறி ஷெல் குழாய்களில் 6 குழாய்கள் ஏற்கனவே பொலிஸாரால் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டவை என்றும், அவற்றில் குறிக்கப்பட்டிருந்த குறியீடு அதனை உறுதி செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அந்த 6 ஷெல் குழாய்களும் எவ்வாறு வெளியே போயின என்பது பற்றித் தெரியவில்லை.

கைது செய்யப்பட்ட லொறியின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் மானிப்பாய் மற்றும் நீர்வேலியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ-4)

## பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல்

வலி.வடக்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் இனம் தெரியாதவர்களினால் தாக்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் வீட்டின் முன்னால் பூ பறித்துக் கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவர் பொல்லினாலும் இரும்புக் கம்பியினாலும் அவரைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள்.

அளவெட்டி மேற்கை சேர்ந்த கந்தசுவாமி மயூரதன் (வயது -33) என்பவரே தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

தெல்லிப்பழை பொலிஸார் இந்தத் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-86)

## கடற் பாதுகாப்புக் குழுவில் மொறிசியஸ் வேண்டாம்

### இந்தியாவிடம் இலங்கை அதிருப்தி என்கிறார் மேனன்

புதுடில்லி, மார்ச் 7

முத்தரப்பு கடல் பாதுகாப்புக் குழுவில் மொறிசியஸ் இணைந்து கொள்வது தொடர்பில் இலங்கை அதிருப்தி வெளியிட்டுள்ளதாக இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு மொறிசியஸும் இணை அனுசரணை வழங்கியுள்ளதால்,இலங்கை இது தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக மேனன் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

இந்தியா - இலங்கை மாலைதீவு நாடுகள் கலந்துகொள்ளும் முத்தரப்புக் கடல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்றுப் புதுடில்லியில் தொடங்கியது. இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துகொண்டுள்ளார்.

இந்த மாநாட்டில் அவதானிப்பாளர்களாக மொறிசியஸ் மற்றும் சிசெல் ஆகிய இரு நாடுகளும் கலந்துகொண்டிருந்தன. அவர்கள் எதிர்காலத்தில் இந்த முத்தரப்புக் கடல் பாதுகாப்புக் குழுவில் முழுநேர உறுப்பினர்களாகச் சேர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக மேனன் தெரிவித்தார்.



சிவ்சங்கர் மேனன்

இதற்கு இலங்கை அதிருப்தி வெளியிட்டுள்ளது. அயலவர்களுக்கிடையே உண்மை கட்டியெழுப்பப்படுவதே தேவையாக இருப்பதாக இலங்கை இதன் போது குறிப்பிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் விவகாரத்தால் டில்லிக்கும், கொழும்புக்கும் இடையே பதற்றமான நிலைமை நிலவுகின்றது. அத்துடன் இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் மறுவாழ்வு தொடர்பிலும் முரண்பாடுகள் நிலவுகின்றதே என்று ஊடகவியலாளர்கள் மேனனிடம் கேட்டனர். அது அரசியல் என்று அவர் பதிலளித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியளிக்க இந்தியா தயாராக இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம், சிவ்சங்கர் மேனன் தெரிவித்தாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-5)

## இலங்கைக் கடற்படையினரை இன்ரபோல் மூலம் பிடியுங்கள்

### இந்திய அரசிடம் ராமதாஸ் கோரிக்கை

சென்னை, மார்ச் 7

வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை படையினர் கைது செய்வது கடந்த சில நாள்களாக அதிகரித்திருக்கும் நிலையில் இன்ரர்போலின் உதவியுடன் இலங்கைக் கடற் படையினரைக் கைது செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காரைக்கால் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 32 மீனவர்கள் கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். இதனால் ஏற்பட்ட அதிர்ச்சி விலகுவதற்கு முன்பாகவே கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்த தொண்டி நாட்டுப் படகு மீனவர்கள் 15 பேரும், இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் 10 பேரையும் அவர்களின் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் சிறைப் பிடித்துச் சென்றுள்ளனர்.

தமிழ்நாடு - இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஜனவரி 27 ஆம் திகதி நடந்த முதல்கட்டப் பேச்சுக்களுக்கு முன்பாகத் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் சிறை வைக்கப்பட்டிருந்த இரு தரப்பு மீனவர்களும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், இந்தப் பேச்சு முடிவடைந்த பின்னர் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மீண்டும் கைது செய்யத் தொடங்கியுள்ளனர். அதிலும் குறிப்பாக இரு தரப்பு மீனவர்களிடையே இம்மாதம் 13 ஆம் திகதி இரண்டாம் கட்ட பேச்சுக்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 2 நாள்களில் மொத்தம் 3 சம்பவங்களில் தமிழக மீனவர்கள் 57 பேரை 13 படகுகளுடன் இலங்கைக் படையினர் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது. இது தொடர்பாக இரு நாடுகளுக்கு மிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் அப்பட்டமாக மீறப்பட்டிருக்கின்றன. மியான்மாரில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், தமிழ் நாட்டு மீனவர்கள் பிரச்சினையை மனித நேயத்துடன் அணுகும்படி கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்புக் கொண்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், இந்த சந்திப்புக்கு அடுத்த நாளே தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை அத்துமீறி கைது செய்துள்ளது என்பதிலிருந்தே இந்தியப் பிரதமருக்கு இலங்கை எந்த அளவுக்கு மரியாதை தருகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இது பிரதமருக்கு மட்டுமின்றி, இந்திய இறையாண்மைக்கும் இழைக்கப்பட்ட அவமானமாகும் - என்றுள்ளது. (த)

## நஞ்சுப் பழத்தை உட்கொண்ட சிறுமிகள் வைத்தியசாலையில்

வலி.வடக்கு,மார்ச் 7

நஞ்சுப் பழத்தை உண்டமையால் இரண்டு பாடசாலைச் சிறுமிகள் வாந்தி எடுத்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் வழியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் இருந்து பழம் ஒன்றை பறித்த மாணவிகள் இருவரும் அதனை உட்கொண்டுள்ளனர்.

மாலையில் இரண்டு சிறுமிகளும் வாந்தி எடுத்துள்ளனர். பெற்றோர்கள் விசாரித்தபோது இரு சிறுமிகளும் விசப் பழத்தை உண்டமை தெரியவந்தது.

> “பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் வழியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் இருந்து பழம் ஒன்றை பறித்த மாணவிகள் இருவரும் அதனை உட்கொண்டுள்ளனர்.

ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் தரம் மூன்றில் கல்வி கற்கும் எட்டு வயது நிரம்பிய சிறுமிகளான இளங்கோ யதுசிகா, விஜயகுமார் நிருத்திகா ஆகிய சிறுமிகளே வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-86)

## மன்னாரில் கைதான இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

மன்னார், மார்ச் 7

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை இரவு கைதான 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தனர் எனக் குற்றம் சாட்டி 15 இந்திய மீனவர்களை 3 படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த 15 மீனவர்களும் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, நேற்று வியாழக்கிழமை காலை மேலும் 2 படகுகளில் தலைமன்னார் கடற்பரப்பில் மீன் பிடியில்ஈடுபட்டனர் என 9 இந்திய மீனவர்களைக் கடறபடையினர் கைதுசெய்து தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் தெரிவித்தார். (த-56)

## தமிழ்ச் சினிமாவில் பாலுமகேந்திரா இறுதிநாள் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 7

தமிழ்ச் சினிமாவில் பாலுமகேந்திரா என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம் நடத்திவரும், காட்சிகளும் கருத்துரைகளும் நிகழ்வு இன்று நிறைவடைகிறது.

நிகழ்வின் மூன்றாவதும் இறுதி நாளுமான இன்று காலை 9 மணிக்கு, சிறந்த சினிமாப் படத்துக்கான விருது பெற்ற வீடு என்ற திரைப்படமும் மூடுபனி திரைப்படமும் திரையிடப்படவுள்ளன. அத்துடன் ஒரு மனிசி, காத்திருப்பு, பிரசாதம் போன்ற குறும்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பிற்பகல் யாழ்ப்பாணத்தில் பாலுமகேந்திராவின் இளமைக் காலம் என்ற தலைப்பில் அவரது உறவினரான செல்வமகள் மோகனதாஸ், பாலுமகேந்திரா ஓர் விமர்சனப்பார்வை எனும் தலைப்பில் ஜி.ரி.கேதாரநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ஐ-10)

# வடக்கு மாகாண முதல்வருக்கு எதிராக வலி.கிழக்கு முன்னாள் தவிசாளர் வழக்கு

### கொழும்பு மேல்நீதிமன்றில் தாக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச் 07

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில், வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுத் தான் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் இரண்டாவது தடவையாகத் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தவிசாளர் பதவியிலிருந்து அன்னலிங்கம் உதயகுமார் நீக்கப்படுகிறார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற வரவுசெலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு சட்டத்துக்கு முரணானது. ஏனெனில் வரவுசெலவுத் திட்டம் கடந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

அதன் பிரகாரம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடத்திய வரவுசெலவுத் திட்டக் கூட்டம் சரியானதென்று ஏற்றுக்கொண்டு, அதில் வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதை அங்கீகரிக்க வேண்டும்.

மேலும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வரவுசெலவுத் திட்டம் சபையில் கலந்துரையாடலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது, அதில் சில முன்மொழிவுகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதனால் அன்றைய தினம் வரவுசெலவுத் திட்டத்தை வாக்கெடுப்புக்கு விட முடியாத நிலையிலும், செயலாளர் அதனை வாக்கெடுப்புக்கு விட்டமை தவறு.

டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம் தவறானது என்று முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம் தெரிவித்துள்ளது. குறித்த கூட்டத்துக்கு உரிய முறையில் கடிதங்கள் அனுப்பியே கூட்டம் சட்டப்படி நடத்தப்பட்டது. எனவே அன்றைய கூட்டத்தில் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டமையை நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் எதிராளிகளாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வலி.கிழக்குப் பிரதேச சபை யின் செயலாளர், முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-5)



கோப்புப் படம்

# கமலின் மறியல் மீண்டும் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனின் கொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலை வருமான கந்தசாமி கமலேந்திரனுக்கு (கமல்) எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தன்னைக் கட்சியிலிருந்து நீக்கியதைத் தான் ஏற்கமாட்டேன் என்று கமல் நீதிமன்றில் தெரிவித்ததோடு, தன்னை நீக்கியமை தொடர்பாகக் கட்சியினால் வழங்கப்பட்ட கடிதத்தையும் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

அதனைப் பெற்றுக்கொண்ட நீதிமன்றம், கட்சியிலிருந்து நீக்கியமையை ஏற்கவிரும்பாது விடின் அது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் அல்லது உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யமுடியும் என்று தெரிவித்தது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் நீதிமன்றில் நேற்றுச் சட்டத் தரணிகள் எவரும் முன்னிலையாகவில்லை.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் பிரதான சந்தேக நபராகக் கமல் கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முதல்நாள் வேலணையில் வசித்து வந்த யசிந்தன் என்பவரும் றெக்ஷயனின் மனைவி அனித்தாவும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் அவர்கள் மூவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கமல் மற்றும் அனித்தா ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றில் பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# காணாமற்போனவர்களுக்கு சான்றிதழ் ஒரு கண் துடைப்பு

### சிவில் அமைப்புக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்.07

காணாமற்போனவர்களுக்கு 'இல்லாமல் போயுள்ளனர்' என்ற சான்றிதழ் வழங்கும் அரசின் நடவடிக்கையானது வெறும் கண் துடைப்பு வேலை என்றும், சர்வதேச அழுத்தத்திலிருந்து தப்பிக்கவே இதனை அரசு முன்னெடுப்பதாகவும் காணாமற்போனோர் தொடர்பில் குரல் கொடுக்கும் சிவில் அமைப்புக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

காணாமற்போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகள் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பு பல தரப்பினாலும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தத் திட்டத்துக்குப் பதிலாக 'இல்லாமல் போயுள்ளனர்' என்று சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முழு மூச்சாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**தலையிடியான விடயங்கள்**

இது தொடர்பில் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இலங்கை அரசுக்கு காணாமற்போனவர்கள் பிரச்சினை மற்றும், தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை இரண்டுமே தற்போது தலை யிடியாகவுள்ளன.

காணாமற்போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைத்துள்ளதாக அரசு சொல்கின்றது. இந்த ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லையெனினும், மக்கள் சாட்சியமளித்தனர். காணாமற் போனவர்களுக்கு இல்லாமல் போயுள்ளனர் எனச் சான்றிதழ் வழங்குவதற்கு ஆணைக்குழுவினர் எப்போது உடன்பட்டனரோ அப்போதே அந்த ஆணைக் குழு மீதிருந்த சொற்பமான நம்பிக்கையும் போய்விட்டது.

**நடவடிக்கை இல்லை**

காணாமற்போனோர் விவகாரத்தில் இலங்கை அரசுக்குச் சர்வதேச நடவடிக்கைகள் பெரும் தலையிடியாக மாறி வருவதனால், இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இந்தச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதனைவிட ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்தவர்கள் பலர், தமது பிள்ளைகள் காணாமற்போனதற்குக் காரணமான இராணுவ அதிகாரிகளைப் பெயர் சொல்லிச் சுட்டிக்காட்டினர். ஆயினும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காமல், இவ்வாறு இழப்பீடு வழங்க முயற்சிக்கின்றனர்.

காணாமற்போனமைக்கு காரணமானவர்களைத் தண்டியுங்கள். அதன் பின்னர் இழப்பீடுகள் கொடுப்பது தொடர்பில் பார்த்துக்கொள்ளலாம்-என்றார்.

**கண்துடைப்பு**

இது தொடர்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை தெரிவிக்கையில், இது இலங்கை அரசின் நழுவல் போக்கின் வெளிப்பாடு. காணாமற்போனோர் பிரச்சினையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எடுக்கும் நழுவல் நடவடிக்கை என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பொதுச் செயலாளருமான மாவை.சேனாதிராசா தெரிவிக்கையில், இது அரசின் கண்துடைப்பு நடவடிக்கை என்று தெரிவித்துள்ளார். (த-5)

# வீதி விபத்துக்களில் இருவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 7

வீதி விபத்துக்களில் சிக்கி மாணவரொருவர் உட்பட இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி கோயிலுக்கு முன்னால் முன்பள்ளியிலிருந்த பிள்ளையை அழைத்துக் கொண்டு சைக்கிளில் வந்த குடும்பப் பெண்ணை ஏ-9 வீதியில் வேகமாக வந்த ஹண்டர் வாகனம் மோதியதில் சுயநினைவை இழந்த நிலையில் அப்பெண் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை பாடசாலை முடிவடைந்து திரும்பிய சசிகரன் கௌசிகன் (வயது 9) என்ற மாணவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# புத்தூரில் 'பார்மஸி' உடைத்துத் திருட்டு

அச்சுவேலி, மார்ச் 7

புத்தூரில் உள்ள மருந்துப் பொருள் விற்பனை நிலையம் புதன்கிழமை இரவு உடைக்கப்பட்டுசுமார் 3 லட்சம் ரூபா பெறுமதி மிக்க பால்மா வகைகள் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

புத்தூர் வாதரவத்தை வீதிச் சந்திக்குச் சமீபமாக பிரதான வீதியில் அமைந்துள்ள பார்மஸியின் முன் கதவுகள் இரண்டும் பிரிக்கப்பட்டு பால்மா வகைகள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை கடையைத் திறப்பதற்கு சென்ற போது கடை உடைக்கப்பட்டு கதவுகள் திறந்த நிலையில் இருப்பது தெரியவந்தது. கடை உரிமையாளர் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலி ஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-11)

# சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் எல்லைக்குள் சிகரெட் கிடையாது

### பிரதி வெள்ளிக்கிழமைகளில்

தென்மராட்சி, மார்ச்7

சாவகச்சேரி நகர் உட்பட அந்தப் பகுதி வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட அனைத்துப் பிரதேசங்களான கிராமங்கள் மற்றும் உள்ளூர்களிலுள்ள உணவகங்கள், தேநீரகங்கள், பலசரக்குக் கடைகள் உட்பட வர்த்தக நிலையங்களில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதில்லை என்று வர்த்தகர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களால் வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டு தற்போது அது நடைமுறையில் இருந்து வருகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை வணிகர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்ட வர்த்தகர்கள், மன்ற எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளனர். (வ-9)

# இயக்கச்சி அ.த.க.பாடசாலையில் கணினிகள் திருட்டு

பளை, மார்ச் 7

இயக்கச்சி அ.த.க.பாடசாலையில் மாணவர்கள் பயன்படுத்தி வந்த கணினிகள் திருட்டுப் போயுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முடிவடைந்ததும் அறைகளை மூடி விட்டு வெளியேறி, திங்கட்கிழமை பாடசாலையைத் திறந்தபோது கணினிகள் திருட்டுப் போனமை தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாடசாலை நிர்வாகம் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது. (ஒ-9-18)

# பிணையில் வெளிவந்த மூவருக்குப் பிடியாணை

திருகோணமலை, மார்ச் 7

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 12 சந்தேக நபர்களில் மூன்று பேர் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகத் தவறியமையால் அவர்களுக்கு எதிராகத் திருகோணமலை நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை நகரில் காந்தி சிலைக்கு அருகில், பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்த மாணவர்கள் உட்பட ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஐ. நா. மனித உரிமைகள் சபை வரை சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் குற்றப்புலனாய்வுத் துறையினரால் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த 12 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் ஏற்கனவே பிணையில் விடப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 12 சந்தேக நபர்களில் 9 பேர் மட்டுமே முன்னிலையாகியிருந்தனர். இதனையடுத்து முன்னிலையாகத் தவறிய மூவரையும் கைதுசெய்வதற்கான பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

பிடியாணையைப் பிறப்பித்த நீதிமன்ற நீதிவான் ரி.சரவணராஜா, எதிர்வரும் ஏப்ரல் 24ஆம் திகதி வரை விசாரணைகளை ஒத்திவைத்துள்ளார்.

அன்றைய தினம் நீதிமன்றத்தில் சமூகமளிக்குமாறு 32 சாட்சிகளுக்கும் அழைப்பாணை அனுப்புமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (த)

# சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்7

யாழ். மாவட்டத்தில் உள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளதால் அனைத்துச் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சிவில் பாதுகாப்புக் குழுவில் இருந்தும் தலா 5 பேர் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் பெருகிவரும் திருட்டுக்கள், சட்ட விரோத செயற்பாடுகள் உட்பட பல் வேறு விடயங்கள் குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-4-9)

# எல்லை மீறும் தமிழக மீனவர் கைது நடவடிக்கை தொடரும்

### அமைச்சர் ராஜித திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 7
இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையே அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ள பேச்சுகளுக்கு முன்னர் இலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்வது சாத்தியமில்லை. எல்லை மீறுபவர்களைக் கைது செய்வது தொடர்ந்து நடக்கும். என்று மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கும், நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு வள்ளங்கள் வழங்குவதற்காகவும் அமைச்சர் அங்கு சென்றிருந்தார்.

இந்தியாவில் நடைபெற்ற பேச்சுக்களில் இந்திய தரப்பினர் ஒரு மாத காலத்துக்கு எல்லை தாண்டி மீன்பிடிக்க வரமாட்டோம் என்று உறுதியளித்திருந்தார்கள். அந்த உறுதிமொழியை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள். சட்டத்திற்கமைவாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாங்கள் தெளிவாக அவர்களுக்குக் கூறியிருந்தோம். அந்த உறுதி மொழியை மீறி வருபவர்கள் இப்போது கைது செய்யப்படுகின்றார்கள். அவர்கள் தொடர்பில் நீதி மன்றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும். எல்லை மீறுபவர்களைக் கைது செய்வது தொடர்ந்து நடக்கும். அதே நேரம் தமிழக முதல்வர்கோரியிருப்பதைப் போன்று கொழும்பு பேச்சுக்கு முன்னர் அவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள். என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார். (து)

# மீனவர்களை மீட்காமல் மஹிந்தவுடன் உறவா?

### கண்டிக்கிறார் ஜெயலலிதா

சென்னை, மார்ச் 7
மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்காமல் இலங்கை ஜனாதிபதியுடன் கைகுலுக்குகிறார் இந்தியப் பிரதமர் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளா.

நாகப்பட்டினம் அவுரித் திடலில் அ.தி.மு.க. நாடாளுமன்ற வேட்பாளர் கே.கோபாலுக்கு ஆதரவாக அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா பரப்புரை மேற்கொண்டார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கைக் கடற்படையினரின் அச்சுறுத்தல், சிறைபிடிப்புக்கு மீனவர்கள் ஆட்படுத்தப்படுகிறார்கள். இலங்கையில் நடைபெறும் மீனவர் பேச்சு வார்த்தை சுமுகமாக நடைபெறவேண்டும். இந்தப் பேச்சுக்கு முன்னர் இலங்கைச் சிறையில் வாடும் தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டும்.


ஜெயலலிதா

தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினர் மூலம் அச்சுறுத்தல் இருக்கிறது. மீனவர்கள் விடுதலை தொடர்பாக பிரதமருக்கு பலமுறை கடிதங்கள் எழுதப்பட்டது. எனது கடிதங்களுக்கு இந்தியப் பிரதமர் இதுவரை எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

வியட்நாமில் இலங்கை ஜனாதிபதியுடன், இந்திய பிரதமர் கைகுலுக்கியுள்ளார். மீனவர்களை மீட்க நட வடிக்கை எடுக்காமல் இலங்கை ஜனாதிபதியுடன் கைகுலுக்குகிறார் பிரதமர். இப்படிப்பட்ட ஒரு பிரதமர் தேவைதானா? இப்படிப்பட்ட காங்கிரஸ் ஆட்சி தேவை தானா? மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசை தூக்கி எறிய வேண்டும். தமிழக மீனவர்கள் தாக்கப்படாமல் இருக்க கச்சதீவை மீட்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. கச்சதீவு பகுதியில் நமக்குள்ள உரிமையை நிலைநாட்ட வேண்டும்''- என்றார். (வ)

# ராஜீவ் கொலை குற்றவாளிகள் விடுதலைக்கான தடை நீடிப்பு

புதுடில்லி, மார்ச் 7
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரை விடுதலை செய்யும் விவகாரத்தில், அவர்களை விடுவிக்க வழங்கப்பட்ட தடை இந்த மாதம் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரை விடுதலை செய்ய தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மனு தொடர்பில் நடைபெற்ற விசாரணை, நேற்று நடை பெற்றது.

அப்போது மத்திய அரசு தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் சித்தார்த் லூத்ரா, இந்த வழக்கில் விடுதலை செய்வது தொடர்பில் மத்திய அரசின் முடிவு முக்கியமானது என்றார்.

அத்தோடு தமிழக அரசின் பதில் மனுவுக்கு மத்திய அரசு தரப்பின் பதிலை தாக்கல் செய்யக் கால அவகாசம் கோரினார்.

அப்போது இது குறித்துக் குறிப்பிட்ட நீதிபதிகள், அரசின் பதில் மனுக்களை விட குற்ற விசாரணை முறைச் சட்ட விதி முறைகளுக்கு தான் முக்கியத்துவம் தர வேண்டும் என்றனர்.

தமிழக அரசின் பதில் மனுவைக் கடந்த 4 ஆம் திகதி உயர்நீதி மன்றத்தில் தர்க்கல் செய்தது. தாக்கல் செய்துள்ள மனுவுக்கு நேற்றுவியாழக்கிழமை மத்திய அரசு தரப்பு பதிலளிக்கக் கால அவகாசம் கோரியதை அடுத்து இந்த வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (து)

# புகைத்தலை எதிர்த்து கரவெட்டியில் பேரணி

புகைத்தலை எதிர்த்து விழிப்புணர்வுப் பேரணி ஒன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டியில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். சிவகுமார் தலைமையில் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகும். இந்தப் பேரணி பிரதான வீதி வழியாக நெல்லியடியை அடைந்து அங்கிருந்து நெல்லியடி கிழக்கிலுள்ள கரவெட்டி பிரதேச சபையைச் சென்றடையவுள்ளது.

அங்கு விழிப்புணர்வுக் கூட்டம் இடம் பெறும்.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் ஏற்பாடு செய்துள்ள இப் பேரணிக்கு நெல்லியடி வர்த்தகர் சங்கம் பூரண ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது. (ஜ-400-173)

# அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
'கருவி' மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையம் நல்லூர் வடக்குக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இல.90, செங்குந்தா வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் இயங்கிவந்த குறித்த நிலையம் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் 1166/15 அருளம்பலம் வீதி, நல்லூர் வடக்கு என்ற புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என நிலையத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஜ-400)


## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்சங்கப் பொதுக்கூட்டமும், நிர்வாகச் சபைத் தெரிவும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அதிபர்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
புதுக்குடியிருப்பு.

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலை விரிவுரையாளர்
திருமதி சிவசக்தி ஜெயராஜா
அவர்களின் அன்பு மாமியாரான
திருமதி செல்வரத்தினம்மா வைத்தியநாதர்
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலைச்சமூகம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

## மரண அறிவித்தல்

### நாகன் இராசதுரை



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் இராசதுரை நேற்று (06.03.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிமியோன் - நேசம்மா தம்பதியரின் அன்புமருமகனும் லீலாவதியின் பாசமிகு கணவரும் தம்பித்துரை (சிறுப்பிட்டி), தவமணி, சின்னராசா (ராசா), தங்கராசா (ஜேர்மனி), துரைசிங்கம் (ஜேர்மனி), விமலாவதி (வவுனியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் அன்ரன் கருணதாஸ் (பிரான்ஸ்), சித்திரா (இந்தியா), ஞானமலர், நவமலர், எட்வேட், கமலதாஸ், இராசமலர், நேசமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிலானி (பிரான்ஸ்), செல்வம் (சுவிஸ்), ரவிச்சந்திரன், மணிவண்ணன், சோதிலஸ்மன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜேம்ஸ், போல்டன், மெலனி, அஜிஷன், சகீனா, ஜான்ஷன், அபிநயா, மதிபன், மதிபா, எப்சிபா, சரண்ராஜ், அஜிஷன், கிஷாளினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம்மா வைத்தியநாதர்



செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், பூம்பொழில் கோப்பாய் வடக்கு (வராம்பற்றை) கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம்மா வைத்தியநாதர் (06.03.2014) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற அருணாசலம் - பாக்கியம் தம்பதியரின் அன்புமருமகளும், திரு.செ. கணபதிபபிள்ளை (ஓய்வு பெற்ற பிரதம நிர்வாக உத்தியோகத்தர் கச்சேரி) இன் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற அருணாசலம் வைத்தியநாதரின் (ஓய்வு பெற்ற நிதி உதவியாளர் பரீட்சைத்திணைக்களம் கொழும்பு) அன்புமனைவியும் காலஞ்சென்ற சிவராசா, தவராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி - Tutorial Staff at Royal Insituite - Colombo), ஜெயராஜா (யாழ் தினக்குரல்), சாந்தினி (சொய்சபுர மொறட்டுவ ) ஆகியோரின் அன்புத்தாயும் கௌசல்யா (Tutorial Staffe at LOGO - International School), சிவசக்தி (ஆங்கில விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), ஜெயசீலன்(கட்டார்) ஆகியோரின் அன்புமாமியும் கோபிகிருஷ்ணா (Jhon Keels),வைஷ்ணவி (Global Ware Net), கஜானன், சிவானுஜன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவர்கள்), சாருகேசி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லமான பூம்பொழில் கோப்பாய் வடக்கு, கோப்பாயில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய கந்தன்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
வராம்பற்றை கோப்பாய் வடக்கு, கோப்பாய். 077 5404878 வை. ஜெயராஜா (மகன்)

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கக்குட்டி நாகலிங்கம்

கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கக்குட்டி நாகலிங்கம் நேற்று (06.03.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - தெய்வானை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற ஸ்ரீகுமார் மற்றும் ஸ்ரீகுமாரி, ஸ்ரீமதி (பிரான்ஸ்), ஸ்ரீதேவி ஆகியோரின் தாயும். நவரத்தினம், இராசரத்தினம் (பிரான்ஸ்), யாழ்ராஜ் ஆகியோரின் அன்புமாமியும் மைதிலி, மேனகா (பிரான்ஸ்), மோகன்ராஜ், மைதீபன், யாழினி, மயூரன், மயூரி, சியாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும். மிதுஷன், டேனுஷா, சஸ்மேகா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணியளவில் காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஸ்ரீபவளம்,
கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

## நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் பதவிப் பெயர் மாற்றம்

### மாகாண சபைக்கு உட்பட்ட

வலி. வடக்கு, மார்ச் 7
வட மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் அனைவரது பதவிப் பெயர் அண்மையில் அபிவிருத்தி அலுவலர்கள் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டு நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுநர்கள் அபிவிருத்தி அலுவலர்கள் என்ற அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்கெனவே கடமையாற்றி வந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் அபிவிருத்தி உதவியாளர்களின் பதவிகளின் பெயரிலும் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இவ்வாறு பதவிப் பெயர் மாற்றம் இடம் பெற்றுள்ளது.

பதவிப் பெயர்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்களுடைய கடமைகள் குறித்த தெளிவான அறிவுறுத்தல்கள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்ட பதவி அலுவலர்கள் தெரிவிக்கின்றனர். (வ-86)

# செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் இருந்த காணியில் கட்டுமான பணிகளுக்குத் தடை

## யாழ். மாநகர சபை முதல்வர் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 7
இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயம் அமைந்திருந்த சங்கத்துக்குச் சொந்தமான காணிக்குள் நேற்று வியாழக்கிழமை முதல் எந்தவித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.



செ.ச. அலுவலகம் அமைந்திருந்த காணியில் எரிபொருள் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற போது

கண்டி வீதி சோமசுந்தரம் ஒழுங்கைக்குச் சமீபமாக இருந்த யாழ்.செஞ்சிலுவைச் சங்க காரியாலயக் கட்டடம் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பாக அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தமது ஆட்சேபத்தை யாழ்.மாநகர சபைக்குத் தெரிவித்தனர். அதையடுத்து குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாநகர சபை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

முன்னதாக எரிபொருள் நிலையத்தை அமைப்பதற்கான அனைத்து ஆவணங்களையும்சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அனுமதியைப் பெற்று மாநகர சபையின் அனுமதியைப் பெறுவதற்காக விண்ணப்பம் யாழ். மாநகரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

மாநகர சபையும் அதற்கான அனுமதியை வழங்கியிருந்த போதும் பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து திணைக்கள அதிகாரிகள், மாநகர உறுப்பினர்கள், பொது மக்கள் அடங்கிய மேற்படி கூட்டத்தை மாநகரசபை கூட்டியிருந்தது.

இவ்விடயம் குறித்து மாநகர சபை முதல்வர் தெரிவிக்கையில், மாநகர சபை பொது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே தனது முடிவை எடுக்கும். பொதுமக்களின் கருத்துக்கள், யாழ். செஞ் சிலுவைச் சங்கத்தின் கருத்துக் கள் என்பனவற்றைப் பதிவு செய்து மாநகர சபை உறுப்பினர்களுக்கு அறிவித்ததன் பின்னரே உரிய நடவடிக்கை எடுக்கும்.

நகர அபிவிருத்தி அதிகார சபை இதற்கு அனுமதி வழங்கியிருந்த போதும் தற்போது பொதுமக்களின் கருத்துக்களுக்கு அமையத் தான் வழங்கிய அனுமதியை குறித்த அதிகார சபை ரத்துச் செய்யும் என நகர அபிவிருத்தி அதிகார சபையால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை எரிபொருள் நிலையம் அமைப்பதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தால் பொதுச்சபையின் அனுமதி பெறப்படவில்லை என்றும், வீதிக்கும் நிலையம் அமையப் போகும் இடத்துக்குமான இடைத் தூரம், பொது மக்கள் ஏற்கெனவே அங்கு குடியிருத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான அறிக்கை மாநகர சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்று ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் குறிப்பிட்டார்.

“பொதுமக்களுக்குப் பாதிப்பான எந்தவிடயங்களையும் மாநகர முதல்வர் மேற்கொள்ள மாட்டார் என்று மாநகர சபை உறுப்பினர் இ.இராஜதேவன் குறிப்பிட்டார்.

இதேவேளை குறித்த கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்ததாகவும் முதல்வர் தெரிவித்தார். (வ-7)

## 40 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்ட நல்லுண்ணி வீதி

யாழ்ப்பாணம்,மார்ச் 7
புறநெகும திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட பிரான்பற்று நல்லுண்ணி வீதி 40 வருடங்களின் பின் பொதுமக்களின் புழக்கத்துக்குப் பயன்படும் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.

நல்லுண்ணி வீதியின் புனரமைப்புப் பணிகளை உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று - நல்லுண்ணி வீதி மீள்புனரமைப்பு இன்றி இருந்து வந்தது.

2011 இல் பிரான்பற்று மக்களின் முன்னுரிமை தெரிவிலான மக்கள் பங்கேற்பு திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு புற நெகும திட்டத்தின்கீழ் ஒருகோடியே 30 லட்சத்து 45 ஆயிரத்து 935 ரூபா செலவில் மிக நேர்த்தியாக புனரமைப்புப் பணி நிறைவு பெற்று மக்கள் பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது. (வ-40)



சிகிச்சை பெறக் காத்திருக்கும் நோயாளர்கள்....

## பிரதி செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் கிளினிக்கை விரிவுபடுத்துமாறு கோரிக்கை

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்

தென்மராட்சி, மார்ச் 7
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பிரதி செவ்வாய்க் கிழமைகளில் நடத்தப்படும் பொது மருத்துவ கிளினிக்கில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வாரத்தில் இரு தினங்கள் அல்லது செவ்வாய்க்கிழமைகளில் காலை, மாலை இரு வேளைகளிலும் நடத்துமாறு நோயாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்படும் பொது மருத்துவக் கிளினிக்குகளில் 500 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் வருகை தருகின்றனர். தென்மராட்சி பிரதேச மக்களுடன் பூநகரி, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்களும் கிளினிக்கில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அங்கு புதிய நோயாளர் களுடன் யாழ்.போதனா மருத்துவமனை கிளினிக்கில் பங்கு பற்றியவர்களும் இணைந்து வருகின்றனர்.

இதனால் கிளினிக்குக்கு வரும் நோயாளர் களின் எண்ணிக்கை வாரம் தோறும் அதிகரிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது “மருத்துவமனை பொது மருத்துவர் தலைமையில் நான்கு அல்லது ஐந்து மருத்துவர்கள் கிளினிக்கில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்கள் சிகிச்சைக்காக வரும் இறுதி நோயாளியையும் பரிசோதித்து சிகிச்சையளித்த பின்னரே அங்கிருந்து வெளியேறுகின்றனர். வாரத்தில் இரு தினங்கள் அல்லது இருவேளை கிளினிக் நடத்துவதற்கு மருத்துவ மனையில் மருத்துவ அதிகாரிகள் பற்றாக் குறையாக உள்ளனர்.

நோயாளர்களின் கோரிக்கையை ஏற்று மேலிடத்துடன் தொடர்பு கொள்வதாகவும் சாதகமான பதில் கிடைப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பனைசார் கைப்பணியாளர் 1, 040 பேர் பயனடைந்தனர்

### சிறு சுவடுகள் அமைப்பினூடாக

யாழ்ப்பாணம், மார்ச் 7
பனை சார் கைப்பணி உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களை ஒருங்கிணைக்கும் நோக்குடன் பனை அபிவிருத்திச் சபையால் அமைக்கப்பட்டுள்ள சிறு சுவடுகள் அமைப்பில் நாடளாவிய ரீதியல் உள்ள ஆயிரத்து 40 உறுப்பினர்கள் தற்போது பயன்பெற்று வருவதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

“பனை சார் கைப்பணி உற்பத்திகளை, கிராம ரீதியாக மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் சாதாரண தொழில் முயற்சிகளையே கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தனர். எனினும் பனை அபிவிருத்திச் சபை உற்பத்தியாளர்களை ஒரு கட்டமைப்புக்குள் ஒருங்கிணைக்கும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேசத்திலும் உற்பத்தியாளர்களை குழு முறையில் ஒன்றாக்கி சிறு சுவடுகள் அமைப்பின் ஊடாக உற்பத்தியாளர்களுக்கான ஆலோசனைகளையும் சந்தை வாய்ப்பை வழங்குவதற்கும் வழிவகைகளை மேற்கொண்டுள்ளது.

நாடளாவிய ரீதியல் தற்போது ஆயிரத்து 40 பயனாளிகள் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கென மாவட்ட ரீதியில் உள்ள போதனாசிரியர்கள் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்”- என்றார். (வ-14)

## 101 நாள் வேலைத்திட்டம்; சண்டிலிப்பாயில் பேரணிகள்

வலி.தென்மேற்கு, மார்ச் 7
மக்கள் மத்தியில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 101 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

பிரதேசம்'ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை பேரணி இடம்பெறும்.

“புகை எமக்குப் பகை” என்னும் தொனிப் பொருளில் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஒரு வார காலத்துக்கு நடத்தப்படவுள்ள பேரணியில் மாணவர்கள், பொது மக்கள் , சுகாதார உத்தியோகத்தர்கள் , தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த பிரதேசம் ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை பேரணிகள் இடம்பெறும். பேரணி இடம்பெறும் தினங்களில் அந்தந்த இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் சிகரெட் விற்பனை நிறுத்தப்படும். இதேவேளை , ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு இடையே குறித்த விடயம் தொடர்பாக பேச்சு, சித்திரப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன. (வ-115)

## ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு பல செயற்றிட்டங்கள்

### வலிகாமம் வலயத்தில் முன்னெடுப்பு

வலி .வடக்கு, மார்ச் 7
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி மட்டத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் கல்வி வலயத்தால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் :-

தரம் 3, 4 இல் கற்கும் மாணவர்களுக்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் வரும் மூன்றாவது புதன் கிழமைகளில் எழுத்து, வாசிப் புத்திறன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த மாதம் முதல் குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதுடன் இது குறித்த கணிப்பீட்டை மேற்கொண்டு மாணவர்களின் அடைவு மட்டம் கருத்தில் கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர்கள் நேரடியாக கண்காணிப்பார்கள் -என்றார். (வ-86)

## ஆந்திர மாநில பிரிப்புக்கு எதிராக வழக்கு

புதுடில்லி, மார்ச் 7
ஆந்திர மாநிலத்தை பிரிப்பதற்கு எதிராக இந்திய உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரித்து தனித்தெலுங்கானா மாநிலம் அமைக்க மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்தது. அந்த முடிவுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் ஒப்புதல் தெரிவித்து கையொப்பமிட்டுள்ளார். புதிய மாநிலம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.
இந்த நிலையில் மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து, சீமாந்திரா பகுதி வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.
தனித்தெலுங்கானா விவகாரத்தில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளையோ, தனி மாநிலம் அமைப்பது தொடர்பான பரிந்துரைகளையோ கருத்தில் கொள்ளாமல் எடுக்கப்பட்ட மத்திய அரசின் முடிவு தவறானது என்பதற்கான காரணங்களை சுட்டிக்காட்டி இந்த ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளதாக சீமாந்திரா பகுதி வழக்கறிஞர்கள் கூட்டு நடவடிக்கை குழுவின் இணை ஒருங்கிணைப்பாளர் சுப்பா ராவ் தெரிவித்துள்ளார்.
இந்த ரிட் மனு மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது. (ற)

## தேசிய வாத காங். பீகாரில் கலைப்பு

பாட்னா, மார்ச் 7
தேசியவாதக் காங்கிரஸ் கட்சியின் பீகார் மாநிலத்துக்கான பிரிவு முற்றாகக் கலைக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவர் சரத் பவார் அறிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது,
"ராஷ்ட்ரிய ஜனதாதளத்துடனான கூட்டணியில் முறிவு ஏற்பட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்படுகின்றது. பீகார் மாநிலத்தில் உள்ள தேசிய வாத காங்கிரஸ் கட்சியின் பிரிவு முற்றாகக் கலைக்கப் படுகின்றது. கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும்" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மம்தா பிரதமரானால் இந்தியாவுக்கு நன்மை

### அன்னா ஹசாரே கூறுகின்றார்

இந்தூர், மார்ச் 7
மம்தா பானர்ஜி பிரதமரானால் இந்தியாவுக்கு வளமான எதிர்காலம் உண்டு என்று தெரிவித்துள்ளார் சமூக சேவகர் அன்னா ஹசாரே.
ஊழலுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருபவர் சமூக சேவகர் அன்னா ஹசாரே. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"மம்தா பானர்ஜி பிரதமரானால் எமது நாட்டுக்கு வளமான எதிர்காலம் உண்டு. அதே நேரம் கிராமப்புற முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர் நரேந்திர மோடி மற்றும் ராகுல் காந்தி ஆகியோர். அவர்கள் பிரதமரானால் இந்தியாவின் எதிர்காலம் சிறப்பாக அமையாது.
எளிமையான ஆடை மற்றும் ரப்பர் செருப்புகள் அணியும் ஒரு முதலமைச்சரைக் காண்பது மிகவும் அரிது. அந்த வகையில் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி எளிமையாக இருந்து வருகிறார்.
ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அர்விந்த் கெஜ்ரிவாலைவிட, தனது அரசியல் வாழ்க்கையில் அதிக தியாகங்கள் செய்தவர் மம்தா பானர்ஜி.
அவர் நாட்டின் பிரதமரானால் இந்தியாவின் எதிர்காலம் சிறப்பாக அமையும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# தெலுங்கானாவை வைத்து வாக்கு வாங்க முடியாது

### காங்கிரஸை எச்சரிக்கிறார் ஜெகன்மோகன்

கம்மம், மார்ச் 7
தெலுங்கானாவை வைத்து தேர்தலில் வெற்றி பெறலாம் என்று காங்கிரஸ் கட்சி கனவு காண்கின்றது என்று தெரிவித்துள்ளார் வை. எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி.
நாடாளுமன்றத் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வை.ஆர்.எஸ்.காங்கிரஸ் கட்சி ஆந்திராவில் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்திருக்கின்றது. அங்கு இடம்பெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அந்தக் கட்சியின் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானாவை உருவாக்கியுள்ளது காங்கிரஸ் கட்சி. இந்தப் பிரிப்பை நாடாளுமன்றத் தேர்தலுக்காகவே அவசர அவசரமாக காங்கிரஸ் கட்சி மேற்கொண்டது. ஆனால் தெலுங்கானா விவகாரத்தை வைத்து தேர்தலில் வாக்கு வாங்கலாம் என்று காங்கிரஸ் கட்சி எண்ணுமானால் அது பகற் கனவாகவே அமையும். காங்கிரஸ் கட்சியின் இந்த நடவடிக்கைக்கு ஆந்திர மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆம் ஆத்மி - பா.ஜ.க. டில்லியில் மோதல்



ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளும் ஆம் ஆத்மி, பா.ஜ.க. ஆதரவாளர்கள்

புதுடில்லி, மார்ச் 7
புதுடில்லியில் அமைந்துள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்துக்கு முன்னால் ஆம் ஆத்மி ஆதரவாளர்களுக்கும், பா.ஜ.க. ஆதரவாளர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் கடும் மோதல் வெடித்தது.
குஜராத்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அர்வித் கெஜ்ரிவால் அங்கு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்த நிலையில் வடக்கு குஜராத்துக்குப் பரப்புரை செய்வதற்காகச் சென்றிருந்த அவரைப் பொலிஸார் தடுத்ததுடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்திருந்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புதுடில்லியில் அமைந்துள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகம் முன்பு ஆம் ஆத்மி கட்சி யினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர். அதையடுத்தே அங்கிருந்த பா.ஜ.க. ஆதரவாளர்களுக்கும், ஆம் ஆத்மி ஆதரவாளர் களுக்கும்இடையே மோதல் கள் ஏற்பட்டன. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமை மோச மடைந்ததை அடுத்து மோதல்களில் ஈடுபட்டவர்களை தண் ணீர் பீரங்கிகள் கொண்டு தாக்கி விரட்டியடித்தனர்.
மோதல் சம்பவங்களை அடுத்து ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 14 பேரை புதுடில்லிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். வன்முறைகளில் ஈடுபட்டமை, அரச ஊழியர்களைப் பணி செய்யவிடாது தடுத்தமை, பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை போன்ற பிரிவுகளின் கீழ் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள புதுடில்லிப் பொலிஸார், "கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள். ஆம் ஆத்மி கட்சியின் முக்கியஸ்தர்கள் அசுதோஸ் மற்றும் சாஷியா இல்மி ஆகியோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, தமது கட்சியினரின் செயற்பாட்டுக்காக அர்விந்த் கெஜ்ரிவால் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். (ற)

## ஷீலா தீட்சித்துக்கு எதிராக ஆம் ஆத்மியினர் போராட்டம்

கொச்சி, மார்ச் 7
கேரளா மாநில ஆளுநராக ஷீலா தீட்சித் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த மாநில ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
புதுடில்லி மாநில முதல்வராக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஷீலா தீட்சித், கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற டில்லி சட்டசபை தேர்தலில், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவாலிடம் தோல்வி அடைந்தார்.
இந்தநிலையில் கேரளா மாநில ஆளுநராக ஷீலா தீட்சித் நியமிக்கப்பட்டார். விரைவில் அவர் பதவி ஏற்க உள்ளார்.
ஷீலா தீட்சித்தை ஆளுநராக நியமனம் செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து கேரள மாநில ஆம் ஆத்மி கட்சியினர் கொச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். ஊழல் குற்றச்சாட்டுகளை சந்தித்து வரும் ஷீலா தீட்சித்தை காப்பாற்ற மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ற)

## உ.பி., பீகாரில் பா.ஜ.கவுக்கே ஆதரவு அதிகம்

புதுடில்லி, மார்ச் 7
உத்தர பிரதேசம், பீகாரில் எந்தக் கட்சிக்கு செல்வாக்கு உள்ளது என்பது குறித்து சி.டி.சி.எஸ்-ஐ.பி.என். என்ற அமைப்பு மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின்படி பா.ஜ.கவுக்கே ஆதரவு அதிகமாக உள்ளது என்று கூறப்படுகின்றது.
உத்தரபிரதேசத்தில் உள்ள 80 தொகுதிகளில் பா.ஜ.கவுக்கு பாதிக்கு பாதி என்ற அளவில் 41 முதல் 49 இடங்கள் கிடைக்கும். அதேவேளை ஆளும் சமாஜ்வாடி கட்சிக்கு 11 முதல் 17 இடங்கள் கிடைக்கும்.
பீகா ரில், பா.ஜ.க., கூட்டணிக்கு 22 முதல் 30 இடங்களில் வெற்றி கிடைக்கும். ஐக்கிய ஜனதாதள கட்சிக்கு 4 முதல் 8 இடங்கள் மட்டுமே கிடைக்கும் என்றும் அந்த ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. (ற)

# தேர்தல் கூட்டணி குறித்து இன்னமும் முடிவாகவில்லை

### ஜி.கே.வாசன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 7
நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழகத்தில் தேர்தல் கூட்டணி தொடர்பில் பிரதான கட்சிகள் இன்னமும் முடிவெடுக்க முடியாது திணறி வருகின்றன. பா.ஜ.க, தி.மு.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இன்னமும் கூட்டணி தொடர்பில் பல்வேறு கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றன.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், "காங்கிரஸ் கட்சியின் தமிழகக் கூட்டணி குறித்து இதுவரை முடிவாகவில்லை" என்று தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் விளக்கமளிக்கையில்,
"தமிழகத்தில் கூட்டணிப் பேச்சுக்கள் இன்னமும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இன்னமும் அதில் ஒரு முடிவு எட்டப்படவில்லை. இது குறித்துக் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடம் உரிய முடிவெடுக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க.?

### இரு கட்சிகளிடையே மீண்டும் பேச்சு ஆரம்பம்

சென்னை, மார்ச் 7
தே.மு.தி.கவிடம் இருந்து சாதகமான சமிக்ஞை கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ள தி.மு.க., ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் அவர்கள் இணைந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.
தி.மு.க. கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தைகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தொகுதிப் பங்கீடுகள் குறித்து இன்னமும் முடிவுகள் எட்டப்படாத நிலையில் கூட்டணியில் மேலும் சில கட்சிகளை சேர்ப்



தி.மு.க. தலைவர் கருணாநிதி

பது குறித்த பேச்சுக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. தே.மு.தி.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளுடன் தி.மு.க. பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள நிலையில் அது தமிழக அரசியலில் ஒரு திருப்பத்தைக் கொண்டு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
கூட்டணி விடயத்தில் நேற்று முன்தினம் இரவு தே.மு.தி.க விடம் இருந்து தி.மு.கவுக்குச் சாதகமான பதில் கிடைத்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதையடுத்து அந்தக் கட்சியுடன் கூட்டணி குறித்த பேச்சுக்களை நடத்தி வருகின்றது தி.மு.க.
தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை மாதங்கள் இருப்பதால் கூட்டணி விடயத்தில் அவசரப்படாமல் முடிவெடுப்பதற்கு தி.மு.க. தலைமை தீர்மானித்துள்ளதாகவும் தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## தேர்தலில் போட்டியிடுகிறார் எகிப்தின் இராணுவத் தளபதி

கெய்ரோ, மார்ச் 7
எகிப்தில் நடைபெறஉள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அந்நாட்டின் இராணுவத் தளபதி அப்துல் ஃபட்டா அல் சிசி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சிசி,

"நாட்டின் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தைப் புறந்தள்ள முடியாது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு ஒரு சில நாள்களில் வெளியாகும். நாட்டின் மக்கள் மத்தியில் இந்த விவகாரம் குறித்து தெளிவு ஏற்பட வேண்டுமென்பதே எனது விருப்பம்." என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலைமாதம் முகமது மூர்சியை எகிப்தின் ஜனாதிபதியை பதவியில் இருந்து சிசி தலைமையிலான இராணுவம் அகற்றியது. அதன் பின்னர் இடைக்கால அரசின் ஜனாதிபதியாக பதவி வகித்த அவர் அண்மையில் பதவி விலகியிருந்தார். (ற)



உலகிலேயே மிகஅதிக வயதான பெண்ணான ஜப்பானின் மிசாவ் ஒகாவா நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது 116ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். மேற்கு ஜப்பானின் ஓசாகா நகரத்தைச் சேர்ந்த மிசாவ் ஒகாவாவுக்கு, ஓசாகா நகர மேயர் தேகஹிரோ ஒகுரா மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் உட்படப் பலர் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தனர். ஒகாவாவை உலகின் அதிக வயதான பெண்ணாக 2013ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகம் அறிவித்து சான்றிதழ் வழங்கியது. 1898ஆம் ஆண்டு பிறந்த ஒகாவாவுக்கு 3 குழந்தைகளும், 4 பேரன்களும், 6 கொள்ளுப் பேரன்களும் உள்ளனர். உலகில் அதிக வயதானவர்கள் வாழும் நாடாக ஜப்பான் விளங்குகிறது. ஜப்பானைச் சேர்ந்த 116 வயதான ஜிரோமான் கிமூரா கடந்த 2013–ஆம் ஆண்டு ஜூன் மாதம் சாவடைந்தார். (ற)

## சீனா செல்கின்றார் மிச்சல் ஒபாமா



மிச்சல் ஒபாமா

வொஷிங்டன், மார்ச் 7
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்சல் ஒபாமா இந்த மாதம் 20ஆம் திகதி சீனாவுக்கு ஒருவார கால சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இது சீனாவுக்கான அவரது முதற் பயணமாகும்.

இந்தப் பயணத்தின்போது கல்வியின் முக்கியத்துவம் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் போன்ற விடயங்கள் குறித்து சீனாவில் பல்வேறு தரப்பினரிடம் அவர் கலந்துரையாட உள்ளார்.

சீனாவில் அமைந்துள்ள பல வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் மற்றும் கலைப் பண்பாட்டுத் தளங்கள் ஆகியவற்றையும் மிச்சல் பார்வையிட உள்ளார்.

அதேவேளை முன்னதாக ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் லத்தின் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மிச்செல் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். (ற)

## சீனாவின் இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு

பீஜிங், மார்ச் 7
எதிர்வரும் நிதி ஆண்டில் 7.5 சதவீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்று சீனா அறிவித்துள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீனப் பிரதமர் லீ கெகியாங்,

"இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை 12.2 சதவீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியே மிக முக்கியம். ஆனால் அதை எட்ட அமைப்பு ரீதியில் பல கடினமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். காற்றுமாசுபடுத்தலைக்குறைக்கவும், ஊழலை அகற்றவும், தீவிரவாதத்தை எதிர்த்து போராடவும் நாடு உறுதி பூண்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டை சீனா அதிகரித்து இருப்பது குறித்து ஜப்பான் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. (ற)

# ரஷ்யாவுக்கு எதிராக ராஜீய நெருக்கடிகள்

### மேற்கு நாடுகள் தீவிரம்

நியூயோர்க், மார்ச் 7
உக்ரைன் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ரஷ்யாவுக்கு ராஜீய ரீதியான நெருக்கடிகளைக் கொடுப்பதற்கு மேற்கு நாடுகள் முடிவெடுத்துள்ளன.

உக்ரைனின் கிரீமியா பிராந்தியத்தில் ரஷ்ய இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையிலேயே மேற்கு நாடுகள் இந்த முடிவை எடுத்துள்ளன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சர்வதேச அமைதிக் குழுவான பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் அமெரிக்க தலைமை பிரதிநிதி டேனியல் பாயர்,

"கிரீமியா தன்னாட்சிப் பிராந்தியத்தின் நிலைமையை ஆராய அமெரிக்கா மற்றும் 14 நாடுகள் இணைந்து அமைத்துள்ள இராணுவக் கண்காணிப்புக் குழுவை அந்தப் பகுதிக்கு 24 மணி நேரத்துக்குள் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. உலகின் 57 உறுப்பு நாடுகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஆயுதமற்ற இந்தக் குழு அங்கு அனுப்பப்படவுள்ளது." - என்று தெரிவித்துள்ளார்.


இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்,

"கிரீமியா பிராந்தியத்தை ரஷ்யாவுடன் இணைக்கும் எண்ணம் எமக்கில்லை. குறித்த 'தூதுக் குழு' யோசனையை நாம் வரவேற்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நவீன ஏவுகணை சோதனையை மேற்கொண்டுள்ளது ரஷ்யா. எனினும், இது வழமையான ஒன்றுதான் எனவும், உக்ரைன் பிரச்சினைக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றும் விளக்கமளித்துள்ளது. (ற)

# ஈரானுக்கு எதிராக நடவடிக்கை தேவை

### இஸ்ரேல் பிரதமர் வலியுறுத்து



பெஞ்சமின் நெதன்யாகு

ஜெருசலேம், மார்ச் 7
அணு ஆயுதம் தயாரிக்கும் திறனைப் பெறுவதற்கான நடவடிக்கையைக் கைவிட மறுக்கும் ஈரான் மீது உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு.

வொஷிங்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமெரிக்க - இஸ்ரேல் பொது விவகாரங்கள் குழுவின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

"அணுசக்தி பேச்சுக்களின் மூலம் இறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு வல்லரசு நாடுகளுடனான பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதே ஈரானின் நோக்கமாகும். எனினும் அந்த நாட்டினர் தொடர்ந்து அணு ஆயுதங்களை தயாரித்து வருகின்றனர். ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்காக மட்டுமே அணு உலைகள் என்று கூறுகின்றனர். அப்படியாயின் கனரக உலைகளை ஏன் அமைக்க வேண்டும்? கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளை தொடர்ந்து தயாரித்து வருவதன் நோக்கம் என்ன?" என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்தக் குற்றச்சாட்டுகளை ஈரான் மறுத்து வருகிறது. மருத்துவ மற்றும் அறிவியல் பயன்பாட்டுக்காக ஐசோடோப்புகள் தயாரிக்க கனரக உலைகள் தேவைப்படுகின்றன என்று மேலும் விளக்கமளித்துள்ளது.

உலக வல்லரசு நாடுகளுடன் ஈரான் கடந்த நவம்பர் மாதம் இடைக்கால அணுசக்தி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன்படி குறிப்பிட்ட அளவில் யுரேனியம் சுத்திகரிக்க அந்நாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ற)

## தாயின் கடனட்டை மூலம் லொறி வாங்கிய சிறுவன்

லண்டன், மார்ச் 7
தாயின் கடனட்டையைப் பயன்படுத்தி இணையதள ஏலம் மூலம் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியுள்ள குப்பை அள்ளும் லொறியொன்றை 5 வயதுச் சிறுவன் வாங்கிய சம்பவம் லண்டனில் நடந்துள்ளது.

வில்லியம்பேட்மன் என்ற இந்தச் சிறுவன் 'ஆட்டிஸம்' குறைபாடு உடையவன். இவன் தன்னை ஒரு குப்பை மறுசுழற்சி நிலைய மேலாளர் என்று கற்பனை செய்து கொண்டு, தான் சந்திக்கும் நபர்களிடம் குப்பை சேகரிப்புப் பற்றியும், அதை மறுசுழற்சி செய்வது பற்றியும் பேசிக்கொண்டிருப்பான். வீடு முழுவதும் குப்பை அகற்றும் சிறு லாரி பொம்மைகளை வைத்திருக்கும் அந்தச் சிறுவன் எப்போதும் அவற்றை வைத்து விளையாடிக் கொண்டிருப்பான்.

இந்த நிலையில் வீட்டில் இருந்த கணினி மூலம் தாயின் கடனட்டையைப் பயன்படுத்தி சுமார் 10 லட்சம் ரூபா மதிப்புள்ள குப்பை அள்ளும் லொறியை இணையதள ஏலத்தில் அவன் வாங்கி விட்டான். அதையடுத்து அந்த நிறுவனத்தினர் அவனது தாயாருடன் தொடர்பு கொண்டு லொறியை வந்து பெற்றுக் கொள்ளுமாறு கோரியுள்ளனர். சிறுவனின் தாயார், உடனடியாக அந்த வணிக நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, தவறுதலாக ஏலம் எடுக்கப்பட்டதாகக் கூறி அந்த ஏல விற்பனையை இரத்துச் செய்துள்ளார். (ற)

## பீட்சா தந்த அதிர்ஷ்டம்



எட்சர் மார்டிரோசியான்

நியூயோர்க், மார்ச் 7
அமெரிக்காவில் நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில் பீட்சா விநியோகம் செய்த நபருக்கு 1000 டொலர் இனாமாக அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் கடந்த 2ஆம் திகதி ஒஸ்கர் விருது வழங்கும் விழா நடைபெற்றது. அதில் பிராட்பிட், ஜெராட் லெடோ, மெரில் ஸ்ட்ரீப் உட்படப் பல்வேறு ஹொலிவூட் நட்சத்திரங்கள், இயக்குநர்கள் மற்றும் பல்வேறு கலைஞர்கள் சர்வதேச நாடுகளிலிருந்து கலந்து கொண்டனர்.

அந்த விழாவின் போது எட்சர் மார்டிரோசியான் என்ற பீட்சா விநியோகம் செய்யும் ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் சுட சுட பீட்சாவை திரையுலக பிரபலங்களுக்கு வழங்கியுள்ளார். அவர் சிறந்த முறையில் பீட்சா விநியோகம் செய்த காரணத்தால், விழாவின் இறுதியில் எட்சருக்கு 1000 அமெரிக்க டொலர் ஒஸ்கர்விருதுவிழாவை நடத்திய எல்லென் டீஜெனர்ஸ் என்பவரால் 'டிப்ஸ்ஸாக' வழங்கப்பட்டது. (ற)

## பாக். குண்டுவெடிப்பில் நான்கு பேர் படுகாயம்

இஸ்லாமாபாத், மார்ச் 7
பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில், கைபர்-பக்துன் கவா மாநிலத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒரு அரச அதிகாரி உட்பட 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அதையடுத்து அந்தப் பகுதி பாகிஸ்தான் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

குறித்த பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் நடந்த குண்டு வெடிப்பில் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தேர்தலில் தனித்துப்போட்டியிட்டால் தான் அரசு எமது பலத்தைப் புரிந்து கொள்ளும்

## மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்7

உபாய ரீதியாக அரசோடு இணைந்து போட்டியிடுவதை விட, நாங்கள் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் தான் அரசு எங்களது பலத்தை சரிவர புரிந்து கொள்ளும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரி வித்தார்.

மேல் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் மரச் சின்னத்தில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கஹட்டோவிட்ட கிராமத்தில் நடைபெற்ற பரப் புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேல் மாகாண சபைத் தேர்தலிலும் நாங்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தில் தனித்து போட்டியிவதற்கு தீர்மானித்துள்ளோம்.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தலைமைத்துவம் வகிக்கும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ என்னிடம் முன்னணியில் கூட்டாகப் போட்டியிடுவதானால் அதை வரவேற்பதாகவும் என்றும் அது பற்றி ஆலோசிக்க முடியுமா என்றும் கேட்டார்.


முதலமைச்சர் வேட்பாளரிடமிருந்தும் அது தொடர்பில் தமக்கு அழுத்தம் தரப்படுவதாக எமது முதன்மை வேட்பாளர் ஷாபி ரஹீமும் என்னிடம் கூறினார்.

ஆனால், களநிலவரத்தின் யதார்த்தத்தைப் பொறுத்தவரை, நாங்கள் தனித்துப் போட்டியிடாமல் மக்கள் சுதந்திர முன்னணியில் சேர்ந்து போட்டியிடுவது எங்களது ஆசனத்தை இழப்பதற்கே வழிகோலும். நாங்கள் தனித்துப் போட்டியிடுவதில் பிடிவாதமாக இருந்தோம். ஆனால் அரசுக்கு அது அஜீரணமாக இருந்தது.

உபாய ரீதியாக அரசோடு இணைந்து போட்டியிடுவதை விட, நாங்கள் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் தான் அரசு எங்களது பலத்தைச் சரிவர புரிந்து கொள்ளும். அரச கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு தோற்றுப் போவதால் அபிவிருத்தி வேலைகளை எங்களுக்கு வழமையாக செய்வதை விட சற்றுக் கூடுதலாக செய்ய வேண்டிய ஒரு தார்மீக கடமை அவர்களுக்கு ஏற்படலாம்.

இந்தக் கட்சி பலமாகவும், தனது பேரம் பேசும் சக்தியை கொண்டதாகவும் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதை நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம் காங்கிரஸ் அபிமானிகளும் ஆதரவாளர்களும் எங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள்.

அரபு நாடுகள் மத்தியில் வித்தியாசமான நிலைப்பாடு ஏற்பட்டு விட்டதென வீணாக எங்களோடு இங்குள்ள அரசியல்வாதிகள் சிலர் கோபிக்கிறார்கள்.



ரவூப் ஹக்கீம்

பொதுபல சேனா, ராவணா பலய போன்ற இனவாத கும்பல்களின் தீவிரவாதம் வளர்வதற்கு இலங்கை களமாக மாறிவிட்டதென்ற செய்தி அரபு உலகில் நவீன தொழில்நுட்ப வலைப்பின்னல் ஊடாகப் பரவியிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்.

நாங்கள் சொல்லித்தான் ஏனைய நாடுகள் அவற்றைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்பதல்ல.

இராஜதந்திர ரீதியாக இவ்வாறான இனவாத, தீவிரவாத நடவடிக்கைகள் இலங்கையை பாதிப்படையச் செய்யும் என்பதை நான் அரபு நாட்டு பத்திரிகைகளைச் சுட்டிக்காட்டி வெளிவிவகார அமைச்சரிடம் கூறியிருந்தேன். இவ்வாறிருக்க இன்று முஸ்லிம் காங்கிரஸின் மீது மட்டும் குற்றம் சுமத்துவது அல்லது பழியை போடுவது எந்த விதத்திலும் நியாயமில்லை.

அரசோடு முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருப்பது பற்றி இன்று எமது சமூகத்தில் எவ்வளவு தான் கசப்புணர்வு இருந்தாலும், இந்த இயக்கம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது மிகவும் பிரதானமான விடயம். அரசுக்கு வெளியில் இருப்பது ஆபத்தானது என நியாயமாக சிந்திக்கும் முஸ்லிம்கள் பலர் நினைக்கிறார்கள். வெளியில் இருக்கின்ற பொழுது வரும் பாதிப்புகளை விட, அரசுக்குள் இருக்கும் போது அவை பற்றி கதைப்பதற்காகவாவது யாராவது உள்ளே இருந்தாக வேண்டும் என்பது காலத்தின் நிர்ப்பந்தம் ஆகும்.

எமது கட்சி அரசோடு இணைவதில் அதிருப்தி இருந்தது. கட்சி உறுப்பினர்களை பறிகொடுத்து விடக் கூடாதென்பதற்காகத்தான் நாம் அரசோடு இணைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் கட்சியின் பலம். எங்களிடம் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்-என்றார். (ச-10)

# தமிழில் தேசிய கீதம் பாடுவது தவறில்லை


## சகல இனங்களுக்கும் சம உரிமை வேண்டும் என்கிறார் அனுரகுமார

கொழும்பு,மார்ச் 7

சிங்களவர் மற்றும் தமிழர்களின் சம உரிமைகளை ஏற்றுக் கொள்கிறோம். தேசிய கீதத்தை தமிழில் பாடுவது தவறில்லை என்று ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித் தத்தாவது:-


ஒருசமயத்தை மிதித்து கொண்டு மற்றுமொரு சமயத்தை உயர்ந்தது எனக் கருதும் சமூகத்தை நாங்கள் உருவாக்கப் போவதில்லை.



அனுரகுமார திஸா நாயக்க

நாங்கள் சகல இன மக்களினதும் சம உரிமைகளை ஏற்றுக் கொள்கிறோம். நாட்டில் உள்ள இரண்டு பிரதான மொழிகளின் சம உரிமைகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

தேசிய கீதத்தை தமிழில் பாடினால் அதில் என்ன தவறு இருக்கின்றது? சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடும் போது அதனை எப்படி தமிழ்ப் பிள்ளைகளால் புரிந்து கொள்ள முடியும்- என்றார். (ச)



நாட்டின் சமகால அரசியல் மற்றும் வறிய குடும்பங்களுக்கான உதவிகளை துருக்கி நாடு வழங்குவதற்கான சாத்தியப்பாடு என்பன தொடர்பில் கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹிப் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கைக்கான துருக்கி நாட்டு தூதுவர் ஸ்கென்டர் கே. ஒகாய்யை சந்திந்துக் கலந்துரையாடினார்.

# மன்னார் புதைகுழியை பாதுகாக்க நடவடிக்கை

## கூட்டத்தில் தீர்மானம் என்கிறார் அஜித் ரோகண

மன்னார்,பெப்7

மன்னார் மனிதப் புதைகுழியை தோண்டும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் புதைகுழியை பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

அத்துடன் அங்கிருந்து எடுக்கப்பட்டுள்ள மனித எச்சங்களை ஆய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதைகுழியைத் தோண்டுவதைத் தற்காலிகமாக நிறுத்துவது என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.



அஜித் ரோகண

இந்தப் புதைகுழியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் மக்கள் குடியிருந்தார்களா? கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தனவா? விடுதலைப் புலி உறுப்பினர்கள் முகாமிட்டிருந்தார்களா? என்று பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள்.

இந்தப் புதைகுழியில் 80 மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை மீட்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகள் மற்றும் எச்சங்களுக்கு உரியவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பதைக் கண்டறிவதற்காகப் புராதன மனித எச்சங்களைப் பரிசோதனை செய்யும் வைத்திய பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இது தொடர்பான புலன் விசாரணைகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் முறையற்ற வகையில் புதைக்கப்பட்டிருந்தார்கள் என்று வைத்திய பரிசோதனையில் தெரியவந்தாலும் இது தொடர்பில் தீவிரமாக மேல் விசாரணைகள் நடத்தப்படுவது பற்றி நீதிமன்றம் தீர்மானிக்கும் - என்றார்.

இதேவேளை புதைகுழி முற்றாக தோண்டப்பட்டு முடிவுற்று இருப்பதாக அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல். வைத்திய ரத்ன தெரிவித்தார். (ச-56)

# படையினர் மூன்று பேர் இடைநிறுத்தம்

கொழும்பு,மார்ச் 7

பாதுக்கை நகரிலுள்ள நகைக் கடையொன்றில், ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான நகை மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டமை தொடர்பில் கைதான இராணுவத்தினர் மூவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

லெப்டினன் ஒருவரும், இரண்டு இராணுவத்தினரும் இவ்வாறு பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

மிரிஹான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் மூவரும் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (ச)



இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பறவைகள்

# இலங்கைக்கு வருகின்றன வெளிநாட்டுப் பறவைகள்

கொழும்பு,மார்ச் 7

காலநிலை மாற்றம் காரணமாக பலரக வெளிநாட்டுப் பறவைகளும் பூந்தல தேசிய பூங்காவுக்கு வருகை தருகின்றன.

இந்தப் பறவைகளின் சொந்த நாடுகளில் குளிர்காலம் ஆரம்பித்துள்ளதையடுத்து, அவை இடம்பெயர்ந்து இலங்கைக்கு வருகை தர ஆரம்பித்துள்ளன. (ச)

## 'கல்வி மூலம் சமூகத்தை வளர்ப்போம்'

வவுனியா,மார்ச் 7
இழந்தவற்றை கல்வியூடாகவே நாம் மீளப்பெற வேண்டும். இதன் மூலமே எதிர்கால சமூகத்தை உறுதியான நம்பிக்கை உள்ள சமூகமாக கட்டியெழுப்ப முடியும். இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா.
கிளிநொச்சி தம்பிராசன் பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தென்பகுதியில் ஏற்பட்ட கலவரத்தின் போது இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்த கிராமம் உருவாக்கப்பட்டது. இப்போது இங்கு காணிப்பிரச்சினைகள் நிலவுவதை நான் அறிவேன். இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். போரில் இழந்தவற்றை எம்மால் ஈடுசெய்ய முடியாது. ஆயினும் கல்வியை வளர்த்துக் கொள்வதன் ஊடாக உயர்ந்த சமூகமாக வளர்ச்சியடைய முடியும். இதன் மூலம் எமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (ஜ-55)

## மீனவருக்கு இளைப்பாறும் மண்டபம்

கிளிநொச்சி, மார்ச் 7
வவுனியா வடக்கு, கனகராயன்குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களது நன்மை கருதி இளைப்பாறும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
தேசிய மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்ட இந்த இளைப்பாறு மண்டபத்தைக் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்தின திறந்து வைத்தார்.
இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடம் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் பொருட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஜ-421)

## கருங்கல் அகழ்வால் பாதிப்பு

ஒட்டுசுட்டான், மார்ச் 7
ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மலைகளை உடைத்து கல் அகழும் பணி தொடர்வதாகவும் இதனால் இந்தப் பகுதியில் பெரும் குழிகள் ஏற்படுத்தப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள சிறுசிறு மலைகள் தொடர்கள் உடைக்கப்பட்டு கருங்கல் அகழப்படுகின்றன. இதற்கென வெடிகளைப் பயன்படுத்துவதால் அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் அதிர்ந்து போகின்றனர்.
150 அடிக்கும் மேலாக மலைகள் அகழப்படுவதால் அந்தப் பகுதிகள் பெரும் அகழிகளாக மாறி வெள்ள அபாயநிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-500)



முல்லைத்தீவு மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாயிகளை ஒன்றிணைக்கும் வயல் விழா கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் தட்டயாமலை கிராமத்தில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் எஸ். யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடமாகாண விவசாயப்பணிப்பாளர் சி.சிவகுமார், மற்றும் விவசாயத்திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டு விவசாயக் காணிகளைப்பார்வையிட்டதுடன் விவசாயிகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கினர். (ஜ-14)

## கரைச்சி, கண்டாவளையில் சுகாதார வேலைத்திட்டம்

கிளிநொச்சி,மார்ச் 7
கரைச்சி,கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளில் குடும்பநல,சுகாதார வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று குடும்பபுனர்வாழ்வு நிலையத்தின் வடமாகாண இணைப்பாளர் கே.பிரேம்குமார் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்ட குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உளநல, குடும்ப சுகாதார வேலைத்திட்டங்களை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இந்தக் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,
கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள அம்பாள்நகர், கோணாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பரந்தன்நகர், கோரக்கன்கட்டு, புன்னைநீராவி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது
மேற்படி கிராமங்களில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் உடல், உள சுகாதாரத்தை மேம்படுத்தும் முகமாக குடும்ப புனர்வாழ்வு நிலையங்களின் ஊடாக செயற்றிட்டம் மேற்கொள்ளப்படும் - என்றார். (ஜ)

# சந்தையில் கிராக்கி நிலவும் பயிர்களை உற்பத்தி செய்க

### விவசாயத்தில் வெற்றிபெற இதுவே வழி என்கிறார் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,மார்ச் 7
சந்தைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் சந்தைகளில் கிராக்கி உள்ள பயிர்களை நாம் உற்பத்தி செய்யவேண்டும். இதன்மூலம் தான் விரயத்தைத் தவிர்த்து இலாபமீட்ட முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் இதற்கான முன் மாதிரித்திட்டங்களில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.யோகேஸ்வரன்.
முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாய விழா கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் தட்டயாமலை கிராமத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போது அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-
முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுவாக நெல், பயறு, உழுந்து, எள்ளு, நிலக்கடலை போன்ற பிரதான பயிர்களும் வாழை, தேசி, தோடை போன்றனவும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.
தொடர்ச்சியாக எல்லோரும் ஒரே வகையான பயிர்களைச் செய்கை பண்ணுவதால் சந்தைப்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிர்ச்செய்கை பன்முகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வர்த்தக ரீதியில் அதிக சந்தைவாய்ப்புள்ள, கிராக்கியுள்ள பயிர்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. எனவே அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவில் உருளைக் கிழங்கு செய்கையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.
இந்தக் காலபோகத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, முத்துஐயன்கட்டு, புதுக்குடியிருப்பு, அலம்பில், ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களில் 20 விவசாயிகள் ஊடாக உருளைக்கிழங்கு செய்கைக்கான முன்மாதிரி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. முன்மாதிரித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்ச்சிப் பகுதியினர், விரிவாக்கல் பகுதியினர் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆராய்வர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கின் விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் உருளைக் கிழங்குச் செய்கையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் பற்றி ஆராயத்தீர்மானித்துள்ளோம். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு துறை சார்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், விவசாயிகளது பங்களிப்பும் அவசியம் - என்றார். (ஜ-14)

## பூந்தோட்டம் முகாமில் உள்ளோருக்கு நெடுங்கேணியில் நிரந்தரக் குடியிருப்பு

### விரைவில் அமையும் என்கிறார் வவுனியா அரச அதிபர்

கிளிநொச்சி, மார்ச் 7
வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களை வவுனியா நெடுங்கேணி, நயினாமடு பகுதியில் நிரந்தரக் காணி வழங்கி குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த 1991 ஆம் ஆண்டுக்கு பின்னர் வவுனியா, செட்டிகுளம், ஓமந்தை, பூவரசன்குளம் உள்ளிட்ட பகுதிகளிலும், வவுனியா தெற்கு எல்லையோரக் கிராமங்களிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வவுனியா நெளுக்குளம் மகாவித்தியாலயத்துக்கு அருகிலும், வவுனியா பூந்தோட்டத்திலும் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர்.
கடந்த 2004 ஆம் ஆண்டு காலப் பகுதியுடன் நெளுக்குளம் நலன்புரிநிலையம் மூடப்பட்டது. பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தற்போது நூறு வரையான குடும்பங்களே வாழ்ந்து வருவதுடன் இவர்கள் அடிப்படை வசதிகளைப் பெறுவதிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.
இந்த நிலையில் வவுனியா நெடுங்கேணி நயினாமடுப் பகுதியில் இந்தக் குடும்பங்களைக் குடியமர்த்தத் திட்டமிட்டுள்ளோம். தற்போது இதற்கென முந்நூறு ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.
பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் உள்ள நூறு குடும்பங்களுக்கு இந்தக் காணிகளைப் பிரிந்து வழங்கி, அவர்களைக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார். (ஜ-55)

## ஏ.ரி.எம். அட்டையூடாகப் பணம் திருடியவர் சிக்கினார் கமராவில்

### அடம்பன் பகுதியில் சம்பவம்

மன்னார்,மார்ச் 7
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றும் தொழில் நுட்பவியலாளர் ஒருவரின் வங்கி அட்டையைத் (ஏ.ரி.எம் காட்) திருடி அதில் இருந்த 35 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்த குற்றச்சாட்டில் அதே திணைக்களத்தில் கடமையாற்றும் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக விடத்தல்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.ஜே.குணதிலக்க தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தனது வங்கி அட்டை திருடப்பட்டு, கணக்கில் இருந்த 35 ஆயிரம் ரூபா பணம் களவாடப்பட்டுள்ளதாக அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றும் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் கடந்த 3ஆம் திகதி விடத்தல்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.
இந்த நிலையில் விடத்தல்தீவு பொலிஸார் குறித்த பிரச்சினை தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததோடு, நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய சம்பவத்துடன் தொடர்புடைய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.
வங்கியின் உதவியுடன் குறித்த அட்டை ஊடாக பணம் எடுக்கப்பட்ட ஏ.ரி.எம்.இயந்திர நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி. கமராவில் பதியப்பட்ட காட்சியைவைத்து கடந்த 4ஆம் திகதி சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

**குறித்த நபர் 35 ஆயிரம் ரூபாவை அட்டையில் இருந்து எடுத்துவிட்டு அதனைச் சேதப்படுத்தி எறிந்துள்ளார். விசாரணைகளில் இதனை அவர் ஒப்புக்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

சந்தேகநபர் விசாரணைகளின் போது தான் பணத்தை எடுத்ததாக பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.
மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். -என்றார். (ஜ-56)

## விதை நெல் தட்டுப்பாட்டைத் தவிர்க்க 2,000 ஏக்கரில் நெற்செய்கை தேவை

### கிளிநொச்சி விதை உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு


கிளிநொச்சி, மார்ச் 7
கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த வருடத்துக்கான பெரும் போக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லை பெறுவதற்கு இந்த வருடம் குறைந்தது 2,000 ஏக்கரிலாவது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்தது.
கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த முறை கடும் வறட்சி காரணமாக கூடுதலான இடங்களில் பெரும்போக நெற்செய்கை அழிவடைந்துள்ளது. அத்துடன் குளங்களின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைவடைந்து செல்வதினால் இவ்வருடத்துக்குரிய சிறுபோக நெற் செய்கையும் கேள்விக்குறியாகியுள்ளது. இதனால் அடுத்த ஆண்டு காலபோக நெற்செய்கையில் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
இந்த நெருக்கடியைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, இரணைமடுக் குளத்தின் கீழ் குறைந்தது 2,000 ஏக்கரிலாவது விதை நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என உற்பத்தியாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-55)

# அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெற்றால் போராட்டம்

## எச்சரிக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மட்டக்களப்பு,மார்ச் 7
மட்டக்களப்பு மாவட்டத்தின் புளுக்குனாவ,கெவிலியாமடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்ட விரோத குடியேற்றங்களுக்கு சட்ட ரீதியான அனுமதியை யாரும் வழங்க முற்பட்டால் அவர்களுக்கு எதிராகவும், இந்தக் குடியேற்றங்களை அடாவடியாக மேற்கொண்டுவரும் பௌத்த பிக்குவுக்கு எதிராகவும் மக்களை ஒன்றுதிரட்டி போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பில் சிங்கள ராவய அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பட்டிப்பளை பிரதேச செயலரை இடமாற்றுமாறு கோரிக்கை விடுவதற்கு மட்டக்களப்பு மங்கலராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமங்கள தேரருக்கு எந்த அருகதையும் இல்லை.
புளுக்குனாவையில் 55 சிங்களக் குடும்பங்களும், கெவிழியாமடு பகுதியில் 250 சிங்களக் குடும்பங்களும் போர் காலப் பகுதியில் வசித்து வந்த போது அப்பகுதிகளின் நிர்வாகம் உகனை பிரதேச செயலகத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்தது.
போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் அப்பகுதிகள் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவுடன் இணைக்கப்பட்டிருந்தன. அவர்களுக்குத் தேவையான உதவிகள் பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனை நாங்கள் ஒரு போதும் எதிர்க்கவில்லை.
பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் 24 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. அதில் ஒரு கிராமசேவகர் பிரிவான கச்சக்கொடிசுவாமிமலை பிரிவிலேயே கெவிழியாமடு உள்ளது.
அங்கு மட்டக்களப்பு மங்கலராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமங்கள தேரர் அத்துமீறி அடாவடித்தனமாக 33 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து அங்கு அத்துமீறிய குடியேற்றத்தை உருவாக்கியுள்ளார்.
அவர்களுக்கு வதிவிடத்தை உறுதிப்படுத்தி நிரந்தரமாக்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. அத்துமீறி குடியேறியவர்களுக்கு நிரந்தர வதிவிட சான்றிதழ் வழங்குவது நியாயமற்ற செயலாகும்.
பட்டிப்பளை பிரதேச செயலரை இடமாற்றுமாறு கோருவதற்கு மங்கலராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமங்கள தேரருக்கு எந்த அருகதையும் இல்லை. அவர் பட்டிப்பளையை சேர்ந்தவரும் அல்ல. அதனை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்கு நாங்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.
இரு மாதங்களுக்கு முன்னர் குறித்த தேரர் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் நுழைந்து பிரதேச செயலரைத் தாக்கமுற்பட்டதுடன் அரச சொத்துகளுக்கும் சேதம் விளைவித்திருந்தார்.
இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.
இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்துள்ள நிலையில், குறித்த தேரர் மக்களைத் திரட்டி சிங்கள ராவய என்ற பெயரில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளார்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் எவரும் கெவிழியாமடு பிரதேசத்தை சேர்ந்தவர்களும் இல்லை. வேறு பகுதிகளில் இருந்து மக்களைக் கொண்டுவந்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளார்.
சட்டவிரோதமாக கட்டப்பட்ட வீடுகளுக்கு எவரும் நிரந்தர வதிவிட உறுதிப்பத்திரம் வழங்க முற்பட்டால் அவர்களுக்கு எதிராகவும், இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பௌத்த தேரருக்கு எதிராகவும் மட்டக்களப்பு மாவட்ட மக்களை ஒன்றுதிரட்டி போராட வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாக மாறிவிடும் -என்றார். (ச)

> மட்டக்களப்பு மங்கல ராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமங்கள தேரர் அத்து மீறி அடாவடித் தனமாக 33 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து அங்கு அத்துமீறிய குடியேற்றத்தை உருவாக்கியுள்ளார்.



உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா, கல்முனை மாநகர முதல்வர் எம்.நிசாம் காரியப் பரிடம் கழிவகற்றும் யந்திரத் தொகுதியை வழங்கினார்.

## கல்முனை மாநகர சபைக்கு கழிவகற்றும் இயந்திரத்தொகுதி

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் கல்முனை மாநகர சபைக்கு 35 லட்சம் ரூபா பெறுமதியான கழிவகற்றும் இயந்திரத் தொகுதி வழங்கப்பட்டுள்ளது.
இந்த இயந்திரத்தை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சில் இடம்பெற்றது.
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, கல்முனை மாநகர முதல்வர் எம்.நிசாம் காரியப்பரிடம் குறித்த இயந்திரத்துக்கான ஆவணங்களைக் கையளித்தார். (ச)

## கிணற்றில் தவறி விழுந்து இளைஞன் உயிரிழப்பு

திருகோணமலை, அன்புவழிபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தமது வீட்டுக் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.
மகேந்திரன்மயூரன் (வயது-24) என்ற நபரே நேற்றுமுன்தினம் புதன்கிழமை தமது வீட்டுக் கிணற்றில் குளிப்பதற்காகச் சென்ற போது தவறுதலாக கால் தடுக்கி கிணற்றில் வீழ்ந்துள்ளார்.
தகவல் தெரிந்த குடும்பத்தினர் சுழியோடிகளின் உதவியுடன் இளைஞரைக் கிணற்றில் இருந்து மீட்டு திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போதும், சிகிச்சை பலனின்றி அவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். (ச-40)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 08 . 1928
மறைவு 17 . 02 . 2013



அமரர் வீரகத்தி பொன்னையா

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றன எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்த பந்தங்களின் உணர்வுகள் உறைந்துவிட்டது
உற்றார், உறவினர் உங்களைத் தேடுகிறார்கள்
சகோதரர்களின் இதயங்கள் இயங்கவில்லை ஐயா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரியரசடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
(45407)(7.6.3)

## குற்றம் கண்டுபிடிப்பவர்கள் பதவிக்கு ஆசைப்படுபவர்கள்

### கிழக்கு பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச்7
துணைவேந்தர் பதவிக்கு ஆசைப்படுபவர்களின் செயற்பாடுதான் என் மீதான குற்றம் கண்டுபிடிப்பது என்று கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கி. கோவிந்தராஜா தெரிவித்தார்.
கிழக்கு பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு மட்டக்களப்பு மருத்துவ வளாகத்தில் இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிழக்குப்பல்கலைக்கழகஆசிரியர் சமூகம் என் மீது வீண் குற்றம் சுமத்த முயலுகின்றது. திட்டமிட்ட வகையில் சிலர் என் மீது வீண் பழியைச் சுமத்துகின்றனர்.
கடந்த 3 தசாப்தங்களுக்குப் பின்பு கிழக்கு மாகாண பல்கலைக்கழக செயற்பாடுகள் வளர்ச்சி கண்டுள்ளன.
அதனைப் பொறுக்க முடியாத சில குழுக்கள் வேண்டுமென்றே என் மீதும் நீதியற்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.
எனது முயற்சியால் பல வருடங்களாக பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வந்த ஊழல் முற்றாகத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது-என்றார். (ச-10)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 06.02.2014 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்
அமரர் வேலுப்பிள்ளை நாகரத்தினம்
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை மு.ப.11.00
மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லுவம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.
(45379)(12.3.6)
குடும்பத்தினர்.

# படையினர் மீது குற்றஞ்சாட்டினால் தளபதிகளே முதலில் மின்சார நாற்காலிக்கு செல்ல நேரிடும்

## அதில் தானும் ஒருவன் என்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு,மார்ச் 7

இலங்கை இராணுவம் மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அதற்குப் பொறுப்பானவர்கள் மின்சார நாற்காலிக்கு அனுப்பப்படும் நிலை ஏற்பட்டால், போர்முனையில் இருந்த தளபதிகளுக்கே ஆபத்து ஏற்படும்.

இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார். கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரப்போகும் மாகாண சபைகளுக்கான தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கே அரசு ஜெனிவா அமர்வைப் பயன்படுத்த முனைகிறது.

ஐ.நா மனிதஉரிமைகள் சபை தம்மை மின்சார நாற்காலிக்குக் கொண்டு செல்ல முனைகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். அதெல்லாம் முட்டாள்த் தனம். ஐ.நா மனித உரிமைகள் சபை, எவரையேனும் மின்சார நாற்காலிக்குக் கொண்டு செல்ல முயற்சித்தால், போரில் முன்னணியில் நின்ற இராணுவ ஜெனரல்களையே முதலில் கொண்டு செல்லும்.



சரத் பொன்சேகா

போர் முனையில் நடந்த எல்லாவற்றுக்கும் அவர்கள் தான் முதல் பொறுப்பாளிகளே தவிர, கொழும்பில் அமர்ந்து கொண்டிருந்த அரசியல்வாதிகளல்ல.

**மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்லப்பட்டால் முதலாவது ஆள் நான்தான்**

எனவே போர்க்குற்றச்சாட்டுகளுக்காக எவரேனும் மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்லப்படுவார்களேயானால், முதல் ஆள் நானாகவே இருப்பேன். ஏனென்றால், நானே போருக்குத் தலைமை தாங்கினேன், நானே திட்டமிட்டேன், நானே கண்காணித்தேன், நானே வழிநடத்தினேன், நானே போர்முனைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தேன், நானே உத்தரவுகளை வழங்கினேன்.

எனவே அதுபற்றி நாம் தான் அவர்களை விட அதிகமாக குரல் எழுப்ப வேண்டும்.

ஆனால், இவர்கள் இந்தச் சூழலை வைத்து அரசியல் நலனை அடைய முனைகிறார்கள்.

**எல்லாப் பிரச்சினைக்கும் ஜனாதிபதியே காரணம்**

இத்தகைய சகல பிரச்சனைகளையும் ஆரம்பித்தது இலங்கை ஜனாதிபதிதான்.

போர் முடிந்து இரண்டு வாரங்களில் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ – மூனுடன், இலங்கை ஜனாதிபதி செய்து கொண்ட உடன்பாட்டில், போர்க்குற்றங்கள் நிகழ்ந்திருந்தால், அது குறித்து விசாரித்து பொறுப்புக் கூறலை உறுதி செய்வதாகக் கூறியிருந்தார்.

இதனால் தான் விசாரணை செய்யுமாறு அவருக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்கிறது.

அவர் ஒரு நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்தார். அதன் தலைவராக நியமிக்கப்பட்டவர் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர்.

இப்போதைய சகல பிரச்சினைகளையும் தோற்றுவித்தவர் இலங்கை ஜனாதிபதியே. இப்போது அவர் தமது அரசியல் நலனுக்காக, ஏனைய கட்சிகளே விசாரணையை வலியுறுத்துவதாகக் கூறுகிறார்.

**குற்றம் சுமத்தினால் பதிலளிக்கத் தயார்**

இராணுவத்துக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டால், எவருக்கு முன்பாகவும், எங்கானாலும் சரி, பதிலளிக்க நான் தயாராக இருக்கிறேன்.

இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டது என்பதை என்னால் ஏற்க முடியாது. அதை நான் நிராக்கரிக்கிறேன்.

குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டை அல்லது நம்பகமான ஆதாரத்தை முன்வைத்தால், கடந்த காலத்தில் செய்ததைப் போலவே விசாரணை செய்ய முடியும். ஆனால் அடிப்படையின்றி இராணுவத்தை இழிவுபடுத்த முடியாது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் தேவையில்லை. இந்த நாட்டினால் சொந்தமாக அதைச் செய்ய முடியும்.

ஆனால் அரசு அதைச் செய்யத் தவறினால், அனைத்துலக சமூகம் அமைதியாக இருக்காது–என்றார். (ச)

## மனித உரிமைகள் குறித்த பாடப்புத்தகம் விரைவில்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 7

மனித உரிமைகள் தொடர்பில் பாடப் புத்தகங்களை அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. மேலதிக வாசிப்புப் புத்தகமாக இது வெளியிடப்பட உள்ளது. மனித உரிமைகள் தொடர்பிலான இந்தப் பாடப் புத்தகங்கள் சகல பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்யப்படவுள்ளன என்று கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் செயலரது ஆலோசனைக்கு அமைய நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இந்த நூல் எழுதப்படவுள்ளது. இந்த நூல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரதித் துணை வேந்தர் பேராசிரியர் பிரேம குமார டி சில்வா உள்ளிட்ட புத்திஜீவிகளினால் எழுதப்படவுள்ளது என்று அவர் கூறினார். இந்தப் புத்தகங்கள் தரம் ஐந்துக்கு மேல் கல்வி பயிலும் மாண வர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

எதிர்காலத்தில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கும் மனித உரிமைகள் குறித்த புத்தகமொன்றை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (ச)



இலங்கை வந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அவருக்கு ஜனாதிபதி செயலகத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. (ச)

## அதிகாரிகளின் வீடுகள் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு,மார்ச் 7

மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் வீடுகள் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தின் இரண்டு இடங்களில் இந்த தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் வசந்த ஹபுவாரச்சியின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அவரது வீடு ஜாஎல பமுனுகம பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இதேவேளை, மதுவரித் திணைக்கள விசேட விசாரணைத் திணைக்களப் பிரிவின் பொறுப்பதிகாரியின் வீடு மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அவரது வீடு கொட்டாவ ருக்மல்கந்த பிரதேசத்தில் அமைந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிதி

### இடர் முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 7

வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களுக்கு தலா 10 லட்சம் ரூபா வீதம் வழங் கப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



மஹிந்த அமரவீர

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடி தண்ணீர் வழங்க மேலதிக நிதி வழங்கப்படும். வறட்சியினால் பாதிக்கப்பட்ட நெற் செய்க்கைக்கும் நட்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாவட்ட செயலாளர்களினூடாக தேவையான நிதி வழங்கப்பட்டு வருகிறது. 13 பவுசர்கள் பிரதேசசெயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் காப்புறுதி செய்திருந்தால் உரிய நிவாரணம் வழங்கப்படும், இல்லாவிட்டால் அது குறித்து கணிப்பீடு செய்து நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்–என்றார். (ச)

## தேர்தலில் அரசுக்கு வாக்களித்தால் பள்ளிவாசலை உடைப்பதற்கு சமம்

### நாட்டில் சர்வாதிகார ஆட்சியே நடக்கிறது என்கிறார் அஸாத்சாலி

கொழும்பு, மார்ச் 7

மேல் மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கோ அல்லது அரசுடன் உள்ளவர்களுக்கோ மக்கள் வாக்களிப்பார்களானால் அது பள்ளி வாசலை உடைப்பதற்கு சமமான நடவடிக்கை என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத்சாலி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள மேல் மாகாண சபை தேர்தலில் அரசுடன் அங்கம் வகித்துக் கொண்டு பள்ளிவாசல்களை உடைக்கும் அராஜக சக்திகளுக்கு வாக்களிக்காதீர்கள்.



அஸாத்சாலி

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தி நாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேசத்துக்குப் பொய்யான தோற்றத்தைக் காட்டி வரும் அரசு உள்நாட்டில் கோயில், கிறிஸ்தவ திருச்சபை, பள்ளிவாசல் என்று சிறுபான்மையினர்களின் மதத் தலங்களை உடைக்கின்ற செயற்பாடுகளைக் கண்டும் காணாதது போல் இருக்கிறது.

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி பங்கேற்ற போது இலங்கையில் பள்ளி வாசல்கள் உடைக்கப்படுவது தொடர்பில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி இலங்கையில் அப்படி எதுவும் நடந்தது இல்லை. அது பொய்யான தகவல் என்கிறார்.

ஆனால் நேற்றுமுன் தினம் கூட கடவத்தை வீதியில் உள்ள பள்ளிவாசலில் தொழு வதற்கு நீதிமன்றில் தடை உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் பள்ளிவாசல், கோவில், திருச்சபை போன்ற சிறுபான்மை இன மக்களின் மதத் தலங்களில் தெய்வ வழிபாடு தான் நடத்துகிறோமே ஒழிய கஞ்சா, அபின், சூதாட்டம் எதுவும் நடத்தப்படவில்லை.

இந்த நாட்டில் கஞ்சா கடத்துபவர்கள் குடு வியாபாரம் செய்பவர்கள் எல்லோரும் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஆனால் சிறுபான்மை மக்களுக்கு இறைவனிடம் பிரார்த்தனை செய்வதற்கு கூட சுதந்திரம் இல்லை.

நாட்டின் ஜனநாயகம் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் சர்வாதிகார ஆட்சியை நோக்கியே நாம் பயணிக்கிறோம்- என்றார். (ச-10)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தலைகீழாகக் காட்டும் உத்தி நீண்ட காலத்துக்கு நிலைக்காது

★ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், இலங்கை விவகாரத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென அமைத்த வல்லுநர் குழு முன்னர் வெளியிட்ட அறிக்கையை-பெற்றி தலைமையிலான குழுவின் அறிக்கையை-மீளப்பெற வேண்டும்-

★ நாடுகளுக்கு இடையிலான ஓர் ஆவணமாக அதனைப் பயன்படுத்தக்கூடாது.

● பெற்றி அறிக்கையில் கூறப்பட்ட அம்சங்களை-கணக்கில் எடுத்து-அவற்றை அடிப்படையாகக் கொண்டு-

● ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும்-

● மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையையும் இலங்கை அரசு முற்றாக நிராகரிக்கிறது.

இவ்வாறு மிகக் காட்டமாக, இந்நாட்டு அரசின் வெளி விவகார அமைச்சரும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் பங்குபற்றும் இலங்கை அரச குழுவின் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அங்கு தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பில், கடந்த ஐந்து வருடங்களாக இலங்கை அரசினால் மிகக் காத்திரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேற்குறிப்பிட்ட தீர்மானம் மதிப்பிழக்க வைத்து விட்டதாகவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பொருமினார்.

மனித உரிமைகளைப் பேணும் நாடுகள் மீது குற்றம் சுமத்தப்படும் அதேவேளை அவற்றை, நிலைநாட்டப் பாடுபடும் இலங்கை போன்ற நாடுகளின் ஆக்கபூர்வமான (Positive) செயற்பாடுகளை மனித உரிமைகள் ஆணையாளர் கருத்தில் கொள்வதில்லை என்றும் அமைச்சர் பீரிஸ் சாடியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சுதந்திரமான நீதி நிர்வாகத்தின் கீழ் இல்லாத காரணத்தால் அதன் செயற்பாடுகள் தடம்புரள்கின்றன என்றும் அமைச்சர் குமுறினார்.

அதன் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமக்கு அளிக்கப்பட்ட ஆணையை மீறி, இலங்கை நிலைமை குறித்து ஒரு தலைப்பட்சமானதும் அரசியல் நோக்கம் கொண்டதுமான அறிக்கையை வெளியிட்டுள்ளதாக அவர் கண்டித்துள்ளார்.

இதேவேளை-

இலங்கையில் நீடித்த சமாதானமும் நல்லிணக்கமும் உண்டாக வேண்டுமெனின், மனித உரிமைகள் விடயத்தில் சுதந்திரமான அனைத்துலக விசாரணை மிக அவசியம் என்று-

உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட உலக மூத்தோர் அவையின் தலைவர், தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மன்ட் டுட்டு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கையில் நீடித்த சமாதானமும் நல்லிணக்கமும் உருவாகுவதற்கு, சுதந்திரமான அனைத்துலக விசாரணை ஆணையமே தேவை என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உலக மூத்தோர் அவை சார்பில் அனுப்பிய கடிதத்தில் அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

இலங்கையில் குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்காத கலாசாரமே தொடர்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு தண்டனைகள் பெற்றுக் கொடுப்பதற்கும் அனைத்துலக விசாரணையே அத்தியாவசியம் என்று மூத்தோர் அவை அழுத்தித் தெரிவித்துள்ளது.

அனைத்துலகமும், மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறை கொண்டவர்களும், இலங்கையில் போர் முடிவுற்று ஐந்து ஆண்டுகள் கழிந்த நிலையிலும்-


போரை முடிவுக்குக் கொண்டு வந்த இலங்கை அரசு, மனித உரிமைகளைப் பேணுவதில் வெறும் போலித்தனம் பூண்டு, முகமூடிகளை அணிந்து, உள்ளார்ந்த நோக்கங்களை தன்னுள் சங்கமிக்க வைத்துள்ளது என்பதனைப் புரிந்து கொண்டுள்ளன.

அதன் காரணமாகவே, உலக நாடுகள் பலவற்றினதும், அனைத்துலகப் பிரமுகர்களினதும் கருத்தும் கண்களும் தன்னை ஊடுருவிக் குத்துகின்றன என்பதனை எமது நாட்டு அரசு இப்போதாவது, உணர்ந்து செயற்பட வேண்டிய வேளை இது. ஆனால் அதற்கு மாற்றீடான தனது செயற்பாடுகளையும், அவை பாற்பட்ட கருத்துக்களையும் தலைகீழாகக் கட்டும் உத்தியை இலங்கை கையாள்கிறது. இதனை எல்லாக் காலமும், வேளையும் நீட்டிச் செல்ல முடியாது என்பதனை விரிந்த மனதுடன் நோக்கலாகாதா?

# இன்று ரவூப் ஹக்கீம்; நாளை யார் யாரோ?

சேரலாதன்

ஜனாதிபதி மஹிந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு விடுத்த எச்சரிக்கை அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் ஏனைய சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கும் பொருத்தமானது. தற்போதைய அரசு சிங்கள மக்களின் ஆதரவு இருந்தாலே போதும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. நாட்டின் மொத்த சனத்தொகையில் 75 வீதமானவர்கள் சிங்களவர்கள் என்ற நிலையில் அரசின் இந்த நிலைப்பாடு தொடர்பாக எவரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. மேலும் அரசின் உயர் பதவிகளில் சிங்களவர்களின் ஆதிக்கமே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளை சிறுபான்மையினத்தவர் கனவில் கூட வகிக்க முடியாததொரு நிலையில் இந்த நாடு உள்ளது. அந்த அளவுக்கு இனவாதம் பெரும்பான்மை மக்களிடையே விதைக்கப்பட்டுள்ளது. இதன் அறுவடைதான் நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வருகின்றது. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்ற கொடிய உள்நாட்டுப் போருக்கும் இதுவே காரணமாக அமைந்தது.


ஹக்கீம்


டக்ளஸ்


ஆறுமுகம் தொண்டமான்


ரிசாத் பதியுதீன்


அதாவுல்லா

சிங்கள மக்கள் மத்தியில் இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தவறான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "இந்த நாடு மட்டுமே உங்களுக்கு உரியதாக உள்ளது. வேறு எந்த நாடுகளிலும் உங்களுக்கு இடமில்லை. இதனையும் நீங்கள் இழந்து விடும் நிலையொன்று உருவாக்கப்படுமாயின் கடலில் குதிப்பதைத் தவிர உங்களுக்கு வேறு வழியே இல்லை" இவ்வாறு இனவாதம் பேசும் அரசியல்வாதிகளும், பௌத்த சமயத்தலைவர்களும் திரும்பத்திரும்பக் கூறி வருவதால் பெரும்பான்மையின மக்களின் மனங்கள் சிறுபான்மை யோர் மீது காழ்ப்புணர்ச்சி கொண் டவையாக மாற்றியமைக்கப்பட்டுள் ளன. மேலும் இந்த நாட்டிலே வாழுகின்ற சிறுபான்மையின மக்களை ஒரு சுமையாகவும் அவர்கள் கருதி வருகின்றனர்.

ஆனால் தமது விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மட்டுமே இவர்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையும் ஆளும் தரப்பினருக்கு உண்டு. உதாரணமாக ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கும் மேலாகப் பதவி வகிப்பதற்கு வழி அமைக்கும் 18 ஆவது அரசியல் சாசனத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு சிறுபான்மைக் கட்சிகளே அரசுக்கு உதவி புரிந்தன. குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸின் உதவி காலத்துக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அரசியல் நரித்தனங்களுக்குப் பெயர் போனவர். அவரது மூளை எப்போதுமே எதிர்மறையான விடயங்கள் தொடர்பாகவே சிந்தித்துக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள். இந்த நாட்டின் சர்வாதிகார ஆட்சிமுறைமைக்கு விதித்திட்ட சர்வ அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதிப் பதவி அவரது மூளையில் உருவாகிச் செயலுருவம் பெற்றதுதான். ஆனால் அவர் கூட இரண்டு தடவைகள்தான் அந்தப் பதவியை வகித்தார். நாடாளுமன்றத்தில் அவரது தலைமையிலான கட்சிக்கு மூன்றில் இரண்டுக்கும் மேலான பலம் இருந்த போதிலும் அவர் அரசியல் சாசனத்தில் திருத்தம்

> அரசைப் பொறுத்தவரை கறி சமைப்பதற்குப் பயன்படும் கறிவேப்பிலை போன்றே தம்முடன் ஒட்டிக்கொண்டி ருக்கும் சிறுபான்மைக் கட்சியினரைப் பயன்படுத்தி வருகின்றது.

கொண்டு வந்து மேலும் பதவியில் அமர்வதற்குச் சிந்திக்கவில்லை. ஆனாலும் அப்பட்ட ஜே. ஆர்.ஜயவர்த்தனவே சிந்திக்காத ஒன்றைத் தற்போதைய ஜனாதிபதி சிந்தித்ததன் விளைவாக அரசியல் சாசனத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அவர் தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் அமர்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குச் சிறுபான்மைக் கட்சிகளே முண்டு கொடுத்து உதவியுள்ளன.

இந்த நாட்டைப் பொறுத்த அளவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர்களான ரிசாத் பதியுதீன் மற்றும் அதாவுல்லா தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி மற்றும் சில சிறிய அரசியல் பிரிவினரும் தற்போதய அரசில் அங்கம் வகிப்பதைக் காண முடிகின்றது. எதிர்ப்பு அரசியலால் பயன் ஏதுமில்லை. இதனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கவே முடியாது. ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமாகவே அபிவிருத்தியை எட்டிப் பார்ப்பதற்குக் கூட முடியும் என்ற கருத்துக்களை அவர்கள் அரசுக்கான தமது ஆதரவுக்கான காரணங்களாக முன் வைக்கின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதன் ஸ்தாபகத் தலைவரான தொண்டமான் காலத்திலிருந்தே எந்த அரசுக்கும் ஆதரவளிக்கும் கொள்கையைக் கொண்டு செயற்ப்பட்டு வரு கின்றது. இதனால் நன்மைகள் கிடைக்கிறதோ இல்லையோ அரசுக்கு வழங்கும் ஆதரவில் எவ்வித மாற்றமும் இல்லை. அமைச்சர்களான ரிசாத் பதியுதீனும், அதாவுல்லாவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து புதிய கட்சிகளை ஆரம்பித்தவர்கள். ஆரம்பத்தில் இருந்து இவர்கள் அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் எட்டி நின்றது. பின்னர் வேறு வழியின்றி அரசுடன் இணைந்து கொண்டது. அமைச்சர் டக்ளஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவுகளைப் பேணுவதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சி அமையும் போது அமைச்சரவையில் இவருக்கு நிச்சயமாக ஓர் இடம் கிடைக்கும். அவரும் தமது விசுவாசத்தை அரசுக்கு அதீதமாகவே காட்டிக் கொள்வார்.

இவர்கள் அனைவரும் அரசுடன் இணைந்து கொண்டதால் உருப்படியாக எதனைச் சாதிக்க முடிந்தது என்ற வினா எழுமாயின், விடை பூச்சியம் என்றுதான் கிட்டும். தலைவர்களுக்கு ஏதாவது நன்மைகள் கிடைத்திருக்கலாம். ஆனால் மக்கள்தான் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள்.

அரசைப் பொறுத்தவரை கறிக்குச் சுவையூட்டும் பயன்படுத்தப்படும் கறிவேப்பிலை போன்றே அது தம்முடன் ஒட்டிக்கொண்டி ருக்கும் சிறுபான்மைக் கட்சியினரைப் பயன்படுத்தி வருகின்றது. மேலும் இவர் கள் தன்னைப் பார்த்துக் கேள்வி எழுப் பாத வகையில் பார்த்துக் கொள் கின்றது. இதனால் அரசு சொல்வதற்கெல்லாம் தமது தலைகளை ஆட்டுவதைத் தவிர இவர்களால் வேறொன்றும் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டா விருந்தாளியாக நோக்கப்படுகின்றது. நாளைக்கு ஏனையவர்களுக்கும் இந்த நிலை ஏற்படலாம்.

எனவேதான் அற்ப சலுகைகளுக்காக நிபந்தனையற்ற வகையில் சரணாகதி அடைந்து அவமானப்படுவதை இனியாவது சிறுபான்மையினக் கட்சிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தாம் சார்ந்த மக்களின் தேவைகளையும், உரிமைகளையும் துணிவுடன் கோரி நிற்க முடியும். இவை உடனடியாகச் சாத்தியம் ஆகாது விட்டாலும் காலப்போக்கில் பயன் தரவே செய்யும். சிறுபான்மைச் சமூகங்களும் இந்த நாட்டின் ஓர் அங்கமாகவே திகழ்வதுடன் சகல உரிமைகளையும் பெறுவதற்கான கடப்பாட்டையும் கொண்டுள்ளன. ஆகவே இனியாவது இவர்கள் விழித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் துணிவுடன் நிமிர்ந்து நிற்க முடியும்.

செவ்வி கண்டவர் - தனம்

# மரக்கன்றுகளில் நல்ல இனங்களை உருவாக்க உதவும் ஒட்டுத்தொழில்

## ஒட்டுக் கன்றுகளைச் சுமந்து சென்று விற்பனை செய்துவரும் ஒட்டுசுட்டான் தட்டையர்மலையைச் சேர்ந்த கந்தையா சிவராசா கூறுகிறார்

இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக மரக்கன்றுகளை ஒட்டி விற்பனை செய்து வருகிறேன். ஆனால் இதன் மூலமாக சிறந்த பயனைப் பெற எவரும் உதவுவதில்லை. இவ்வாறு கவலையுடன் தெரிவித்தார் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சரவணா பண்ணையைச் சேர்ந்த கந்தையா சிவராசா.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், தட்டையர்மலை ஒட்டுசுட்டானை வதிவிடமாகவும்கொண்ட நான், கடந்த 25 வருடங்களாகவே மாங்கன்று, பலாக்கன்று மற்றும் தோடை, தேசி, மாதுளை ஆகியவற்றின் விதைகளை நாற்றிட்டு அவற்றில் வேறு இனங்களை ஒட்டுவதன் மூலமாகப் பெறப்படும் ஒட்டுக் கன்றுகளை விற்பனை செய்து வருகின்றேன். எனக்கு முல்லை மாவட்டத்தில் சிறந்த ஒட்டுக்கன்றுகளை உருவாக்குவதற்கான அரச அனுமதியும் கிடைத்துள்ளது.

ஆனால் நல்ல விதை இனங்களைப் பெறுவதற்கான வசதிகள் என்னிடம் இல்லை. அத்துடன் அதற்குத் தேவையான பணவச தியும் இல்லை. இதற்கு எவரும் உதவ முன் வரவில்லை. இதனால் குறைந்த வருவா யையே பெறமுடிகின்றது.

நீங்கள் எவ்வாறு ஒட்டுக்கன்றுகளைத் தயார் செய்கின்றீர்கள்?

சிறந்த விதைகளை எங்கு பெறுகிறீர்கள்? எனக் கேட்டபோது;

எட்டுத் தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலான தேசி, தோடை, பலா, மா போன்ற மரங்களில் இருந்து நான் விதை நாற்றுகளைத் தெரிவு செய்கின்றேன். அவற்றை நான் மேடையிட்டு இயற்கை உரமிட்டு நீர் ஊற்றி வளர்த்தெடுக்கின்றேன். மாமரங்களைப் பொறுத்தவரை கறுத்தக்கொழும்பான், விலாட்டு, வெள்ளைக் கொழும்பான் போன்ற இனங்களை ஒட்டுவ தற்கு முற்றிய மரங்களைத் தேர்ந் தெடுத்து அவைகளில் உள்ள கிளைகளில் சிறந்தவற் றைத் தேர்வு செய்து அவற்றின் இலைகளை உடைத்து விட்டு 21 நாள்கள் சென்றதும் அதற்குரிய கத்தியினால் அதனைக் கத்தரித்து என்னால் போடப்பட்ட முற்றிய நாற்றுகளில் உரிய முறைப்படி ஒட்டுவேன். ஒட்டியவற்றை 21 நாள்கள் நன்கு பராமரித்து தழைக்கத் தொடங்கியதும் அவைகளை ஊர் ஊராகச் சென்று விற்று வருவேன். இது தவிர தோடை, தேசி என்பவற்றை விளாத்திக் கன்றுகளிலும் ஒட்டுவதால் அவை கூடுதலான பயனைக் கொடுக்கும் தன்மையுடையவாக விளங்கும். முன்பு மேடைகளில் வைத்தே ஒட்டி விடுவேன். ஆனால் தற்போது பைக்கற்றுகளில் நாற்றிட்டு அவைகளை வளர்த்து அவைகளிலே கிளைகளை ஒட்டி வருகிறேன். (பைக்கற்றுகளில் நட்டு வைக்கப்பட்ட மாங்கன்றுகளை காண்பிக்கிறார்.)

கூலி ஆள்களுக்கு கொடுப்பனவை எவ்வாறு ஈடுசெய்கின்றீர்கள் எனக் கேட்ட போது;

கூலி ஆள்கள் இல்லாது என்னால் ஒன்றுமே செய்ய முடியாது. கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு சிலரை உதவியாளர்களாக வைத்துள்ளேன். விதைகளை தெரிந்தவர்கள் மூலம் கடன் அடிப்படையில் வாங்கி பணத்தைப் பின்பு கொடுப்பேன். இந்தத் தொழிலில் சுயமுயற்சியாக நல்ல வருவாயைப் பெறலாம் .ஆனால் அதற்குரிய செலவுகளுக்கு விவசாயப் பகுதியோ அல்லது வங்கிகளோ கடன் அடிப்படையில் பணத்தை வழங்கினால் மேலும் சிலருக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும். அத்துடன் நானும் நல்ல வருவாயைப் பெற்றுக் கொள்வதுடன் நல்லினப் பழக்கன்றுகளை எமது மாவட்டத்தில் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



இவற்றை விற்பனை செய்வது தொடர்பாகக் கேட்டபோது என்னிடம் எவரும் மொத்தமாகக் கொள்வனவு செய்வதில்லை. நான் எனது துவிச்சக்கர வண்டி மூலம் ஐந்து தொடக்கம் 10 வரையான கன்றுகளைக் கொண்டு சென்று சராசரியாக மாங்கன்று ஒன்றை நூறிலிருந்து நூற்றி ஐம்பது ரூபா வரை விற்பனை செய்வேன். ஏனைய கன்றுகளும் இவ்வாறே விற்பனை செய்யப்படுகின்றன. சிலர் தற்போது மொத்தமாகவும் இவற்றைக் கேட்கின்றனர். அவ்வாறு வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் இவர் செய்து வருகிறார். இதனை ஏனைய ஆர்வ முள்ளவர்களுக்குக் கற்றுக் கொடுப்பீர்களா எனக் கேட்டபோது; தாராளமாக; விரும்பி வருபவர்களுக்கு கற்றுக் கொடுக்க ஆயத்தமாக உள்ளேன் என அவர் தெரிவித்தார்.

---

# தவக்காலச் சிந்தனை

## சமமான வாழ்வு பெறுவோம்

இன்று இந்த ஆண்டின் தவக்காலத்தின் முதல் வெள்ளி. பொதுவாக தவக்காலத்தின் வெள்ளிக்கிழமை சிறப்பான உபவாசத்தின் நாள். தவக்காலமானது ஒத்தமை நற்செய்தி என அழைக்கப்படும். மத்தேயு, மார்க்,லூக்காஸ் நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் இயேசு வனாந்தரத்தில் 40 நாள்கள் செபத்திலும், தபத்திலுமிருந்து சோதிக்கப்பட்ட நாள்களை நினைவு கூர்வதாக அமைகிறது.

தவக்காலத்தில் மனித உடலின் ஒன்றுமில்லாத் தன்மையை உணர்ந்து, நமது ஆன்மிக நித்திய வாழ்வைக் கட்டியெழுப்பும் வழிகளைக் காட்டுகின்ற காலமாகும்.

உண்ணாமல் இருப்பது, அடிக்கடி ஆலயம் செல்வது, விவிலியம் வாசிப்பது, செபமாலை செபிப்பது, இறைச்சி உணவைத் தவிர்ப்பது, தொலைக்காட்சி பாராமல் இருப்பது, தியானம் செய்வது, ஊருக்கு கஞ்சி காய்ச்சி ஊற்றுவது, தரைவழி, கடல் வழி திருயாத்திரையாக ஆலயங்களுக்கு செல்வது, நடைபயணம் மேற்கொள்வது, நிதிதிரட்டி ஏழைகளுக்குக் கொடுப்பது போன்ற செயல்களைச் செய்வதன் மூலம் மக்களாகிய நாம் நோன்பு இருக்கிறோம். இவைகள் நாம் இறைவனை நோக்கிச் செல்ல எடுத்துக் கொண்ட வழிகளாகும். இவைகளோடு மட்டும் நாம் திருப்தி கொண்டுவிடக் கூடாது.

இறைவன் முக்கியத்துவம் கொடுக்கும் நோன்பு என்னவெனில் சமூக நீதியும், அன்பும் என்று இரு பண்புகளை எசாயா இறைவாக்கினர் என்று குறிப்பிடுகிறார். இன்று நாம் வாழும் சமுதாயத்தில் இல்லார்க்குக் கொடுக்கும் பண்பும், தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்று ஓரங்கட்டப்பட்டவர்களுக்கு நல்வாழ்வும், அநியாயமாக சிறைகளில் வாடுவோருக்கும், நீதிக்காக போராடுவோருக்கும் விடுதலையும் நீதியும் கிடைக்க ஆவன செய்வதுமாகும்.

தோலகட்டியில் ஆச்சிரமத்தை அமைத்த இறையடியார் தோமஸ் அடிகளாரை இதற்கு ஒரு சிறந்த மாதிரியாகக் காண்கின்றோம். அவர் இறைவனோடு ஒன்றித்த நோன்பு நிறை தவ வாழ்வை வாழ்ந்ததோடு சாதிக் கொடுமைகளி னாலும் பல்வேறு சமூக அழுத்தங்களினாலும் ஒடுக்கப்பட்டு வாழ முடியாமல் அந்த நாள்களில் (1928-1960) கஷ்டப்பட்ட மக்களுக்கு தனது தோலகட்டி ஆச்சிரமத்தில் பல்வேறு வேலைகளை ஏற்படுத்தி அவர்களுக்கு வேலைவாய்ப் பும், நல்வாழ்வுக்குப் பயிற்சிகளும், தொழிற் பயிற்சிகளும், நல்லொழுக்க கல்வியூட்டலும் கொடுத்து அவர்களுக்கு இன்றைய சமுதாயத்தில் ஒரு விடுதலை வாழ்வும் மற்றவர்களோடு சமமான வாழ்வும் பெற இயேசுவின் பாதையில் வழி வகுத்தார்.

*அருட்பணி அ.ம.ஸ்ரீபன், செ.தா.*
*அருள்ஆச்சிரமம் கோயில் வீதி, யாழ்.*

---

வாசகர் திருமுகம்

# சிவன் கோயில் முன் வீதியைப் புறக்கணிப்பது ஏன்?

782,786,785 ஆகிய வழித்தடங்கள் பொறிக்கப்பட்ட காரைநகர் செல்லும் இ.போ.ச. பஸ்கள் யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரி வீதி- கஸ்தூரியார் வீதி- ஸ்ரான்லி வீதி- கே.கே.எஸ். வீதி (சிவன் கோயில் முன் வீதி), சிவன் வடக்கு வீதி- மானிப்பாய் வீதியால் பயணிப்பது வழக்கமான நடைமுறையாகும்.

தனியார் பஸ்களும் இந்தப் பாதையையே பயன்படுத்துவதைக் காணலாம். ஆனால் சில இ.போ.ச. பஸ்கள் சிவன் கோயில் வீதியாலும், சில பஸ்கள் பின் வீதியாலும் செல்கின்றன. இதனால் அரச, தனியார் ஊழியர்கள், தனியார் வகுப்புகளுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள் பஸ்ஸைப் பிடிப்பதற்கு சிரமப்பட வேண்டியுள்ளது.

எனவே சாலை முகாமையாளர் இதைக் கவனத்தில் கொண்டு யாழ். மத்திய நிலையத்திலிருந்து புறப்படும் காரைநகருக்கான அரச போக்குவரத்துச் சேவையை சிவன் கோயில் முன் வீதியால் பயணிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டால் பிரயாணிகளின் சிரமங்களை தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

மேலும் காலை 8 மணிக்குப் புறப்படும் 786 ஆம் இலக்க பஸ் சில வேளைகளில் சிறியதாகவும் ஒற்றைக் கதவு உள்ளதாகவும் காணப்படுவதால் பிரயாணிகள் சிரமமடைவதோடு உடல் உபாதைக்கும் உள்ளாகிறார்கள். ஆகவே கூடியளவில் பெரிய பஸ்களை சேவையில் ஈடுபடுத்தினால் பிரயாணம் இலகுவாக அமையும்.

அத்துடன் காலை 8 மணிக்குப் புறப்படும் 786 ஆம் இலக்க பஸ் யாழ். மத்திய பஸ் நிலையத்தை வந்தடைய 9.20 மணி ஆகிறது. அதையும் 9 மணிக்கு பஸ் நிலையத்துக்கு வரும் வகையில் செய்தால் தனியார், அரச ஊழியர்கள், வர்த்தக நிலையங்களில் பணி புரிவோர் நன்மையடையக் கூடியதாக இருக்கும். மேலும் பருவகாலச் சீட்டுக்களைப் பாவிப்பவர்களும் நன்மை அடைவார்கள்.

*வே. அன்னலிங்கம்*
*மூளாய்.*

---


# பதில் தருவார்களா?

எமது அச்சுவேலிப் பிரதேசத்தில் கலை, பண்பாட்டு பேரவை உருவாக்கப்பட்டு அந்தப் பேரவையினால் கலாசார விழாவொன்று கடந்த 2012 நவம்பர் 20 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் அந்த விழாவை நடத்துவதற்கு பொது மக்களிடம் பணம் சேகரிக்கப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டது. இந்த விழாவில் அச்சுவேலிப் பிரதேசத்தின் கலாசார விழுமியங்களை உள்ளடக்கியதாக புத்தக வெளியீடும் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் பேரவையின் நிர்வாகக் கூட்டம் கூட்டப்பட்டு வடமாகாண சபை முதலமைச்சரை கலாசார விழாவுக்கு பிரதம விருந்தினராக அழைப்பதென முடிவு செய்யப்பட்டது. முதலமைச்சரின் சம்மதமும் பெறப்பட்டது.

ஆனால் பிரதேச செயலர் முதலமைச்சரைப் பிரதம விருந்தினராக அழைக்க வேண்டாம் எனவும் பிரதேச செயலகம் மத்திய அரசின் கீழ் வருவதால் மத்திய அமைச்சரொருவரை அல்லது அரசுத் தலைவரை பிரதம விருந்தினராக அழைக்குமாறும் கூறினார். பிரதேச செயலருக்கு தாம் விரும்பிய அரசியல்வாதியை அழைக்குமாறு கூறுவதற்கு எந்தவிதமான உரிமையுமில்லை. இந்த நிலையில் பிரதேச செயலரினால் அச்சுவேலி கலை கலாசார விழா காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக கிராம சேவையாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அச்சுவேலியான்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்கவேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். உறவினர், நண்பர்களின் பேச்சும், செயற்பாடுகளும் உங்களுக்குப் பிடிக்காமல் போகும்.



**இடபம்:** முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் உயரதிகாரியைக் கலந்தாலோசித்து முடிவெடுப்பது நல்லது.



**மிதுனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.



**கடகம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.



**சிங்கம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். உடன் பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.



**கன்னி:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**துலாம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்கநிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**விருச்சிகம்:** பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.



**தனுசு:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**மகரம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.



**கும்பம்:** அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். தந்தை வழிச் சொத்திலிருந்த பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். ஆடம் பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**மீனம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.

## நாளை

**மாசி-24 சனிக்கிழமை | 08.03.2014**

திதி: ஸப்தமி மு.ப.10.06 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.இ.09.21 வரை

சுபநேரம்: 03.24-04.54 வரை
இராகுகாலம்:.09.24-10.54 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## மதத்தின் உண்மை


மதத்தைக் குறித்த மாபெரும் கேள்வி: மதம் விஞ்ஞான ரீதியில் அமையாதது ஏன்? மதம் ஒரு விஞ்ஞானம் என்றால், ஏன் மற்ற விஞ்ஞானங்களைப் போல் நிச்சயமானதாக அது இல்லை. கடவுள், சுவர்க்கம் முதலியவை பற்றிக் கூறப்படுவன எல்லாம் வெறும் நம்பிக்கை; அனுமானம்; அதைப்பற்றிய முடிவான கருத்து ஒன்றுமில்லை என்று தோன்றுகின்றது. மதத்தைப் பற்றிய நம்முடைய கருத்துகள் எந்நேரமும் மாறிக் கொண்டே இருக்கின்றன. மனம் எப்போதும் மாறிக் கொண்டிருக்கும் நிலையிலேயே இருக்கிறது. மனிதன் மாறுதலற்ற ஆன்மாவா? அல்லது ஓயாது மாறிக் கொண்டிருக்கும் பொருளா? மிகப் புராதன புத்தமதம் தவிர ஏனைய மதங்கள் எல்லாம் அழிவில்லாததும், என்றும் இருப்பதும், இரண்டற்று விளங்குவதுமாகிய ஆன்மாவே மனிதன் என்று கூறுகின்றன.

மனிதன் ஓயாது மாறுதல் அடைந்து கொண்டிருக்கின்றான் என்பதும், அவனுடைய அறிவிலும் எண்ணற்ற மாறுதல்கள் எல்லையின்றி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதும், இந்த மாறுதல் ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்பில்லாதவை என்பதும், புராதன புத்த மதத்தினரின் நம்பிக்கை. இது, காரணகாரிய நியதித் தத்துவத்துக்கு முரண்பட்டது.

இரண்டற்ற ஆன்மா ஒன்று உண்டாயின் பொருளும் உண்டு. ஆன்மா எப்பொழுதும் தனித்திருப்பது . அது மற்றொன்றுடன் கலவாது. எதையும் நாடாது. அது தனித்தே விளங்குவது; அழியாதது.

ஆனால் புராதன புத்த மதத்தினரோ இந்த உலகில் எப்பொருளும் மற்றொன்றுடன் தொடர்பில்லாதது என்று கூறுகின்றனர். "இரண் டற்றது என்று ஒன்றில்லை. மனிதன் ஒரு ஆன்மா என்பது வெறும் நம்பிக்கையே. அதை நிரூபிக்க முடியாது" என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

# பழைமைவாய்ந்த வைரஸ் கண்டுபிடிப்பு



பிரான்ஸில் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மிகப் பழைமையான வைரஸை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பித்தோவைரஸ் சைபர்கம் (Pithovirus sibericum) என்ற இந்த வைரஸ் 1.5 மைக்ரோமீற்றர் நீளம் கொண்டது.

30,000 ஆண்டுகளுக்கு முந்தைய இந்தப் பழைமை வாய்ந்த வைரஸ், ஏனைய வைரஸ்களைப் போன்று விலங்குகளிடையேயும் மற்றும் மனித செல்களிலும் தொற்றுநோயைப் பரப்பிப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று விஞ்ஞானிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆர்மிக்சிலி பல்கலைக்கழக (National Center of Scientific Research (CNRS) தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் ஜீன் மைகில் கிலாவெரி கூறுகையில், இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் பித்தோ சக்தி வாய்ந்ததாக இருந்து, அமீபா போன்ற உயிரினங்களைத் தாக்குகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதுகுறித்த விரிவான ஆய்வை தேசிய அறிவியல் அக்கடமி (Proceedings of the National Academy of Sciences (PNAS) வெளியிட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்கலளயும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 4 | | | 8 | | 9 |
| 3 | | 2 | 1 | | 8 | | | |
| | | 9 | 6 | | | | 2 | |
| 7 | | | | 4 | | | 1 | 5 |
| | | 3 | 8 | 7 | 9 | 6 | | |
| 6 | 9 | | | 1 | | | | 3 |
| | 3 | | | | 1 | 5 | | |
| | | | 7 | | 5 | 2 | | 4 |
| 2 | | 5 | | | 4 | | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 6 | 5 | 4 | 8 | 7 | 2 | 1 |
| 4 | 8 | 7 | 6 | 2 | 1 | 3 | 5 | 9 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 8 | 6 | 4 |
| 2 | 5 | 9 | 8 | 7 | 4 | 6 | 1 | 3 |
| 3 | 6 | 1 | 9 | 5 | 2 | 4 | 7 | 8 |
| 8 | 7 | 4 | 1 | 3 | 6 | 2 | 9 | 5 |
| 6 | 9 | 2 | 4 | 1 | 3 | 5 | 8 | 7 |
| 5 | 4 | 8 | 7 | 6 | 9 | 1 | 3 | 2 |
| 7 | 1 | 3 | 2 | 8 | 5 | 9 | 4 | 6 |



அனைத்து Fitbit கைப்பட்டிகளையும் அதனைத் தயாரித்த நிறுவனம் மீளப்பெற்றுக்கொள்ளுகின்றது.

# Fitbit கைப்பட்டி விற்பனை அதிரடியாக நிறுத்தம்

உடலின் ஆரோக்கியத்தைக் கண்காணித்து அதனை மேம்படுத்த உதவும் நவீன இலத்திரனியல் சாதனங்களுள் ஒன்றான (Fitbit) விற்பனை அதிரடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் அனைத்து 'பிற்பிற்' கைப்பட்டிகளையும் அதனைத் தயாரித்த நிறுவனம் மீளப்பெற்றுக்கொள்ளவுள்ளது.

இதனைக் கையில் அணியும்போது உண்டாகும் தோல் பிரச்சினையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வு கண்ட பின்னர் மீண்டும் அந்தக் கைப்பட்டி விற்பனைக்கு விடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# ஹுவாவெய் (Huawei) அறிமுகப்படுத்தும் புதிய ஸ்மார்ட் கடிகாரம்

தற்போது பிரபலமாகி வரும் ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் Huawei நிறுவனமும் இணைந்துள்ளது.

அந்தவகையில் தனது புதிய கடிகாரத்தை அறிமுகம் செய்யவுள்ளது.

பார்சிலோனியாவில் இடம்பெறவுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான மொபைல் வேர்ள்ட் காங்கிரஸில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கடிகாரத்தின் புகைப்படங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.


எனினும் இதன் விலை, ஏனைய சிறப்பம்சங்கள் என்பன குறித்த விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யூடியூப் காணொலிகளை GIF (கிப்) கோப்பாக மாற்றுவதற்கு

உலகின் முன்னணி காணொலிகளை பகிரும் தளமாகக் கருதப்படும் யூ டியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள காணொலி கோப்புக்களை கிவ் கோப்புக்களாக மாற்றுவதற்கு Gifff.fr (http://gifff.fr/) என்ற இணையத்தளம் உதவி செய்கிறது. இந்தத்தளத்துக்குச் சென்று நீங்கள் கிவ் கோப்பாக மாற்றவேண்டிய வீடியோவின் யூடியூப் URL இனை உட்புகுத்தி Enter கீயை அழுத்த வேண்டும். அதன் பின்னர் தோன்றும் விண்டோவில் தேவையான பகுதிகளைத் தேர்ந்தெடுக் கும் வசதி காணப்படுகின்றது. அதேபோல செட்டிங்ஸ் செய்யும் வசதியும் காணப்படுகின்றது.

இவற்றைத் தெரிவு செய்ததன் பின்னர் Make it So என்பதனை அழுத்தி செயன்முறை முடிந்த பின்னர் Download Now என்பதை அழுத்தி தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

# விக்கிபீடியா புத்தகமாக வெளிவரவிருக்கும்




கட்டற்ற களஞ்சியமாக திகழும் விக்கிபீடியா இணையத்தளம் லட்சக்கணக்கான கட்டுரைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இணையத்தளத்தில் காணப்படும் இந்தக்கட்டுரைகளை புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 1,000 பதிப்புக்களாக வெளியிடவுள்ள பீடியா பிறெஸ் (Pedia Press) ஆனது இதற்கு 50,000 டொலர்கள் தேவைப்படும் என்று எதிர்பார்க்கின்றது. இதற்குத் தேவையான நிதியை சேர்க்கும் நோக்கில் இன்டிகோகோ (Indiegogo) என்ற இணையத்தளத்தினூடாக அது பரப்புரையை ஆரம்பித்துள்ளது.

# நவீன தொழில் நுட்பத்துடன் அறிமுகமாகும் கலக்ஸி கமரா-2




சம்சுங் நிறுவனம் 16.3 மெகாபிக்சல்களைக் கொண்ட கமராவை அறிமுகம் செய்துள்ளது.

2014 ஆம் ஆண்டுக்கான இலத்திரனியல் கண்காட்சியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள கலக்ஸி கமரா-2 என்ற கமரா கூகுளின் அன்ரோயிட் 4.3 ஜெல்லிபீன் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

மேலும் 23மி.மி. விரிந்த கோணம் உடைய வில்லை, 21 X ஒப்டிக்கள் ஸூம், என்பனவற்றுடன் 4.8 அங்குல அளவுடைய திரை, 8 ஜிபி சேமிப்பு நினவகமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் microSD கார்ட்டின் உதவியுடன் சேமிப்பு நினைவகத்தினை 64 ஜிபி வரை அதிகரிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# மின்னஞ்சல் சேவையை நிறுத்தும் பேஸ்புக்

உலகிலுள்ள பில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களை தன்னகத்தே கொண்ட பேஸ்புக் சமூகவலைத்தளம், தனது மின்னஞ்சல் சேவையை நிறுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. facebook.com என்ற ஆள்களக்குறியீட்டுடன் (Domain) கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த மின்னஞ்சல் சேவையை தனது பயனாளிகளுக்காக பேஸ்புக் அறிமுகம் செய்திருந்தது.

எனினும் பேஸ்புக் நிறுவனம் எதிர்பார்த்ததைப் போன்று இந்த மின்னஞ்சல் முகவரிகளை பெருமளவான பயனாளிகள் பயன்படுத்துவதில்லை. இதன் காரணமாகவே தனது மின்னஞ்சல் சேவையை நிறுத்துவதாக அது அறிவித்துள்ளது. இதற்கிடையில் பேஸ்புக் நிறுவனம் 10 பில்லியன் டொலர்கள் கொடுத்து WhatsApp ஐ கொள்வனவு செய்துள்ளமை தெரிந்ததே.

facebook

# Netflix வழங்கவுள்ள ஆகாயவழி விநியோக சேவை

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்களை இணையத்தளத்தில் கண்டுகளிக்கும் வசதியை வழங்கும் Netflix நிறுவனம் இறுவட்டுகளை விநியோகம் செய்யும் சேவையையும் செய்து வருகின் றது. இந்நிறுவனம் தற்போது Drone Delivery Service எனும் ஆகாயவழி மூலமான வழங்கல் சேவையை மேற்கொள்ளவுள்ளது. இதற்கு முன்னர் அமேசான் நிறுவனமே இந்த சேவையை அறிமுகம் செய்திருந்தது. அதன்பின்னர் குறுகிய காலத்தில் Drone Delivery சேவையை தானும் அறிமுகம் செய்வதாக Netflix நிறுவனம் தற்போது அறிவிப்பை வெளியிட்டுள்ளது.



Drone 2 Home என பெயரிடப்பட்டுள்ள இச் சேவையின் மூலம் விரைவான வழங்கலை மேற் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF SCIENCE**

Senior Professor / Professor in
**Physics/Chemistry (Physical/Organic/Inorganic) / Mathematics / Statistics / Botany / Computer Science**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in **Mathematics/ Statistics / Physics / Chemistry/ Computer Science* / Fisheries**

**Note**: *Preference will be given to those who have teaching / research experience in the area of **high performance computing** for the appointment of Senior Lecturer in Computer Science.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67100 – 11x1425 – 82775/-p.m |
| Professor | Rs.56505 – 13x1310 – 73535/-p.m |
| Senior Lecturer Gr. I | Rs.45545 – 7x1050 – 52895/-p.m |
| Senior Lecturer Gr. II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance
- Senior Professor/ Professor – 90% of the basic salary
- Senior Lecturer Gr.I/Gr.II – 85% of the basic salary
- Lecturer (Probationary) – 65% of the basic salary

ii) Special allowance - 20% of the basic salary

iii) Cost of living allowance of Rs.7,800/-p.m.
Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii. Gratuity payments
iv. Employees' Trust Fund benefits.
v. Free Medical Services.

**Closing date:**

**Post of Senior Professor/Professor - 09.06.2014**

**Other posts - 21.04.2014**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
06.03.2014

(C/12607)(2.6.3)

## குடைச் சுவாமிகளின் குருபூசை தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
கோண்டாவில் குருதேவர் கந்தையா சுவாமி களின் (குடைச்சுவாமிகள்) 36 ஆவது வருடாந்த குரு பூசை கோண்டாவில் கிழக்கு அற்புதநர்த் தன விநாயகர் கோயிலில் அமைந்துள்ள சமாதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல், விசேட அபிஷே கம், அன்னதானம் என் பவற்றுடன் நடை பெறும்.
குருதேவரின் அடி யார்கள் குருபூசையில் பங்குபற்றுமாறு ஆலய பரிபாலன சபை யினர் அறிவித்துள் ளனர். (ஒ)

## பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 7
வடக்கு, கிழக்கு திருச் சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவ போதகர்கள் ஒன்றிணைந்து "முழு உலகுக்கும் ஆசீர்வா தமான இலங்கைத் தேசம்" என்ற தொனிப் பொருளில் தேசத்துக் கான பிரார்த்தனை நிகழ்வை இன்றும், நாளையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை அரியாலை சனசமூக நிலையத்தில் நடத்துகின்றனர். (ஒ)

## ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 7
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட் டுப் பேரவை சந்நிதி யான் ஆச்சிரம மண்ட பத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்றுவெள்ளிக்கிழமை முற்பகல்10.30மணிக்கு "கீதை காட்டும் பாதை" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும்.
யாழ்ப்பாணம் சின் மயாமிஷனைச்சேர்ந்த ஜாக்கிரத் சைதன்யா சுவாமிகள் சொற் பொழிவை நிகழ்த்து வார். (ஒ-173)

## இலவச குரலிசைப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்ப்பாண சின்மயா மிஷன் நடத்தும் இல வச குரலிசைப் பயிற்சி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சின்மய ஞான வேல்மண்டபத்தில்நடை பெறவுள்ளது.
இசைக்கலாமணிவர் ணராமேஸ்வரன் இந் தப்பயிற்சியை வழங்க வுள்ளார். (வ-14)

**நெல் கொள்வனவு**

சகல விதமான நெல் வகைகளும் கொள்வனவு செய்யப்படும்.
மாப்பியன் மில், சுதுமலை. (45327)(7.6.3)

**வாடகைக்கு உண்டு**

அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீமுருகன் மரக்காலை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 817 5926/ 077 803 0659
(46337)(45.6.3)

**இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்**
**பொதுக்கூட்டம்- 2014**



மேற்படி கூட்டம் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் எஸ்.என்.செல்வராஜா தலைமையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அம்பாள் ஆலய உபயகாரர்கள், அங்கத்தவர்கள், தொண்டர்கள், அடியவர்கள் அனைவரையும் பொதுக்கூட்டத்தில் கலந்து அம்பாளின் ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

செயலாளர்
அறங்காவலர் சபை, இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்- கிளிநொச்சி.
(43545) (3.6.4)



ஏழாலை மத்தி ஏழாலை
வசந்தி கோயிலென விளங்கும்
அருள்மிகு பத்திரகாளி அம்மன் திருக்கோயில்

**வருடாந்த மஹோற்ஷவ விழா - 2014**

நிகழும் மங்கலகரமான விஜய வருஷம் மாசி மாதம் 24ஆம் நாள் இன்று(07.03.2014) வெள்ளிக்கிழமை கார்த்திகை நட்ஷத்திரமும், பூர்வபக்க பஞ்சமித் திதியும், மாகேந்திர யோகமும் கூடிய சுபவேளையில் நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்று வைபவம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

பிரதம சிவாச்சாரியார்: புன்னாலைக் கட்டுவன்
**சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் J.P**

தொடர்ந்து 11 நாள்கள் தினசரி காலை 08 மணி முதல் ந.ப.12 மணி வரை விசேட பூஜைகளும் நடைபெற்று, அம்மன் எழுந்தருளி வீதி வலம் வருவார்.
17.03.2014 திங்கட்கிழமை உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்ஷவம் நடைபெற்று பி.ப.05 மணிக்கு கொடியிறக்கும் வைபவம் நடைபெறும்.
07.04.2014 8ஆம் திங்கள் திருக்குளிர்த்தி நடைபெறும்.
குறிப்பு: நேர்த்தி செய்ய விரும்பும் அடியவர்கள் தங்கள் நேர்த்திகளைச் செலுத்தவும்.
அடியவர்கள் ஆசாரசீலர்களாக அம்பாளுக்குப் பல தொண்டுகள் செய்தும் அபிஷேகத்துக்குரிய பூ, பூமாலை, பால், தேங்காயெண்ணெய், தயிர், செவ்விளநீர் பழவகை போன்றவற்றை காலை 07 மணிக்குக் கொடுத்து உதவவும்.

ஆலய பரிபாலகர் வசந்தி அம்மன் (45394)(12.3.6)

# Jaffna Wedding Fair 2014

யாழ் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரபல திருமண சேவைகள் வழங்குவோர் மற்றும் ஒழுங்கமைப்பாளர்களை ஒரே கூரையின் கீழ் பார்வையிட ஓர் அரிய வாய்ப்பு.





(மணவறை,Settibacks,Cakes,Bridal Makeup,Wedding Cards & Gift, Wedding Car மற்றும் அனைத்து சேவைகளும்)



2014/2015 க்கான
சகலவிதமான
wedding Bookings
20% Off

Little Asia வின் திருமண மற்றும் அனைத்துரக ஆடைகளும் மாபெரும் விலைத்தள்ளுபடி
மற்றும்
முதன்முறையாக யாழ் மண்ணில் Limousine அறிமுகம்

இடம் - இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, 63, இந்துக் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
காலம் - 09.03.2014
நேரம் - மு.ப08.00 –பி.ப08.00

Tel-0777726367



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/12379)(10.6.3)

**தேவை**

உங்கள் வீடுகளில் உள்ள பழைய கொப்பி, புத்தகம், காட்போட் முதலியவற்றை உங்கள் வீடுகளில் வந்து பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம்.
(45393)(45.6.3) தொடர்பு: 077 078 9476

**பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு**

50 நாள்கள் நிரம்பிய ஒறிஜினல் சிங்க கட்டை இன பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: A.G.செல்வம் 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். 077 910 7153
(45399) (3.6.4)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

உரும்பிராய் கிழக்கு, பலாலி வீதியில் இந்துக்கல்லூரி முன் வீதியிலிருந்து 200 m தூரத்தில் வீட்டுடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு..
(45417)(46.6.3)
தொடர்பு: 021 222 6879, 077 052 4358

**பெயர்மாற்றம்**

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த ரவிக்குமார் றினோயன் ஆகிய நான் இன்றிலிருந்து (07.03.2014) ரவிக்குமார் சபரி என பெயர்மாற்றம் செய்கிறேன் என அறியத்தருகின்றேன்.
(29777) (3.6.4) ர.சபரி

# இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்துக்கு ஆஸியை ஆதரவளிக்கக் கோருகிறது கூட்டமைப்பு

*அந்நாட்டு வெளிவிவகார அமைச்சருடனா்ன சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வலியுறுத்து*

கன்பரா,மார்ச் 7

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள அமெரிக்க தீர் மான வரைவுக்கு ஆஸ்திரேலியா ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலியா பிஷப் புடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று 'கொழும்பு கசட்' இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

**ஏமாற்றம்**

இது தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் ஆஸ்தி ரேலிய வானொலிக்கு வழங்கிய நேர்காணலில்,

இலங்கை அரசு பொறுப்புக் கூறல் தொடர்பில் இதுவரையில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. இந்தப் பின்னணியில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரும் அறிக்கை மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையையே வலியுறுத்தி வருகின்றது. ஆனாலும் அமெரிக்காவால் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில் அந்த விடயம் குறிப்பிடப்பட வில்லை. இது எமக்கு சிறு ஏமாற்றம் தான்.

**இருவேறு விவகாரங்கள்**

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சில நாடுகள் வெற்றிகரமாக இந்தப் பிரேரணையை முன்னெடுத்துச் சென்று, தேவையான வாக்கு ஆதரவைப் பெற்று, அதனை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தும் என்று நாம் நம்புகின்றோம்.

படகுகளில் வரும் இலங்கை அகதிகளால் ஆஸ்திரேலியாவுக்கு உள்ள நெருக்கடியான நிலைமை எமக்குத் தெரியும். ஆனால் அதனையும் இந்த விவகாரத்தையும் வேறுபட்ட இரு தனித் தனி விட யங்களாகவே நோக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

**எங்களுடன் நிற்க வேண்டும்**

இலங்கையில் நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் காத்திரமான நடவடிக்கைக்கு சர்வதேச சமூகம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. குறிப்பாக நாகரிக நாடுகள் அதைக் கோரியிருக்கின்றன. ஆஸ்திரேலியாவும் அந்த நாடுகளின் பக்கம் நின்று செயற்பட வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கின்றோம்.

எமது கோரிக்கையை ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைத்தேன். அது தொடர்பில் ஆராய்ந்து பதிலளிப்பதாக அவர் உறுதியளித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## புதிதாக நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்களுக்கு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ் மாவட்டத்துக்கு புதிதாக நியமனம் பெற்ற 129 கிராம அலுவலர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பயிலுநர்களுக்கான முதல் இரண்டு வாரகாலப் பயிற்சி யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடம் மற்றும் மாநாட்டு மண்டபங்களில் இடம்பெறவுள்ளது. புதிதாக நியமனம் பெற்ற கிராம அலுவலர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ)


## இலங்கை தரைப்படையின் தொண்டர் படையணி

இலங்கைத் தரைப்படையின் தொண்டர் படையணியின் மகளிர் படைக்கு தமிழ் யுவதிகள் பயிற்சி மகளிர் வீராங்கனைகளாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**சேர்த்துக் கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகள்**

- மணமாகாத பெண்ணாகவும் இலங்கைப் பிரஜையாகவும் இருத்தல் வேண்டும்.
- சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தில் 18 வயதுக்கு குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- 05 அடி 03 அங்குல உயரத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- 8ம் வகுப்பு (9ம் வருடம்) சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- தொழில்நுட்பம், கணினி, வாத்தியம் இசைத்தல், நடனம் போன்ற பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள்**

- வீராங்கனைகளுக்கு சகல கொடுப்பனவுகளுடன் (சராசரியாக) மாதாந்தம் 42498.36 ரூபாவாகும்.
- உணவு, தங்குமிடம், சீருடைகள், மருத்துவ மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.
- 15 வருட சேவைக் காலத்தின் பின் ஓய்வு பெறலாம்.
- தரைப்படை அங்கத்தவர் ஒருவருக்கு உரித்தான அனைத்து நலன்புரி வசதிகள், கடன் வசதிகள் மற்றும் காப்புறுதி வசதிகள் கிடைக்கும்.

**மேற்படி அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள்நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

- பிறப்புச் சான்றிதழ்
- பாடசாலை விடுகைப் பத்திரம்
- கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்
- தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்
- அண்மையில் பெற்றுக்கொண்ட 02 நன்னடத்தைச் சான்றிதழ்கள்
- பொலிஸ் அறிக்கை
- 06 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடனான கிராம சேவையாளர் சான்றிதழ்
- ஆள் அடையாள அட்டை அல்லது அடையாளத்தை நிரூபிப்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டை (வெளிநாட்டு கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப்பத்திரம்)

**நேர்முகப் பரீட்சைகள் 2014-01-01ம் திகதி முதல் 2014-03-31ம் திகதி வரை பின்வரும் இடங்களில் நாளாந்தம் நடைபெறும்**

- பாதுகாப்புப் படைத் தலைமையகம் யாழ்ப்பாணம் (தொலைபேசி: 021-2222777 / 021-2222112)
- பாதுகாப்புப் படைத் தலைமையகம் கிழக்குப் பிராந்தியம் (தொலைபேசி: 027-2259137 / 027-259092)
- பாதுகாப்புப் படைத் தலைமையகம் கிளிநொச்சி (தொலைபேசி: 021-2283912)
- பாதுகாப்புப் படைத் தலைமையகம் முல்லைத்தீவு (தொலைபேசி: 011-3009729/011-3144331)
- 6வது இலங்கை மகளிர் படையணி - கொக்காவில் (தொலைபேசி: 011-3168454)

மேலதிக விபரங்களுக்கு www.army.lk/slavf எனும் இணையதளத்திற்குள் பிரவேசிக்கவும். (சி.12402)

**இலங்கைத் தரைப்படை தொண்டர் படையணி**

முகவரி : ஆட்சேர்ப்பு அதிகாரி,
தலைமையகம்,
இலங்கைத் தரைப்படை தொண்டர் படையணி,
இராணுவ முகாம்,
சாலாவ, கொஸ்கம.

விசாரணைகள் : 0362255362/0113188558/0113560003
மின்னஞ்சல் : hqslavf@army.lk


## திருத்தி வாசியுங்கள்

நேற்றைய உதயனில் 19ஆம் பக்கத்தில் சூரிய காந்தியின் 'கொண்டாடுங்கள் குதூகலியுங்கள்' - பரிசு மழை குறித்த வெற்றியாளர்களின் ஒளிப்படங்கள் வெளியாகியிருந்தன. அவற்றில் ஒரு படத்தில் லலிதா ஜுவலர்ஸ் முகாமையாளர் பொ.சுரேஸ்குமார் வெற்றியாளர் ஒருவருக்கு பரிசுக்கூப்பன் வழங்குகிறார் என்பதற்குப் பதிலாக நியூ லலிதா ஜுவலர்ஸ் முகாமையாளர் பொ.சுரேஸ் குமார் என பிரசுரமாகிவிட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும். (ஒ-10)

## பொதுக் கூட்டம்

நல்லூர் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக் கிழமைமு.ப 10மணிக்கு, ம.சுப்பிரமணியம் தலைமை யில் நல்லூர் பிரதேச செயலக மா நாட்டு மண்டபத்தில்நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் எஸ். ஆர். சிவரூபனும் கலந்துகொள்வர். கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறும். (வ-7)

## கண்ணுக்குத் தெரியாதவை

கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகத்துக்குச் சேவை செய்வதோடு, கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் சேவை செய். ஏனென்றால், உன் மனைவியைக் காப்பாற்றுவது மிக மிக அவசியம் ஏன்? அவள் உன் வாழ்க்கைத் துணைவி. இம்மைக்கும், மறுமைக்கும் அவள் உனக்குத் துணையாக நிற்கிறாள். மனைவி உனக்குச் செய்யும் பணி விடைகள் கண்ணுக்குத் தெரிந்தவை. ஆனால், தவம் இருந்து கருவுற்று உன்னைப் பெற்றுப் பாலூட்டி, மருந்து கொடுத்து தான் பத்தியமிருந்து வளர வைத்த தாயின் உதவிகள் உனது கண்ணுக்குத் தெரியாதவை.

ஆகவே கடவுள், தாய் போன்றவர். உலகம் மனைவி போன்றது.

*நன்றி ஞானச்சுடர்*

## சிறு சுவடுகள் அமைப்புக்கு இயக்குநர் சபை புதிதாகத் தெரிவு

யாழ்ப்பாணம்.மார்ச் 7

பனை அபிவிருத்திச் சபையால் முன்னெடுக்கப்படும் சிறு சுவடுகள் அமைப்புக்குபுதிய இயக்குநர்சபை தெரிவு செய்யப் ப ட்டுள்ளது. அதன் தலைவராக த.பவானி (யாழ்.மாவட்டம்), செயலாளராக ம.லோகேஸ்வரி (வவுனியா மாவட்டம்), பொருளாளராக த.இராஜரேகா (யாழ்.மாவட்டம்), உப தலைவராக பொ.சாந்தி (மட்டக்களப்பு மாவட்டம்),உப செயலாளராக அ.செல் வரஞ்சிதம் (திருகோணமலை மாவட்டம்) ஆகியோரும்- நிர்வாக சபை உறுப்பினர்களாக அ.பாவிலாச்சி (மன்னார் மாவட்டம்), ர.சந்திராவதி (அம்பாறை மாவட்டம்), ச.புவனரஞ்சிதம் (முல்லைத்தீவு மாவட்டம்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (வ-14)


## மரண அறிவித்தல்



**திருமதி அன்னபூரணம் கந்தையா**

யாழ்ப்பாணம், புங்குடுதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் தற்பொழுது வெள்ளவத்தையில் வசித்துவந்தவருமான பிரபல ஜோதிடர் திருமதி அன்னபூரணம் கந்தையா 05.03.2014 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல ஜோதிடர் குருமூர்த்தி சாஸ்திரியார் - ராமாசிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவகாமிப்பிள்ளை, ஏரம்பமூர்த்தி, விநாயகமூர்த்தி, பராசக்தி அம்மா, இராசையா மற்றும் கணேசமூர்த்தி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (06.03.2014) வியாழக்கிழமை கல்கிஸ்ஸை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 19,40 th Lane, Wellawatta,
077 736 2651, 077 753 7021

தகவல்:
S.புரேந்திரநாதன்

(சி/12608)(3.6.4)

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
CEYLON THEATRES
(Opposite Jaffna Teaching Hospital)
விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

**இப்பொழுது திரையில்** DAILY - 10.30am, 2.30pm, 6.30pm



# மகளிர் தின நிகழ்வுகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியா இலங்கை வங்கி நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கக் கட்டடத்தில் வவுனியா இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் வி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் "பெண்கள் சிறுவர்களது போஷாக்கும் உணவும்" என்ற தலைப்பில் தாய் சேய் நல மருத்துவ அலுவலர் கலாநிதி ரி.ஜெயதரனும், "பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினையும் தீர்வும்" என்ற கருப்பொருளில் வவுனியா மாவட்ட உளவளத் துணை இணைப்பாளர் ஆர்.அம்பிகைபாகனும் உரையாற்றுவர்.

நிகழ்வில் யோகாசனக் கண்காட்சியும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவர்களின் பட்டி மன்றமும் இடம்பெறும். (ஒ-402)

★ ★ ★

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் ஆகியோ ரும், கௌரவ விருந்தினராக பிரதேச செயலக கிராம அலுவலர் சு.இரவீகரனும் கலந்து கொள்வர்.

சங்க உறுப்பினர்களின் கவிதைகள், நடனம், நாடகம், பாடல்கள் ஆகி யவையும் இடம்பெறும். அத்துடன் சங்க எல்லைப் பரப்புக்குள் வசிக்கும் மூத்த பெண் கள் கௌரவிப்பு, சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி சங்க எல்லைப் பரப்புக்குள் வாழும் மகளிர் மற்றும் ஆடவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கல் ஆகியவையும் இடம் பெறும். (வ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி யில் மகளிர்தின விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை அதிபர் திருமதி நவலக்சுமி சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தொடர்ந்து மகளிர் தின நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஓ)

## வவுனியாவில் சாரணர் முகாம்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் சாரணர் நட்புறவு முகாம் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிறு வரை மூன்று தினங்கள் வவுனியா ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்ப மாகும் இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.செல்வராஜா கலந்து கொள்வார்.

நாளை சனிக்கிழமை நடைபெறும் காலை நிகழ்வுக்கு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜாவும், மாலை நிகழ்வுக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் கே.பரந்தாமனும், பிரதம விருந் தினர் களாக கலந்துகொள்வர். சிறப்பு விருந்தின ராக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் கலந்துகொள்வார். தொடர்ந்து இரவு இடம்பெறும் பயிற்சிப் பாசறை நிகழ்வை வவுனியா பிரதேசசெயலாளர் க.உதயராஜா ஆரம்பித்துவைப்பார்.

நாளை மறுதினம் ஞாயிறு காலை இடம்பெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணியும், மாலை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அகில இலங்கை சாரண ஆணையாளர் பேராசிரியர் நிமால்டி சில்வாவும், சிறப்பு விருந்தினராக நீர்ப் பாசனத் திணைக்களபிரதிப் பணிப்பாளர் என்.சிறிஸ்கந்தராஜாவும் கலந்து கொள்வர். (ஓ-402)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 7

தாளையடி ஐயனார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 13 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

★ ★ ★

சுதுமலை விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (வ-100)

★ ★ ★

பருத்தித்துறை, மருதடி அருள்மிகு ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 108 சங்காபிஷேகம் நடைபெற்று காலை 7 மணிக்கு பங்குனி உத்தர தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

துன்னாலை மித்திரன் அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சி.இந்திரராஜக்குருக்கள் அலங்காரத் திருவிழாவை பிரதமகுருவாக இருந்து நடத்தி வருகின்றார். (வ-173)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சதானந்தன்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



சந்தனமாதா கோயில் ஒழுங்கை, அரியாலையில் வசித்தவரும், தற்போது கச்சேரி நல்லூர் வீதியில் வசித்தவருமான தம்பிப்பிள்ளை சதானந்தன் 05.03.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் இளைய புதல்வரும், கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருமதி கமலாவதி - காசிப்பிள்ளை மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் சகோதரரும், வரதன், பகீரதன், வாசுகி, பவானி ஆகியோரின் தந்தையும், ஸ்ரீரஞ்சனி, கேதீஸ்வரி, அருணன், அகிலன் ஆகியோரின் மாமனாரும், ரேவந், அபிராம், கீர்த்தன், ஹரிணி, ஏரகன், ரம்யன், ஆயிழை, ஆதிரை ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை பி.ப.02 மணியளவில் 71/2, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 222 5114 (45419) (12.3.6)

தகவல்:
திருமதி பவானி அகிலன் (மகள்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### விக்கினேஸ்வரன் கம்ஷா

தோற்றம் 14.08.1992 — மறைவு 16.02.2013

திதி: ஸப்தமி (07.03.2014)


கண்ணிமைக்கும் கணப்பொழுதினை விட
கடுகதியாய் கரைந்ததுவோ ஒரு வருடம்
மலரும் நினைவுகள் தேக்கிவைத்து
எவரும் காணாத உலகம் சென்றுவிட்டாய்
எம் அன்புச் செல்வமே!!
தவிக்கிறோம் உன் நினைவால்
உம் ஆத்மசாந்திக்காக
இறைவனை வேண்டிநிற்கின்றோம்

சங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(45420)(3.6.4)

## தெல்லிப்பழை துயரசம்பவத்தின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் செல்வானந்தம் லியனல் பிரசாத்

அன்னைமடியில் 12.11.1981

ஆண்டவன் அடியில் 05.02.2014

கடந்த (05.02.2014) புதன்கிழமை சிவபதமடைந்த செல்வானந்தம் லியனல் பிரசாத் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(45400)(3.6.4)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 10.01.1963

உதிர்வு 03.03.2013



### திருமதி கமலாம்பிகை பரமானந்தம்

திதி: 07.03.2014

ஆண்டொன்று ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"இராஜகிரி"
நவக்கிரி, புத்தூர்

(45416)(45.3.6)

குடும்பத்தினர்.

## 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சத்தியசீலன் சுதர்சன்

மலர்வு 27.03.1987 — உதிர்வு 07.03.2009

ஐந்தாண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை எம்மனங்கள் !
ஆறாத நினைவாக
உம் மறைவு வாட்டுதையா!
நீங்காத நினைவாக
உன் வதனம் தெரியுதையா!
அழகிய உன் நினைவுகள்
என்றுமே மறையாது
உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

(43540)(5.6.3)


தருமபுரம்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும்
கந்தர்மடம் நல்லூரை
வசிப்பிடமாவும் கொண்ட

### அமரர் நவரத்தினசாமி ரகுலேஸ்வரன்



மலர்வு 10★11★1958 — உதிர்வு 05★02★2014

நாள்கள் முப்பத்தொன்று ஆனாலும்
ஆறுமோ எங்கள் துயர்தான்
அகன்றிடா நினைவுகளால்
அல்லும் பகலும் நாமிங்கே
ஆத்மாசாந்தி பெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை ந.ப.12.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


5 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,
கந்தர்மடம்.

(45291)(3.6.4)

குடும்பத்தினர்.

# கட்டுப்பாட்டை இழந்து பளையில் கடைகளைத் தகர்த்த பஸ்



யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு அரச ஊழியர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து பளை மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள கடைகளுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான நிலையில்.....








விபத்துக்குள்ளான கடைகளின் இடிபாடுகளை மக்களும் படையினரும் பார்வையிடுவதுடன் மீட்புப் பணியிலும் ஈடுபடுகின்றனர்.

விபத்தில் சிக்கிய கடைகளின் இடிபாடுகள்.....(வ-55)

# போருக்கு நிகராக இப்போது எம்முன் கலாசாரச் சீரழிவுகள்

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 7

"தற்போது போர் இல்லா விட்டாலும் போருக்கு நிகரான கலாசார சவால்கள் எம் முன் மலையாக விரிந்து நிற்கின்றன. இவற்றை வெல்ல பல்வேறு உபாயங்கள் இருந்தாலும் வாசிப்பும் எழுத்தும் இயல்பாகச் சிந்திக்க வைத்து ஒரு மாற்றத்தை கொண்டு வரும் என்று நினைக்கின்றேன்'' என்று கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் தெரிவித்தார்.

நோர்வே அஸ்கர் பாறும் தமிழர் இணையம் தாயகத்தில் வாழும் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகளை கிராமங்கள்தோறும்வழங்கிவருகின்றது.

இந்நிலையில்இயக்கச்சிகோவில் வயல் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் சு.சுரேன் தலை மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தொவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததா வது:-



நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள்...

இன்னமும் நாம் பல்வேறு நெருக்கடிக ளுக்குள் வாழ்கின்றோம். அதில் மிக முக்கியமானது எமது கல்வி அறி வைக் காப்பாற்றுவது. எப்போதுமே தமிழர்களின் மிக முக்கிய பெருமையும் மூலதனமுமாக இருந்து வருவது கல்வி. அது கடந்த காலங்களில் பெரும் போர் நெருக்கடிகள் இருந்த போதும் ஏதோ ஒரு கட்டமைப் பின் அடிப்படையில்வீழாது இருந்துவந்தது என்பது வரலாற்றுப் பதிவுகள். ஆனால் இன்றைக்கு போர் இல்லாவிட்டாலும் போருக்கு நிகரான கலாசார சவால்கள் எம் முன் மலையாக விரிந்து செல்கின்றன. இவற்றை வெல்ல பல்வேறு உபாயங்கள் இருந்தாலும்வாசிப்பும்எழுத்தும் இயல்பாகச் சிந்திக்க வைத்து ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் என்று நினைக்கின்றேன். எழுத்தும் வாசிப்பும் எமக்கு ஏற்றம் தருவன.

மாணவர்களுக்கு எதை வாசிக்க ஊக்கம் கொடுப்பது? அல்லது அவர்களின் கண்படும் இடங்களில் எந்த வகையான வாசிப்புக்குரிய வகைகளை சேமிப்பது, பேணுவது தொடர்பாக அறிவில் மூத்தவர்கள் சிந்திப்பதன் மூலம் எமக்காக மாற்றங்களை ஏற்படுத்த முடியும்"-என்றார்.

> எமது கல்வி அறிவைக் காப்பாற்றுவது. எப்போதுமே தமிழர்களின் மிக முக்கிய பெருமையும் மூலதனமுமாக இருந்து வருவது கல்வி.

இந்தநிகழ்வில் கோவில் வயல் பாடசாலை அதிபர், பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உறுப்பினர் வீரவாகுதேவர், த.தே. கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன், கட்சியின் கரைச்சி பிரதேச அமைப்பாளர் பொன்.காந்தன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினரான மா.சுகந்தன் உட்பட பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். (வ-18)

# எமக்கான வீதியை புனரமைத்துத் தருக

## தட்டுவன்கொட்டி கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 7

ஆனையிறவு தட்டுவன் கொட்டி கிராமத்துக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமையால் சுமார் 92 வரையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் 92 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தநிலையில் அந்தக் கிராமத்துக்கு ஆனையிறவில் ஏ-9 வீதியிலிருந்து பிரிந்து செல்கின்ற ஒரேயொரு பிரதான வீதி எந்தவித புனரமைப்புக்களுமின்றி காணப் படுகின்றது. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே குறித்த வீதி யைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)



நோயாளி ஒருவருக்கு தொற்றாநோய் பரிசோதனையில் ஈடுபடுகிறார் மருத்துவர்

# வங்காலையில் நடைபெற்ற தொற்றா நோய் பரிசோதனை

மன்னார், மார்ச் 7

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'நலம் தரும் பலம் 101 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான பரிசோதனை முகாம் ஞாயிற்றுக்கிழமை வங்காலை பொது மண்டபத்தில் இடம் பெற்றது.

அன்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம் பெற்ற குறித்த பரிசோதனை முகாமில் வங்காலை கிராமத் தைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை மேற் கொண்டு பயனடைந்தனர். குறித்த பரிசோதனைகளை மன்னார் பொது வைத்திய சாலையின் தொற்றா நோய்களுக்கான வைத்திய அதிகாரி வைத்தியர் அன்ரன் சிசில், மற்றும் வைத்தியர்களான ரூபன் லெம்பேட்,யூட் பச்சேக் ஆகியோர் மேற்கொண்டனர். (வ-56)

# புத்தாண்டு தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகள்

வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழகமும் கலைமகள் சனசமூக நிலையமும் இணைந்து வருடாந்தம் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் இந்த வருடம் 30 ஆவது தடவையாக நடைபெறவுள்ளன. விளையாட்டுப் போட்டிகளில் முக்கிய நிகழ்ச்சிகளாகஆண்களுக்கான60மைல் சைக்கிள் ஓட்டம், 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டம், 5 மைல் மரதன் ஓட்டம் அத்துடன் சிறுவர், சிறுமிகள், இளைஞர்கள், பெண்கள், முதியோர்கள் ஆகியோர்களுக்கான பலதரப்பட்ட நிகழ்ச்சிகளும் அணிக்கு நான்கு பேர் கொண்ட நேரவரையறைக்குட்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும்இடம்பெறவுள்ளன.

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும்16 ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய போட்டி களுக்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (வ-402)

# அமைச்சர், பிரதி அமைச்சருடன் சந்திரிகா இரகசியச் சந்திப்பு

கொழும்பு,மார்ச் 7
அரச அமைச்சரொருவரும் மற்றும் பிரதி அமைச்சர் ஒருவரும் கடந்த வாரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இரகசியச் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.


சந்திரிகா

கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரபல அமைச்சரொருவர் ஹொரகொல்லையில் உள்ள சந்திரிகாவின் வீட்டில் வைத்து அவரைச் சந்தித்துள்ளார்.
பிரதி அமைச்சர் மாத்தளை, உக்குவலயில் அமைந்துள்ள வீட்டில்வைத்து முன்னாள் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்.
இந்தப் பிரதியமைச்சர் கடந்த காலத்தில் அரசின் ஒரு சில செயற்பாடுகளை பகிரங்கமாகவே விமர்சித்து வந்த ஒருவராவார்.
இவர்களுக்கிடையிலான சந்திப்புக் களின்போது கலந்துரையாடப் பட்ட விடயங்கள் குறித்து இது வரையிலும் தகவல் வெளிப்படுத்தப்படவில்லை.
குறித்த அமைச்சர் பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் எவருமே இல்லாது தனித்தே இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளார் என்று சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-22)

**இவர்களுக்கிடையிலான சந்திப்புக்களின் போது கலந்துரையாடப் பட்ட விடயங்கள் குறித்து இது வரையிலும் தகவல் வெளிப் படுத்தப்படவில்லை.**

# தபால் மூலம் வாக்களிக்க 1,12,322 பேருக்கு தகுதி

## தேர்தல்கள் செயலகம் தகவல்

கொழும்பு,மார்ச் 7
மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலில்தபால் மூல வாக்களிப்புக்கு இந்தமுறை 1,12,322 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.
இந்தத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருந்த 1,33 924 பேரில் 21,602 பேரின் விண்ணப்பங்கள் பல்வேறு விதமான குறைபாடுகளால் நிராகரிக்கப்பட்டன என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.
தபால் மூல வாக்களிப்புக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 1,12,322 பேரில் 59,262 பேர் மேல்மாகாண சபைத் தேர்தலிலும் 53,060 பேர் தென் மாகாண சபைத் தேர்தலிலும் தபால் மூலமாக வாக்களிப்பதற்குத் தகுதிகளைப் பெற்றுள்ளனர் என்று அவர் கூறினார்.
இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலில் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# வாடகை வாகனங்களுக்கு மட்டும் ஒரு வருடத்தில் ரூ.75 கோடி செலவு

## *மின்சார சபை ஊழியர்கள் தெரிவிப்பு*

இலங்கை மின்சார சபையால் வாடகை அடிப்படையின் கீழ் பெறப்பட்டுள்ள 802 வாகனங்களுக்காக ஆண்டொன்றுக்கு 75 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.
2012ஆம்ஆண்டில்இலங்கை மின்சார சபை வசமிருந்த வாக னங்களின் தொகை 2297 ஆகும்.
வாடகை அடிப்படையின் கீழ் மின்சார சபைக்குப் பெறப்பட்டுள்ள 802 வாகனங்களுக்கு ஆண்டொன்றுக்கு 75 கோடி ரூபா செலுத்தப்படுகிறதுஎன்று ஊழியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.
வாடகைக்குப் பெறப்பட்டுள்ள வாகனங்களில் பெருமளவிலானவை சபையின் உயர் மட்ட அதிகாரிகள் சிலருக்கு நெருக்கமானவர்கள் வசத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-22)

# 500 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு

இந்த முறை பெரும்போகத்தில் 500 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித்துள்ளது.
அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவான நெல் கொள் வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத் தல் சபையின் தலைவர் கே.பி.ஜயசிங்க கூறினார்.
ஒரு கிலோகிராம் நாட்டரிசி நெல் 32 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசி நெல் 35 ரூபாவுக்கும் கொள் வனவு செய்யப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.
நெல் கொள்வனவுக்காக போதியளவு நிதி வழங்கப்பட் டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**தவறிவிட்டது**

சிவானந்தராஜா கோபிகிருஷ்ணா (842511372V) தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம், உத்தியோக அடையாள அட்டை என்பன தவறிவிட்டது.
தொடர்பு : 077 3946209, 021 2229990

# மூன்று மாதங்களாக திரிபோஷா இல்லை

## கர்ப்பிணித்தாய்மார்கள் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 7
கடந்த மூன்று மாதங்களாக கர்ப்பிணித் தாய் மார்களுக்கென வழங்கப்படும் திரிபோஷா வழங்கப்படுவதில்லை என்று கர்ப்பிணித் தாய்மார்கள் குற்றம் சுமத்துகின்றனர்.
சில கர்ப்பிணித்தாய்மார்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக திரிபோஷா வழங்கப்பட வில்லை என்று அவர்கள் கூறினர்.
திரிபோஷா தட்டுப்பாடு குறித்து பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்கவிடம் கேட்ட போது,
வருடாந்தம் 13 லட்சம் திரிபோஷ பயனாளிகள் உள்ளனர். ஆனால் திரிபோஷா உற்பத்தி 80 வீதம் வரையே உள்ளது.
திரிபோஷா உற்பத்தியின் அளவை அதிகரிப்பதற்காக தற்போது தொழிற்சாலைகளுக்குப் புதிய இயந்திர சாதனாங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.
பிரதேச மட்டத்தில் திரிபோஷாவை பகிர்ந்தளிக்கும்போதும், கொண்டு செல்வதிலும் தாமதங்கள் ஏற்படக்கூடும்.
அரசு கர்ப்பிணித்தாய்மார்கள் அனைவருக்கும் கர்ப்ப காலத்தைப் போன்றே பிரசவத்தின் பின்னரான ஆறுமாத காலம் கடக்கும் வரையிலும் திரிபோஷா வழங்க பரிந்துரை வழங்கியுள்ளது- என்றார். (ச-22)

**அறிவித்தல்**

இல. 57, அம்மன் வீதி, நல்லூர் எனும் முகவரியில் வசிக்கும் நடராஜா இராஜதேவன் (மாநகர சபை உறுப்பினர்) ஆகிய நான் இல.51, அம்மன் வீதி, நல்லூர் எனும் முகவரியில் உள்ள யாழ்பாடி விருந்தினர் விடுதியின் பொது முகாமையாளராக 2002 ஆம் ஆண்டுமுதல் 31.01.2014 வரை பதவி வகித்துவந்தேன். இப்பதவியிலிருந்து 01.02.2014 முதல் எனது சொந்த விருப்பத்தின் பேரில் விலகியுள்ளேன் என்பதனை யாவருக்கும் அறியத் தருகின்றேன்.

என். இராஜதேவன்.

(45424) (10.6)

**தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்**
**மென்பந்து சுற்றுப் போட்டிக்கான**
**விண்ணப்பம் கோரல்**

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 41ஆம் வருட நிறைவினையொட்டி நடைபெறவிருக்கும் இருபது பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டமென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் வடமராட்சிமட்டக் கழகங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து மீளளிக்காத கழகங்கள் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டா.

விண்ணப்ப முடிவு திகதி : 14.03.2014

- ஐங்கரன் HARDWARE, POINT-PEDRO
- CITY SPORTS, NELLIYADY

மேற்கண்ட இடங்களில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு 077 967 1977 என்னும் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்க.

(சி/12609) (7.6.3)

தலைவர், தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்.

**உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)**
**உடுப்பிட்டி**
**31.07.2013இல் உள்ளவாறான கணக்கு மீதியினை உறுதிப்படுத்தல்**

எமது சங்கத்தின் 2012/2013ஆம் ஆண்டுக்கான எண்பார்வை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தமது மீதியினை உறுதிப்படுத்திக்கொள்ள அக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் 10.03.2014-14.03.2014ஆம் திகதி வரை வங்கிக்கு சமுகமளித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்கு மீதிகளினை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பொதுமுகாமையாளர்.

(சி/12703)(7.6.3)

# கிளிநொச்சியில் கருத்தமர்வு

கிளிநொச்சி, மார்ச் 7
தே.ால் உற்பத்திகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள், துணைப்பொருள்கள் மற்றும் இயந்திராதிகளை விற்பனை செய்யும் கொழும்பில் உள்ள முன்னணி வர்த்தகர்கள் மற்றும் துறைசார் பயிற்சியாளர்களுக்கான கருத்தமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
கருத்தமர்வில் பொருள்களை உற்பத்தி செய்வது தொடர்பான புதிய தயாரிப்பு நுணுக்கங்களை கற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் சின்னத்துரை
பாலசுப்பிரமணியம்
(நான்ஸ் சவுண்ட் உரிமையாளர்)

தோற்றம்
11.09.1949

மறைவு
16.02.2013

திதி: 07.03.2014

அன்பின் திருவுருவாய் வாழ்க்கையில்
பல சவால்களை தைரியத்துடன்
எதிர்கொண்டு எம் அனைவருக்கும்
முன்மாதிரியாக வாழ்ந்த அப்பாவே!
வருடங்கள் ஒன்றாகியும் உங்கள்
அன்பு முகத்தை எம்மால் மறக்க முடியவில்லை

உங்கள்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/12612)(10.14)

**மரண அறிவித்தல்**



**சுப்பிரமணியம் குகதாசன்**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு இணுவில் ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குகதாசன் நேற்று (06.03.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில். தகவல்: குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**



**ஆறுமுகம் மருதலிங்கம்**

வேலணையைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மருதலிங்கம் நேற்று (06.03.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சர்வானந்தன், கிருபாதேவி, ஜெயானந்தன் காலஞ்சென்ற சிவானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் கலாறஞ்சினி, காலஞ்சென்ற பாலேந்திரன், விஜயகுமாரி ஆகியோரின் அன்புமாமனும் செந்தூரன், அனுசூயா, பிரகலாதன், ஜெயமதி, கவிப்பிரியா, பிருந்தா, குகலயன், பவித்திரன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.03.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு, வேலணை.
077 4012985
தகவல்: குடும்பத்தினர்

# திக்கம் கிராம வீதிகளைப் புனரமைக்க வட மாகாண முதலமைச்சருக்கு மனு

வடமராட்சி, மார்ச் 7

அல்வாய், திக்கம் கிராமத்தில் உள்ள வீதிகளைப் புனரமைத்தும், விவசாய நிலங்களைப் பாதுகாத்தும் பொது மயானத்தில் வசதிகளையும் ஏற்படுத்தித்தருமாறுகோரி, அவற்றுக்கான திட்டமுன்மொழிவுகளை திக்கம் மத்திய சனசமூக நிலையம் வடக்குமாகாணமுதலமைச்சருக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

திக்கம் கிராமம் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளையும் இன்னொரு கிராம சேவையாளர் பிரிவின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய பிரதேசமாகத் திகழ்கின்றது. அவை முறையே அல்வாய் மேற்கு, அல்வாய் வடமேற்கு, அல்வாய் வடமத்தி பிரிவுகள் ஆகும்.

எமது கிராமத்தில் அவசர மாகவும், அவசியமாகவும் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களை நிறை வேற்றித் தருமாறு வேண்டுகின்றோம்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான திக்கம் நாச்சியம்மன் வீதி, வட்டதெணி வீதி, பள்ளந் தண்ணி வீதி, குமாரியோடை வீதி, பனிக்கர் கோயில் வீதி, பாடசாலை முன் வீதி, மூன்று பனையடி வீதி, கிளிவெட்டி வீதி, கல்லாண்டி வீதி மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான திக்கம்-நாவலடி வீதி ஆகிய பத்து வீதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் புனரமைத்து பாதசாரிகளினதும், விவசாயிகளினதும், மாணவர்களினதும் போக்குவரத்துக்கு உதவுங்கள்.

திக்கம் இந்துமயானம் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளதால் மழை காலங்களில் பூதவுடல்களை தகனம் செய்வதில் மிகவும் கஷ்டமான நிலை காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்வதற்கும், தகனம் செய்வதற்கும் என ஒரு கொட்டகையையும், மக்கள் கூடி நிற்பதற்கென மற்று மொரு கொட்டகையையும் அமைத்துத் தருக.

எமது கிராமத்தில் சுமார் 90 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலம் உள்ளது. ஆனால் கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆழிப்பேரலை அழிவுக்குப் பின்பு ஆழிப்பேரலை குடியிருப்புகள் எமது விவசாய நிலங்களுக்கு அருகில் வந்தமையால் விவசாய பயிர்ச்செய்கை கால்நடைகளால் பெரிதும் பாதிப்புக் குள்ளாகி வருகின்றது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு வருடம் முழுவதும் விவசாயம் செய்வதற்கு விவசாய நிலத் தைச் சுற்றி முட்கம்பிவேலி அமைத்துத்தருக.

இதேவேளை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறந்த விளையாட்டு மைதானங்களில் ஒன்றான திக்கம் விளையாட்டு மைதானத்தைச் சூழ வெள்ள வாய்க்கால் அமைந்திருப்ப தால் மழை காலங்களில் மண் அரிப்புக்கு உள்ளாகி வருகின் றது. மண் அரிப்பைத் தடுப்ப தற்கு சிமெந்திலான அணைக் கட்டை அமைத்துத் தர வேண்டும். இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

# கோடா வைத்திருந்தவர்களுக்கு ஆள்பிணையில் செல்ல அனுமதி

கிளிநொச்சி, மார்ச்.7

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா வைத்திருந்த இருவரை தலா ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணம் வைத்திருந்த ஒருவரை ஒரு இலட்சம் ரூபா பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

பளைப் பகுதியில் கடந்த வாரம் 2015 மி.லீ கோடாவையும் 1960 மில்லி லீற்றர் கோடாவையும் வைத்திருந்த 2 பேரை பளைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவானுக்கு முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது குறித்த இருவரையும் தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஆள் பிணைகளில் செல்ல அனுமதித்துள்ளது.

அத்துடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணம் ஒன்றை வைத்திருந்த சந்தேகத்தில்ளள ஒருவரை நேற் றைய தினம் முன்னிலைப் படுத்தியபோது அவரை ஒரு இலட்சம் ஆள் பிணையில் செல்லவும் அனுமதியளித் துள்ளது.

(வ-55)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

வரைவில் இந்த விடயங்கள் எவையும் இல்லை. பதிலாக, இலங்கை அரசு உள்ளகப் பொறிமுறை ஒன்றின் மூலம் போர்க்குற்ற விசாரணை மற்றும் மனித உரிமை மீறல் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கண்காணித்து 6 மாதங்களில் வாய்மூல அறிக்கையையும் ஒரு வருடத்தின் பின்னர் முழுமையான அறிக்கையையும் வழங்க வேண்டும் என்றுதீர்மான வரைவு கோருகின்றது.

இது தமிழர் தரப்பை கடும் ஏமாற்றத்துக்குள் தள்ளியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், மேற்படி இரு விடயங்கள் உள்ளிட்ட மூன்று விடயங்களைத் தீர்மானத்துக்குள் உள்ளடக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் குழுக் கூட்டம், நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் புதன்கிழமை கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலை மையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

**விமோசனம் இல்லை**

அமெரிக்காவினால், ஐ.நா மனித உரிமைகள் சபையில் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது தீர்மான வரைவுதான். அது இன்னமும் இறுதி வடிவம் பெறவில்லை. எனினும் வெளிவந்துள்ள வரைவில் கூட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான விமோசனங் கள் எதுவும் கிட்டவில்லை. முழு இலங்கையையும் ஜனநாயக ரீதியிலான கட்டமைப்புக்குள் கொண்டு செல்வது தொடர்பிலேயே அந்த வரைவு கவனம் செலுத்தியிருக்கின்றது.

இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசத்தை வழங்கி, அவர்கள் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு வழங்கியிருக்கின்றது இந்தத் தீர்மான வரைவு. எனவே தீர்மான வரைவை வலுப்படுத் துவதன் ஊடாகவே இதனை மாற்றியமைக்க முடியும்.

**முக்கிய விடயங்கள் மூன்று**

அமெரிக்கா முன்வைக்கும் இறுதிப் பிரேரணையில் மூன்று முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் சர்வதேச மத்தியஸ்தத்துட னான பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும். தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலப்பறிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். கைப்பற்றப்பட்ட நிலங்கள் மீளவும் அதற் குரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். இவை சர்வதேசத்தின் மேற்பார்வையில் இடம்பெற வேண்டும்.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசா ரணை நடத்தப்பட வேண்டும். மேற்படி விடயங்களை தீர்மானத்தின் இறுதி வரைவில் உள்ளடக்க வேண்டும் என்று கூட்டமைப்புக் கேட்டுக் கொள்கிறது.

இந்த இலக்கை அடைவதற் காக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (உ-5)

### தமிழினத்தின்

நாட்ட வேண்டும் - தமிழினத்தின் காவலர்கள்' என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பளைப் பொலிஸாரால் நேற்று அதிகாலை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சுவரொட்டிகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பரவலாக ஒட்டப்பட்டிருந்ததுடன், பருத்தித்துறைப் பகுதியில் வீடு வீடாகவும் போடப்பட்டிருந்த தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு பக்கங்களைக் கொண்ட இந்தச் சுவரொட்டிகளில், தற்போதைய காலம் அஹிம் சைப் போராட்டத்துக்கான காலம் எனவும், எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் துணிந்து சொல்லி அதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இனப் படுகொலை என்பதை அங்கீகரிக்கும்போது தான் எமக்கான தமிழீழத் தனியரசு கிடைக்கும் என்றும் அந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சுவரொட்டிகளை வைத்திருந்ததாகத் தெரிவித் துப் பளைப் பொலிஸார் நேற்று அதிகாலை இரு இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். உடையார்கட்டு, இத்தாவில் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

குறித்த சுவரொட்டிகள் பளையில் கொண்டு வந்து தரப் படும் எனவும், அதனை வாங்கி விநியோகித்தால் பணம் தரப் படும் என்றும் தெரிவித்ததா லேயே தாம் அவ்வாறு செய்த தாக அந்த இளைஞர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். உடையார்கட்டைச் சேர்ந்த இளைஞர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 5 வருடங்கள் உறுப்பினராக இருந்தவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவத்தை உறுதிப் படுத்திய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம், கைது செய்யப்பட் டுள்ள இளைஞர்களின் பெயர் விவரங்களை வெளியிட மறுத்துவிட்டது.

(த-5-14-55)

### கர்ப்பிணியான

யில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப் பட்டது.

நாவற்குழியில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுரேஸ் சுயா என்பவரையே அவரது கணவரான ரவீந்திரன் சுரேஸ் என் பவர் கழுத்து நெரித்துக் கொலை செய்தார். அவர் 9 மாதக் கர்ப்பிணியாக இருக் கும் போதே குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றது.

சம்பவத்தை அடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச் சேரி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டு விசாரணை இடம்பெற்று வந்தது.

விசாரணை முடிவில் குறித்த கணவரைக் குற்றவாளியாகக் கண்ட மேல்நீதிமன்று சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (த-4)

### விபத்தை

யிட்டு அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தனர்.

பளை மத்திய கல்லூரி முன்பா கப் பாதசாரிக் கடவையான மஞ்சள் கோட்டில் வைத்துப் பாடசாலை மாணவன் ஒரு வனை பஸ் மோதியதைத் தொடர்ந்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அந்த வழியே வாகனத்தில் சென்ற இராணுவத்தினர் பாடசாலை மாணவர்களுடன் தகராறில் ஈடுபட்டனர். இதனால் இரு தரப்பினருக்குமிடையே சிறிது நேரம் முறுகல் நிலை நீடித்த தாகச் சம்பவ இடத்தில் நின்றி ருந்தவர்கள் தெரிவித்தனர். பின்னர் பொலிஸார் அதில் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைத்தனர். பின்னர் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டனர். (த-4-9-55)

### யாழில்

தற்போது நிறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் பாவனையாளர்கள் அதனை அவதானிக்காமல் பாணைக் கொள்வனவு செய்ய வேண்டியுள் ளது.

யாழ்.மாவட்ட பாவனையா ளர் அதிகார சபையால் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது பாணின் நிறை குறைவாக இருப்பது இனங் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் பாஸ்கரனு டன் தொடர்பு கொண்டு கேட்ட போது..

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தால் பாணின் நிர்ணயிக்கப்பட்ட நிறையாக 450 கிராம் இருக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படியே பேக்கரிகள் பாணைத் தயாரித்து வருகின்றன. எனினும் இதனை மீறி குறைவான நிறையில் பாணைத் தயாரிக்கும் பேக்கரிகள் மீது பாவனையாளர் அதிகார சபையே நடவடிக்கை எடுப் பது வர வேற்கத்தக்கது-என்றார். (த-14)

### 4 பொலிஸார்

சென்ற போது குறித்த சந்தேக நபர் தப்பி ஓடிவிட்டார். இதனை அடுத்து குறித்த பொலிஸார் மீது ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளும் பொருட்டே தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (த-4)

### மஞ்சள்

னால் கடைகளின் முன்பக்கக் கட்டடம் இடிந்தது. இதனால் அதற்குள் சிக்குண்டவர்கள் கடும் பிரயத்தனப்பட்டு இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பஸ்ஸும் முன்புறம் நசிந்து சேதமடைந்துள்ளது. பஸ்ஸில் இருந்த பலரும் காயமடைந்தனர்.

பளை மத்திய கல்லூரிக்கு முன்பாகப் பாடசாலை மாணவன் ஒருவன் பாதசாரிக் கடவையான மஞ்சள் கோட்டின் வழியே வீதியைக் கடந்த போதே பஸ்ஸின் வேகத் தைக் கட்டுப்படுத்த முடியாமல் அதன் சாரதி வீதியோரமாக உள்ள புடவைக் கடை மற்றும் உணவு நிலையம் என்பவற்றை மோதியுள்ளார் என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறிருந்தும் மஞ்சள் கடவையால் வீதியைக் கடந்த பாடசாலை மாணவனை பஸ் மோதி விட்டது. இதனால் படுகாயம டைந்த அந்த மாணவன் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு விபத்து அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

உணவகத்தில் சாப்பிட்டுக்கொண்டிருந்த பாடசாலை மாணவன், பொதுமக்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோருடன் பஸ்ஸில் பயணித்த அரச உத்தியோகத்தர்களும் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 9 பேர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும், 6 பேர் யாழ். போதனா வைத்தியசாலையிலும், 6 பேர் பளை வைத்தியசாலை யிலும் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளனர். பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

குறித்த வியாபார நிலையங்களின் முன்புறம் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளன. விபத்தையடுத்து அதன் சாரதியைப் பொலிஸார் கைது செய்த விசாரணைக்குட்படுத்தியுள்ள னர்.

விபத்தில் புலோப்பளையைச் சேர்ந்த மாணவனான ஜெயசீலன் திவாகரன் (வயது-13), இணுவிலைச் சேர்ந்த ச.கீதபாலினி (லயது-29), அச்சுவேலியைச் சேர்ந்த தி.ஐங்கரன் (வயது-38), பாலாவி கொடிகாமத்தைச் சேர்ந்த பா.மாலினி (வயது-31), அரியாலையைச்சேர்ந்தகா.உதயகுமாரி (வயது-41), மீசாலை வடக்கைச் சேர்ந்த த.வசந்த ராஜ் (வயது-37), கைதடி தெற்கைச் சேர்ந்த ப.கனகரத் தினம் (வயது -43), நுணா வில் மேற்கைச் சேர்ந்த ஐ. அழகேஸ்வரி (வயது -28), சாவகச்சேரியைச் சேர்ந்த வ.முரளிதரன் (வயது-47), சித்தங்கேணியைச் சேர்ந்த ந.குகபரன் (வயது-36), அராலி தெற்கைச் சேர்ந்த யோ.கஜன் (வயது-29), மானிப்பாயைச் சேர்ந்த யூ.நொயலின் (வயது -29), நுணாவில் மேற்கைச் சேர்ந்த ச.பிறேமினி (வயது -31), புத்தளத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் கமஹே (வயது-40) மற்றும் பஸ் சாரதியான ரா.ஜெயதரன் ஆகியோர் இந்த விபத்தில் காயமடைந்தனர். (த-4-9-55)

### ஐ.நா.

மனித உரிமை மீறல்கள் குறித்த மோசமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகத் தன்மை வாய்ந்த சுயாதீன விசாரணைகளை நடத்துமாறு இந்த சபை விடுத்திருந்த கோரிக்கைகளை திருப்திப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டமைக்கு நான் வருந்துகிறேன்.

அதனால் தனது சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை இந்தச் சபை உருவாக்குவதற்கான காலம் கனிந்துவிட்டது என்று நான் பரிந்துரைக்கிறேன்.

உள்நாட்டுப் பொறிமுறை தோல்வியடைந்துள்ள நிலையில் இது சாதகமான வகிபாகத்தை வழங்கும் என்று நான் நம்புகிறேன்" என்று நவிப்பிள்ளை தனது உரையில் தெரிவித்தார்.

அவரது நீண்ட உரையில் 'சட்டத்தின் ஆட்சியும் குற்றங்களை தண்டிக்காது விடும் போக்கும்' என்ற உப தலைப்பின் கீழ் இலங்கை மீதான சர்வதேச விசாரணை பரிந்துரையை அவர் மேற்கொண்டுள்ளார்.

தன்னுடைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காத்திரமான முன்னேற்றமாக ஐ.நா. பொறிமுறையை தாங்கிநிற்கும் மூன்றாவது தூணாக மனித உரிமைகள் விவகாரம்உறுதியாக உருவாகியிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தி, அமைதி மற்றும் பாதுகாப்பு என்பவற்றுடன் மனித உரிமைகள் மூன்றாவது தூணாகியிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் ஐ.நா வின் பணி தொடர்பாக உள்ளக மீளாய்வு செய்வதற்கு ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் பொறிமுறைக்கான நிறைவேற்றுச் சபை என்பன இந்த நிலைமையை ஏற்படுத்துவதற்கான அடித்தளங்களாக அமைந்துள்ளன.

மனித உரிமைகள் ஆணையாளராக இதுதனது கடைசி அறிக்கை என்று குறிப்பிட்ட நவிப்பிள்ளை தனது பணி முன்னேற்றகரமானதாகவும், கவர்ச்சிகரமானதாகவும் இருந்தது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த உரையை சபையில் ஆற்றுவதற்கு முன்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். நேற்று முன்தினம் சபையில் உரையாற்றிய அமைச்சர் பீரிஸ் நவிப்பிள்ளை தன்னுடைய எல்லைகளை மீறி நடக்கிறார் என குற்றம்சாட்டிய நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஐ.நா ஆணையாளரின் அறிக்கைக்கு பதில் அளித்து அனுப்பப்பட்ட இலங்கையின் அறிக்கையை உறுப்பு நாடுகளுக்கு விநியோகிக்காமை தொடர்பாகவும் பீரிஸ் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பியதாக ஜெனிவாச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-ஐ)

# நிலோஜனின் அபார பந்து வீச்சினால் வென்றது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நிலோஜனின் அபாரமான பந்து வீச்சின் மூலம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை ஒரு இன்னிங்ஸ் 2 ஓட்டங்களால் வென்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரிகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த வெள்ளி, சனிக் கிழமைகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 67.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கானாமிர்தன் 34 ஓட்டங்களையும், துவாரகசீலன் 36 ஓட்டங்களையும், ஜெனிபிளமிங் ஆட்டம் இழக்காமல் 49 ஓட்டங்களையும், நிலோஜன் 43 ஓட்டங்களையும் பிரிய சங்கர் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் ஜெரிக்சன் 16 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பிறாங்ளின் 11.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும், கபிலன் 17 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினார்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 38.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 38.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிறாங்கிளின் 16 ஓட்டங்களையும், சுபாநீசன் 18 ஓட்டங்களையும், தனுசன் 13 ஓட்டங்களையும், கபிலன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் நிலோஜன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும் லோகதீஸ்வர் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கானாமிர்தன் 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி ஓர் இலக்கையும் வீழ்த்தினார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 36.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிறாங்கிளின் 26 ஓட்டங்களையும், சுபநேசன் 15 ஓட்டங்களையும், கபிலன் 10 ஓட்டங்களையும், ஜெரிக்சன் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் நிலோஜன் 6.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 4 இலக்கினையும் கானாமிர்தன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3 இலக்கினையும், யோகதீஸ்வர் 13 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 7

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக் குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.
இதில் மாணவர்கள் அணி நடையில் ஈடுபடும் காட்சி இது. (த-21)

## மன்னார் லீக்கின் உதைபந்தாட்டம்

மன்னார், மார்ச் 7

மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் முதல் தர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆட்டங்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் இடம் பெறும் என்று லீக்கின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் 12 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன (த-23)

## அச்சுவேலி கதிர் ஒளியின் மென்பந்து சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 7

அச்சுவேலி கதிர் ஒளி றொக்கட் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டித் தொடர் சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. இதில் பங்கு கொள்ளவுள்ள கழகங்கள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## கிரிக்கெட் போட்டி



யாழ்ப்பாணம், மார்ச் 7

கொழும்புத்துறை மேற்கு 'ஜெற்லைனர்ஸ்' விளையாட்டுக் கழகம் நடத்தும் செல்லத்துரை டேமியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ். மாவட்ட ரீதியிலான மென்பந்து சுற்றுப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## தாச்சி விளையாட்டில் குழறுபடி என முறையீடு

வலி. வடக்கு மார் 07

தாச்சி விளையாட்டில் ஏற்பட்ட குழறுபடி தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நீதி கேட்டு முறைப்பாடு ஒன்று நேற்று மதியம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் சிந்து விளையாட்டுக் கழ்கத்தினால் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகத்துக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் சிந்து விளையாட்டுக் கழகத்தினால் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகத்துக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாடுவது எந்த அணி என்பது குறித்து எடுக்கப்பட்ட முடிவில் குழறுபடிகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுப் பிரதம விருந்தினர், ஏனைய விருந்தினர்கள் உட்பட அனைவரும் மைதானத்துக்கு சமூகம் கொடுத்த நிலையில் இறுதிப் போட்டியில் விளையாட மூன்று கழகங்கள் அழைக்கப்பட்டமையால் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து போட்டி ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் தற்போது இறுதிப்போட்டியில் யார் விளையாடுவது என்பது சம்பந்தமாக நீதி கேட்டு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (த-86)

## வேக நடைப் போட்டி அலுவலர்களாக ஏழு பேர்



ரி.சிவசோதி, மதியழகன், சிவச் செல்வன், பி.முருகவேள், ராதை அருளம்பலம், சி.சுரேந்தினி, எம்.சசிகுமார்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மெய்வன்மைச் சங்கங்களின் சம்மேளனத்தின் வேக நடைப் போட்டி உத்தியோத்தர்கள் குழாமைச் சேர்ந்த கோ தொங் பாங் என்பவரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடத்தப்பட்ட வேக நடைப் போட்டி அலுவலர்களுக்கான பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ரி. சிவசோதி, டானியல் மதியழகன், சிவச் செல்வன், பி. முருகவேள், செல்வி ராதை அருளம்பலம், சி. சுரேந்தினி, எம். சசிகுமார் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 7 இல் அமைந்துள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவன கேட்போர் கூடத் தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## யாழ். பிரதேச செயலக உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் 12 விளையாட்டுக் கழகங்கள் மோதவுள்ளன. (த-23)

## பருத்தித்துறை லீக்கின் கூட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# பாகிஸ்தான் அணியை ஆதரித்ததற்காக இந்திய மாணவர்களுக்குத் தண்டனை



இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின்போது பாகிஸ்தான் அணிக்கு ஆதரவாகக் கோஷங்களை எழுப்பினார்கள் என்ற குற்றச்சாட்டில் 60 மாணவர்களை வட இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகமொன்று இடைநிறுத்தியுள்ளது.

இந்த மாணவர்கள் ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என கூறப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழகமொன்றே குறித்த மாணவர்களை இடைநிறுத்தியுள்ளது. இந்த இடைநிறுத்தமானது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே முன்னெடுக்கப்பட்டதாகப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மன்சூர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்கள் பாகிஸ்தான் அணியின் வெற்றியைத் தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதன் காரணமாக, பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்கும் நோக்கில் அவர்களை மூன்று நாள்களுக்கு இடைநிறுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தாம் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, காஷ்மீரைச் சேர்ந்த பெற்றோர்கள் சிலர் இந்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (த)



கபில்தேவ்

# தோல்விக்காகப் பழிவாங்கவேண்டாம்

விளையாட்டில் தோல்வி என்பது சகஜம் தான். இதற்காக யாரையும் பழிவாங்கக்கூடாது எனக் கூறியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவரான கபில்தேவ்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இந்திய அணி அனுபவமில்லாத இளம் வீரர்களை கொண்டுள்ளது.

இதனால் வெளிநாடுகளில் வெற்றி பெறச் சிரமப்படுகிறது, அதிக நெருக்கடியால் முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியாமல் தவிக்கின்றனர். விளையாட்டில் வெற்றி, தோல்வி என்பது சகஜமானது. இதற்காக யாரையும் பழிவாங்க கூடாது. 2011 இல் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றபோது டோனியை வெகுவாகப் பாராட்டினார்கள். ஆனால் சமீபத்திய தோல்விகளால் டோனியை கடுமையாக விமர்சிக்கிறார்கள். போட்டியில் நெருக்கடியான சமயத்தில் டோனி எடுக்கும் முடிவுகளை, ரசிகர்களால் எடுத்து விட முடியாது. அன்று சிறந்த வீரராக தெரிந்த டோனி, இன்று நேர்மாறாக மாறிவிட்டாரா?

தற்போதைய வீரர்களில், யுவராஜ் போல சிறந்த வீரரைப் பார்க்க முடியாது, அப்படிப்பட்டவரை அணியில் சேர்க்காமல் இருக்கிறார்கள்.

1980 இல் இதுபோலத்தான் ஒரு சிலரை நம்பியே அணி இருந்ததால் வெற்றி கிடைக்காமல் போனது.


அதே தவறை இந்திய அணி நிர்வாகம் மீண்டும் ஒருமுறை செய்யக்கூடாது என்று தெரிவித்துள்ளார். (த)

# இந்தியா பின்னடைவு

தென்னாபிரிக்காவுடனான கடைசி டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றதால் 115 புள்ளிகளைப் பெற்று அந்த அணி டெஸ்ட் தரவரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இதனால் இரண்டாவது இடத்தில் இருந்த இந்திய அணி மூன்றாவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

வருடந்தோறும் ஏப்ரல் முதலாம் திகதி தரப்படுத்தலில் முன்னிலையில் இருக்கும் அணிக்கு ஐ.சி.சியால் பரிசுத்தொகை வழங்கப்படும். இதன்படி முதல் பரிசான 475,000 அமெரிக்க டொலரை தென்னாபிரிக்கா பெறும். இரண்டாமிடத்திலுள்ள ஆஸ்திரேலியா 370,000 அமெரிக்க டொலர்களையும், மூன்றாமிடத்திலுள்ள இந்திய அணி 265,000 அமெரிக்க டொலர்களையும் பரிசாகப் பெறவுள்ளன. அடுத்த வருடத்திலிருந்து இப் பரிசுத் தொகையை அதிகரிக்க ஐ.சி.சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. (த)



இரண்டாவது இடத்தில் இருந்த இந்திய அணி மூன்றாவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

# டோனியை மிஞ்சிய கோஹ்லி

இணையத்தளத்தில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்களில் அணித் தலைவர் டோனியை மிஞ்சியுள்ளார் விராட் கோஹ்லி.


கூகுள் நிறுவனம் இணையதளத்தில் கடந்த 30 நாள்களில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் யார் என்று ஆய்வு செய்தது.

இந்த ஆய்வின் முடிவில் இணையத்தளத்தில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி என்பது தெரிய வந்துள்ளது.

ஆசியக் கிண்ணப் போட்டியில் இருந்து டோனி கடைசி நேரத்தில் விலகியதும், கோஹ்லி அணித் தலைவராக சதம் அடித்ததும் தான் அவர் இணையத்தளத்தில் அதிக தேடப்படக் காரணம்.

இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவுக்கும், விராட் கோஹ்லிக்கும் காதல் மலர்ந்துள்ளது என்று அண்மைக் காலமாகக் கிசுகிசுக்கப்படுகிறது. இந்த காதல் விவகாரமும் கோஹ்லியை பலர்கூகுளில்தேடக்காரணம்.

ஐ.பி.எல் ஏலத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி யுவராஜ் சிங்கை ரூபா 14 கோடி கொடுத்து வாங்கியது.



இந் நிலையில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட மூன்றாவது இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் ஆவார். வீரேந்திர சேவாக் மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோர் கூகுளில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் 4 மற்றும் 5ஆவது இடங்களில் உள்ளனர்.

கடந்த ஆண்டு டோனியைக் காட்டிலும் கோஹ்லி அதிக விளம்பரங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# இந்தியாவில் தான் அதிக போட்டிகள்

7ஆவது பிரிமியர் தொடரின் 60 முதல 70 சதவீதப் போட்டிகள் இந்தியாவில் நடக்கும் என இதன் தலைவர் ரஞ்சிப் பிஸ்வால் தெரிவித்தார்.

இந்தியாவில் 20/20 போட்டியாக நடத்தப்படுவது பிரிமியர் கிரிக்கெட் தொடர். இதற்கான 7ஆவது தொடர் ஏப்ரல் 7இல் ஆரம்பித்து, ஜூன் 3ஆம் திகதி வரை நடக்கிறது. ஆனால், இந்த காலகட்டத்தில்தான் பொதுத் தேர்தலும் இடம்பெறவுள்ளது. எனவே, பிரிமியர் போட்டிக்குப் போதிய பாதுகாப்பு தரமுடியாது என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. இதையடுத்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என வேறு இடங்களில் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டது. தற்போது, பொதுத் தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளதால், பிரிமியர் தொடர் நடைபெறவுள்ள இடங்கள் எவை என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சீனிவாசன், துணைத்தலைவர் ராஜிவ் சுக்லா உள்ளிட்டோர் கூட்டத்தில் விவாதித்தனர். இதன் பின் பிரிமியர் தொடர் தலைவர் ரஞ்சிப் பிஸ்வால் கூறுகையில், பொதுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், 60 முதல் 70 சதவீத போட்டிகள் இந்தியாவில் நடக்கும். தவிர, வெளிநாட்டில் நடத்துவது குறித்தும் ஆலோசித்தோம். இருப்பினும், இறுதி முடிவு எடுக்க இன்னும் 2 நாள்கள் தேவை - என்றார்.

இந்தியக் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில்,வாக்கு எண்ணிக்கை மே 16 இல் நடக்க உள்ளது. இதன் பின் போட்டிகள் இங்கு நடத்தப்படலாம். தென்னாபிரிக்கா தொடர் முழுவதையும் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது-என்றார். (த)

07 MAR 2014
பொது சன நூலகம்

# தடுமாறி வென்றது இலங்கை


சில்வா

ஆசிய கிண்ண 10ஆவது லீக் போட்டியில் இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக் கிடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 3இலக்கு களால் போராடி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 09 இலக்குகளை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் சார்பில் அனமுல் ஹக் 49 ஓட்டங்களையும் சம்சுர் ரஹ்மான் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் சுரங்க லக்மால், அஜந்த மென்டிஸ், பிரியஞ்சன மற்றும் பெரேரா ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

205 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கிய இலங்கை அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர் பங்களாதேஷ் அணியினர் .முதல்3 பந்துப்பரிமாற்றங்களில் 6 ஓட்டங்களுக்கு முக்கிய 3 இலக்குகளை இழந்து தடுமாறியது இலங்கை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான குசல் பெரேரா ஓட்டம் எதனையும் பெறாமலும், கடந்த போட்டிகளில் அசத்திய சங்ககார 2ஓட்டங்களுடனும் மஹேல ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்து வெளியேறினர். இருந்த போதும் திரிமன்னே மத்தியூஸ், டி சில்வா ஆகியோரின்ஆட்டம் கை கொடுக்க 49 பந்துப்பரிமாற்றத்தில் 7 இலக்கு களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று3 இலக் குகளால் வெற்றி பெற்றது இலங்கை. அவ் வணி சார்பாக மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களையும் டிசில்வா 44 ஓட்டங்களையும் திரிமன்னே 33 ஓட்டங்களையும் பெற்றனர் .பங்களாதேஷின் பந்துவீச்சில் அல் அமீன் கோஷைன் 2 இலக்குகளையும் ரகீம், அரபாத் சன்னி முகமதுல்லா ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். இப்போட் டியின் ஆட்ட நாயகனாக மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார். (400)


பந்தை விரட்டும் மத்தியூஸ்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கருத்தரங்குகள்
இலங்கை வங்கி முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கானது
ஆரம்பம் சனி (8/3)
சனி, ஞாயிறு காலை 9.00 தொடக்கம் 4.00 மணி வரை
கமநல திணைக்களத்தின்
* விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்
* முகாமைத்துவ உதவியாளர்
ஞாயிறு 1.00 மணி
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள்பிரிவு
யாழ்.நகர்
075 4164564

Soft View Computer Center
வேகமாகவும் குறைந்த கட்டணத்துடன் நீங்கள் விரும்பிய நேரத்தின்படி Advance Diploma கற்கை நெறிகள் தினமும் நான்கு மணிநேர பயிற்சி நெறிகள் Ms Office, DTP, Graphic Designing, Web Design (3 வாரத்தில்) Java, C/C++,C, Web Development (6 வாரத்தில்) சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
102 Main Street,Jaffna (Head Office)
2St Floor 74 1/1 Kannathiddy Softlogic முன்பாக
0779053545, 021 222 4885

FRENCH LANGUAGE CENTRE
FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி...
Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் இலுப்பையடி, நெல்லியடியில் மட்டுமே..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்.......
ஆரம்பம்: 08.03.14 8.30am No. 40, Palaly Road, Jaffna. (இலுப்பையடி).
ஆரம்பம்: 11.03.14 at 11am No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456


பாடசாலை விடுமுறைக் கால
தென்னிந்திய யாத்திரை
நாள்கள் -12 யாத்திரிகர் - 10
ஆரம்பம்: 06.04.2014 To 17.04.2014
தரிசிக்கும் இடங்கள்: உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரெங்கம், திருவானைக்கா, சமயபுரம், திருப் பதி, பஞ்சபூதத் திருத்தலங்கள், சிதம்பரம் உட்பட மேல்மருவத்தூர், 9 நவக்கிரக ஆலயங்கள், திருச்செந்தூர் உட்பட ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், தஞ்சாவூர், பொற்கோயில், சரஸ்வதி கோயில், பிரம்மா கோயில், நவபாஷாணம் மதுரை மீனாட்சி உட்பட 40 இக்கும் அதிகமான ஆலயங்களை தரிசிப்பதுடன், வரதப்பாளையம், கல்கி பகவானிடமும் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
பதிவுகளுக்கு முந்துங்கள்
(சி/12610) (10.6)
விவரங்களுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் T.P: 0777 680 102




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.